புலவர்மணி

# ஷரிபுத்தீன் செய்த தமிழ்

புலவர்மணி ஆ. மு. ஷரீபுத்தீன்

வெளியீடு
உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - 2002
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Acc. No :- 125
Class No :-
Date :- 23-10-2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

محمد فائق بن فريد
الجامعة النظيمية الإسلامية
بيرولا
سريلانكا

புலவர்மணி

# ஷரிபுத்தீன் செய்த தமிழ்

புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன்

துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பற்றுறை அமைச்சு – கிழக்கு
அபிவிருத்தி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு,
இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன்
2002. 10. 22, 23, 24 ஆகிய திகதிகளில் கொழும்பில் நடாத்திய
உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி ஷரிபுத்தீன் செய்த தமிழ்

ஆக்கியோன் : புலவர் மணி ஆ. மு. ஷரிபுத்தீன்

1ம் பதிப்பு : 15. 09. 2002

பதிப்புரிமை : முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

கணனி வடிவமைப்பு : யோகாம்பிகை குமாரசாமி

அச்சகம் : ஏ. ஜே. பிறின்ட்ஸ்
புகையிரத வீதி , தெஹிவளை,
ஸ்ரீலங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களின் விபரம்

1. நபிமொழி நாற்பது
2. நலவியல் நாற்பது
3. நபிமொழி நானாற்பது
4. புனித ரமழான் சிந்தனைகள்
5. மணமங்கலமாலை
6. தௌபா மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பற்றுறை அமைச்சு கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் அமைச்சு, இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன் மாண்புமிகு அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களின் பணிப்பின் பேரில் 2002 ஒக்டோபர் மாதம் 22, 23, 24ம் திகதிகளில் நடத்தும் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடப்படுகின்ற நூல்களில் இதுவும் ஒன்று.

பதிப்பிக்கப்படாமல் சிதைவுறு நிலையிலுள்ளவையும், பிரதிகள் பெற இயலா நிலையிலுள்ளவையுமான நம்முன்னோரால் ஆக்கப் பெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களை மறுபதிப்புச் செய்வது என்ற மாநாட்டு நோக்கத்தின் அடிப்படையில், புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களின் பிரசுரங்காணாத சில படைப்புக்களையும், ஏற்கனவே பதிப்பிக்கப்பட்டு இலங்கை சாகித்ய மண்டலத்தால் பரிசு பெற்று இன்று பிரதிகள் பெறப்பட முடியாதுள்ள நபிமொழி நாற்பது என்னும் நூலையும் தொகுத்து ஒரு தனி நூலாய் புலவர்மணி ஷரிபுத்தீன் செய்த தமிழ் என்னும் தலைப்பில் வெளியிட மாநாட்டுக்குழு தீர்மானித்து இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

**ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**
(தலைவர் மாநாட்டு அமைப்புக்குழு)

**அஷ்ரப் சிஹாப்தீன்**
(மாநாட்டுப் பொதுச் செயலாளர்)

**தாஸிம் அகமது**
(மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிமொழி நாற்பது

மூலமும் உரையும்

புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சமர்ப்பணம்.............*

*வல்லான் கருணை வழங்கத் தெளிவுளத்து*
*நல்லா னெனுநிலைமை நல்கவுயர் – கல்வியருள்*
*பெற்றதாய் பாத்திமா பேராதந் தாதைக்கும்*
*முற்றுஞ் சமர்ப்பணமிந் நூல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை.....

"எனது உம்மத்துக்களில் யார் நமது மார்க்க சம்பந்தமான எனது வாக்கியங்களில் நாற்பதை மனனஞ் செய்து கொள்வாரோ அவருக்கு நான் மறுமை நாளில் மன்றாடுவேன்" என நபிகள் திலகம் (ஸல்) கூறினார்கள்.

வசனங்களை மனனஞ் செய்து ஞாபகத்தில் வைத்திருப்பதைப் பார்க்கிலும், பாடல்களை மனனஞ் செய்து நீண்ட காலத்திற்கு ஞாபகம் வைத்துக் கொள்வது இலகுவானது. மாணாக்கரும் இலகுவில் மனனஞ் செய்யத் தக்க வெண்பா யாப்பு முறையில் என் கவிதைகளை அமைக்கலானேன். வாழ்க்கையில் கடைப்பிடிக்கத் தக்கதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹதீது கிரந்தங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட நாற்பது நபிமொழிகள் வெண்பாக்களுக்கு ஏற்ற பொருளாகத் தெரிவு செய்யப்பட்டுள.

"யார் தனது மரணத்திற்குப் பின் எனது வாக்கியங்களில் நாற்பதை நிலைநிறுத்தி வருகிறாரோ அவர் சொர்க்கப் பூங்காவில் எனது கூட்டாளியாயிருப்பார்" என்பது நபிகளின் பொன்மொழி. இதற்கிணங்க, நான் அறிந்த நபிமொழிகளுள் இந்நாற்பதையேனும் கவிதை ரூபத்தில் இயற்ற வேண்டுமென அவாவினேன். என் அவாவினைக் காரிய சாதனையாக்கும் முயற்சியில் இறங்கினேன். அப்பொழுது துணிவை நிலைப்படுத்தியமைக்கு இறை கடாட்சமும், நபிகளின் ஆசீர்வாதமுந்தான் காரணமென்பேன். பரந்துபட்ட நபிமொழிக் கிரந்தங்களைத் தேடிக்கற்கும் விருப்பும், வாய்ப்பும் பெறாத நம்மவர், வாழ்க்கைக்குப் பெரிதும் உதவக்கூடிய இந்நூலைக் கற்றுப் பயனடைவார்களாக. நபிமொழி மாண்பினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிய விரும்பும் முஸ்லிமல்லாதவரும் இந்நூலாற் பெரும் பயனடைவர் எனவும் எண்ணுகிறேன்.

பாடசாலை மாணாக்கரை மனதிற் கொண்டு, நபிமொழிப் பொருள் பொதிந்த வெண்பாக்களுக்கு பொருளுரையும், விளக்கக் குறிப்புகளும் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. இந்நூலினை ஆசிரியர் மாணாக்கருக்குக் கற்பிப்பதனால். தமிழ் இலக்கியம் கற்பிப்பதோடு, ஓரளவு மார்க்க ஞானத்தையும் ஊட்டி மார்க்கப் பணிபுரிந்த பயனையும் அடைவர். இஸ்லாமிய ஆசிரிய உலகம், சமுதாய நலன் கருதி இதனை ஓர் இலக்கிய நூலாகக் கற்பித்தால், என் முயற்சி உண்மையில் முழுத்துவப் பயனடைந்ததாகக் கருதுவேன்.

என் மூலக் கவிதைகளை வாசித்து, உற்சாக மொழிகளும், ஆலோசனைகளும் கூறி எனக்கு உபகாரியாயிருந்த புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையவர்களுக்கு நான் மிகவும் கடப்பாடுடையேன். இது மனித முயற்சி. எனவே, தவறுகளும் குறைபாடுகளும் காணப்படலாம். அவற்றைக் காணும் அறிஞர்கள் எனக்கு அறியத் தருவார்களேயானால், அவற்றை நன்றியோடு அடுத்த பதிப்பிலே திருத்த முயல்வேன். அணிந்துரை, வாழ்த்துரை, சிறப்புரை தந்துதவிய பெரியோர்களுக்கும் என் நன்றிகள்.

வஸ்ஸலாம்

**மருதமுனை** **ஆ. மு. ஷரிபுத்தீன்**
**கல்முனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை.....

### புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
### அவர்கள் அருளியது

அகில உலகிற்கும் ஆன்மீக வாழ்வும்
இகவாழ்வும் நல்கும் இனிய - புகலாகும்
நம்பிநபி நாயகனார் நன்மொழிக ளம்மொழிகள்
நம்பினார் சேர்வார் நலம்.

ஒன்றேபோ லொன்றிங் குயர்நா யகமொழிகள்
நன்றாய்ந்து நாற்பது நன்மொழியை - என்றும்
உளங்களிக்க வெண்பாவா லோதுவார்க் கீந்தான்
தெளிந்த மனச்சரிபுத் தீன்.

ஆசார்க்கு ளாசான் அழகுதமிழ் சீரறபு
தேசார் இருகண்ணாச் சிந்திப்போன் - தேசீயக்
கல்விவட் டாரவதி காரி சரிபுத்தீன்
சொல்கவியோ டொன்றானேன் துய்த்து.

நன்மனமும் நன்மொழியும் நன்னடையுஞ் சேர்க்குமே
நன்மைபல நாடோறும் நல்குமே - நன்மைத்
திருவருளும் நாயகனார் செம்பொருள்கொண் டன்பன்
சரிபுத்தீன் செய்த தமிழ்.

உலக நடைசேர்க்கும் உண்மையொளி யூட்டும்
கலகமகல் சாந்திநிலை காட்டும் - உலகை
ஒருகுடும்ப மாக்கும் உணர்ந்துசரி புத்தீன்
தருமினிய வெண்பாத் தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புரை.....

**அல்ஹாஜ் S. அஹமது**

தலைமையாசிரியர் அவர்கள் தந்தது

அல்ஹாஜ் ஷரிபுத்தீன் ஆக்கும் ஹதீஸ்வெண்பா
நல்வாழ்வு தேடுபவர் நாவினிலே - தொல்வேத
முத்தாய் மிளிர்ந்திடுமே மூதறிவு மீந்திடுமே
பக்தா விரும்பிப் படி.

நாற்பதிலே நாயகமாம் நம்பெருமான் நன்மொழியில்
நாற்பதினைத் தேர்ந்துரைத்த நற்றமிழின் - யாப்பதிலே
அன்பும் அறமும் அகீதாவும் சிந்தனையும்
பண்பும் பலவு முள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புரை.....

### மௌலவி S. M. S. முஸ்தபா மௌலானா
### அவர்கள் வழங்கியது

தண்டமிழ்தே ராசான் தகைகூர் ஷரிபுத்தீன்
வண்டமிழால் வெண்பா வகுத்தளித்தான் - கண்டின்
நபிமொழிகள் நாற்பதினை நன்றாய்ந்து தொன்மைப்
புவிபொலிய வென்றே புகல்.

பாலும் பழமும் பசுந்தேனுஞ் சர்க்கரையும்
நாலுங் கலந்த நறும்பாகு - போலும்
ஒருமித்து நாயகர்தா மோதுமொழி கொண்டு
ஷரிபுத்துனி சொன்ன கவி.

நல்லறிவு சேருமே நற்பண்பு கூருமே
புல்லறிவு போக்கிப் புனிதராய் - சொல்லவரும்
நாயகனார் நன்மொழிகள் நாடிப் பயில்வதனால்
தூயவன்றன் னல்லருளு முண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை.....

**பண்டிதர், வித்துவான் வீ. சி. கந்தையா B. O. L.**

அவர்கள் அளித்தது.

செம்மை மனஞ்சான்ற சீரால் அருள்வளர்க்கும்
தன்மை நலமதனாற் தண்ணளியால் - பொன்னின்
குணத்தா லிறைமொழிகள் கூர்த்தமனம் ஆய
தனத்தாற் பழியணுகா தான்.

நற்கவிதை வெண்பா நபிமொழிகள் நாற்பதையும்
அற்புதமா யிங்களித்த அண்ணலொரு - பொற்பின்
ஷரிபுத்தீ னென்றெவருஞ் சாற்றும் புகழ்நிறைந்த
ஒருவன் அவன்வாழ்க ஈங்கு.

நபிமொழியால் நல்லுலகம் ஞான ஒளியாம்
புவியில் நிறைந்தின்பம் பூக்கும் - தவமாரும்
நன்மை வளர்ந்தோங்கி நாளும் சிறந்தெங்கும்
அன்பு மயமாம் அறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிமொழி நாற்பது

## காப்பு

புவிமுழு தேத்து மொருவனை நினைந்து
நபிமொழி வெண்பா நாற்பதும் மொழிவாம்.

## நூல்

1. நபிமொழி :

எண்ணங்களுக்குத் தக்கதாகவே செயலின் பயனுண்டு.

- புகாரி

### நினைவுக்கேற்ற பயனுண்டு

*செய்யும் வினைப்பயனைச் சீர்தூக்கி னுள்ளங்கொள்*
*நிய்யத் ததனுறுதி நீர்மையதா — யெய்துங்காண்*
*நன்மருந் தீதென்னும் நம்பிக்கை நோயதனை*
*யின்மையதாய்ச் செய்வ தியல்பு.*

பொருள் :

செய்யும் வினைப்பயனைச் சீர்தூக்கின் - நாம் செய்கின்ற எந்தச் செயலினதும் முடிவான பயனை ஆராய்ந்து பார்த்தால், உள்ளம் கொள் - நமது இருதயத்திலே அது பற்றிக் கொண்டுள்ள, நிய்யத்து அதன் உறுதி நீர்மையதாய் - எண்ணத்தின் உறுதிப்பாட்டுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கதாகவே, எய்தும் காண்- அது அமைந்திருக்க்க காண்பாய், (உதாரணமாக) ஈது நல்மருந்து என்னும் நம்பிக்கை - ''வைத்தியன் தந்த இந்த மருந்து நல்லது'' என்ற நம்பிக்கை தானே, நோயதனை இன்மையதாய்ச் செய்வது இயல்பு - நமக்குள்ள நோயைத் தீர்த்து வைப்பதற்கு மூலமாக அமைவது இயல்பாகும்.

**விளக்கக்குறிப்பு :**

எவ்வளவு சிறந்த மருந்தானாலும் உள்ளத்தின் உறுதிப்பாடும், அதன் மீது நம்பிக்கையும் இல்லாத போது அது அந்நோயைத் தீர்ப்பது அசாத்தியம். வைத்தியனில் நம்பிக்கையும், மருந்தில் உவப்பும் உறும் பட்சத்தில் அற்ப ஒரு மருந்து அபாரமான ஒரு நோயையும் வெகு விரைவிலும் இலகுவிலும் தீர்த்து வைக்கும். ''வெற்றி காண்பேன்'' என்ற உறுதிப்பாட்டுடன் ஆரம்பிக்கும் (நல்ல) செயல் வெற்றியைத் தருவதும், நம்பிக்கை யிழந்த நிலைமையில் ஆரம்பிக்கும் செயல் முடிவுறாது சிதைந்து போவதும் விரயமாவதும் கண்கூடு. இடையூறுகள் பல ஏற்பட்டாலும் மனவுறுதி காரணமாக அவ்விடையூறுகளெல்லாம் மேற் கொள்ளப்பட்டு செய்த் தொடங்கிய கருமங்கள் இனிதே முடிவடைவது சகசம்.

''மனம்போல் வாழ்வு '' என்பது பழமொழி

நிய்யத்து - எண்ணம், நம்பிக்கை, மனவுறுதி எனப் பொருள்படும். அரபிப்பதம். சீர்தூக்கல் - ஆராய்நது பார்த்தல், நீர்மை - தன்மை.

**2. நபிமொழி :**

**(அ) கல்வி கற்றுக் கொள்வது ஒவ்வொரு ஆணின் மீதும் பெண்ணின் மீதும் கடமையாயிருக்கிறது.**

**(ஆ) சீனா தேசம் சென்றாயினும் கல்வியைத் தேடிக் கொள்.**

**- புகாரி**

## கற்கை நன்றே

***கல்வி தனையொருவன் கற்றல் கடனாகும்***
***மெல்லிய லார்க்கு மதுவிதியே — கல்விதனைச்***
***சீன வளநாடு சென்றேனுங் கண்டடைய***
***வேணும் மதிக்கோர் விளக்கு.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் :

ஒருவன் கல்விதனைக் கற்றல் கடனாகும் - ஒவ்வோர் ஆண் மகனும் கல்வியைத் தேடிக் கற்பது அவன் மீது கடமையாகும், மெல்லியலார்க்கும் அது விதியே - பெண்களுக்கும் அதுவே விதியாகும், கல்விதனைச் சீனவள நாடு சென்றேனும் கண்டடைய வேணும் - கல்வியைச் சீனாதேசம் சென்றாயினும் தேடிக் கற்றல் வேண்டும், மதிக்கு ஓர் விளக்கு - (கல்வி) மக்களின் புத்தியை விளங்கச் செய்யும் ஒப்பற்ற விளக்காக அமையும்.

விளக்கக்குறிப்பு :

அறபு நாட்டுக்கு வெகு தொலைவிலுள்ளது சீன வள நாடு. அன்று நதிக்கரை நாகரிகம் அடைந்த நாடுகளில் அதுவுமொன்று. அங்கு கல்வியும் நாகரிகமும் வளர்ச்சி யுற்றிருந்தன. அங்கு சென்று கற்பது அன்று வெகு சிரமமான காரியம். கஷ்டப்பட்டும் கல்வியைத் தேடிக் கற்றல் வேண்டுமென்பது கருத்து. இறைவன் இயல்பாக அமைந்துள்ள மதியைக் கல்வி துலக்கி விளங்க வைக்கும். அது விதி என்பது கற்றல் கடன் என்பதாம். இக்கவியில் இரண்டு நபிமொழிகள் இணைக்கப்பட்டுள்ளன.

*“நீங்கள் அறியாதவர்களாயிருந்தால் அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.*

-குர்ஆன்

கல்வி மதியை விளங்க வைத்து, மனிதனை மனிதனாக வாழவைத்து, இறைவனின் அருளை இருமையிலும் அருள வைத்து உந்நத பதவியையும் அளிக்க வல்லது.

மெல்லியலார் - மென்மைத் தன்மையுடையவர்கள் பெண்கள். கடன் - பறுலு

3. நபிமொழி :

**ஒருவருக்குத் தெரிந்த ஒரு கலையைத் தெரிந்து கொள்வதற்காக அவரிடம் கேட்கப்படும் போது அவர் அதை மறைத்து விடுவாராயின் கியாம நாளில் அவருக்கு நெருப்பினாற் கடிவாளமிடப்படும்.**

**- அஹமத். அபூ தாவூ த். திர்மதி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியை மறுக்காதே

*தேடும் ஒருவற்குத் தேர்ந்தகலை யானறியே*
*னோடுகெனக் கூறு முலோபிதான் — கூடிவரும்*
*அந்தநா ளங்கிக் கடிவாளம் பூண்டுவாய்*
*வெந்தழிவா னென்றே விளம்பு.*

**பொருள் :**

தேடும் ஒருவருக்கு - கற்கும் நோக்கத்துடன் தன்னைத் தேடி வந்த ஒருவனுக்கு, தேர்ந்த கலை - தான் அறிந்து தெரிந்திருக்கும் ஒரு கலையை, யான் அறியேன் ஓடுக எனக் கூறும் உலோபிதான் - ''எனக்குத் தெரியாது சென்று விடுக'' எனக் கூறியனுப்பி விடும் உலோபியாகிய அவ்வறிஞனானவன், கூடிவரும் அந்த நாள் - சர்வ உயிர்களும் உயிர்த்தெழுந்து ஒன்று கூடுகின்ற மறுமை நாளிலே, அங்கிக் கடிவாளம் பூண்டு - நெருப்பினாலாகிய கடிவாளம் பூட்டப் பட்டு, வாய் வெந்து - அதனால் வாயானது வெந்து போக, அழிவான என்றே விளம்பு - கதியழிந்து படுவான் என்று கூறுவாயாக.

**விளக்கக் குறிப்பு :**

தெரிந்த கல்வியைத் தேடி வருபவனுக்குத் தெரிவிக்காமல் மறைத்து வைப்பது பாவமாகும். கடிவாளம் குதிரைக்கு வாயிலிடப்படும் இரும்பு. சொல்லிக் கொடுக்க மறுத்த வாய்க்கு நெருப்புக் கடிவாளமிடப்படும். கல்வியைத் தேடிக்கற்க வேண்டுமென்பது விதி. தேடும் ஒருவன் - கற்பதற்காகத் தேடி வருபவன், உலோபி - ஈயாதநவன், இங்கு தன்னிடமுள்ள கலைச் செல்வத்தை ஈயாதவன்.

ஓடுக + என = ஓடுகென புணர்ச்சி விகாரம்; ஓடுக என்றதனால் தனக்குத் தெரிந்த கலையை எவ்வாறு மறைத்துக் கொண்டான் என்பது தெரியவரும். நரக வாசிகளுக்கே அங்கிக் கடிவாள மிடப்படும். ஆகவே, தனக்குத் தெரிந்ததைக் கேட்டும், தெரிவிக்காதவன் நரக வாசி என்பது புலனாகும். மறுமை நாளில் உலகம் தோன்றிய நாள் முதல் பிறந்திறந்த சகல உயிர்களும் உயிர்த் தெழுந்து ஒன்று கூடும். அதனால் அந்நாள் கூடிவரும் நாள் எனப்பட்டது. அன்றுதான் சகல உயிர்களும் இவ்வுலகிற் செய்த நன்மை தீமைகளுக்கு ஏற்ற சன்மானம் வழங்கப்படும் நியாயத் தீர்ப்பு நாளுமாகும்.

அங்கி - நெருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நபிமொழி :

நிச்சயமாக ஒரு விசுவாசியின் மரணத்துக்குப் பின் அவனுடைய செயலினின்றும், நற்காரியங்களினின்றும் அவன் பாற் சென்றடைபவையாவன

(அ) அவன் கற்றுப் பரப்பிய கல்வி.

(ஆ) அவன் விட்டுச் செல்லும் ஒரு நற் சந்ததி.

(இ) அவன் தன்பிற் சந்ததியார் சுதந்தரிக்கச் செய்யும் ஒரு (குர்ஆன் போன்ற) நூல்.

(ஈ) அவன் நிருமாணித்த ஒரு பள்ளிவாசல்.

(உ) வழிப்போக்கருக்கென அவன் கட்டிய ஒரு சத்திரம்.

(ஊ) அவன் வெட்டி ஓட்டுவித்த ஒரு தண்ணீர்க் கால்வாய்.

(எ) தான் உடல் நலத்தோ டிருக்குங்கால் தனது ஆயுட்காலத்தில் தனது செல்வத்தினின்று அவன் செய்த ஒரு தருமம்.

- இப்னுமாஜா பைஹகி.

## போவாரோடு போவன ஏழு

*ஓதுவித்த கல்வி யுயர்சந் ததிநன்னூல்*
*ஆதி யிறைபள்ளி யாதுலரில் — போதுநீர்க்*
*கால்வாய் செழுநிதியாற் கண்டவற மிவ்வேழும்*
*போவார்பின் கூடப் புகும்.*

பொருள் :

ஓதுவித்த கல்வி - தான் பிறருக்குக் கற்பித்த கல்வியும், உயர்சந்ததி - உயர்ந்த இலட்சியமுள்ள ஒரு சற்புத்திரனும், நன்னூல் - நல்ல (அறங் கூறும்) ஒரு நூலும், ஆதி இறைபள்ளி - ஆதியாகிய இறைவனைத் தொழுதற்குரிய இடமாகிய ஒரு பள்ளிவாசலும், ஆதுலர் இல் - ஏழைகள் தங்கும் ஒரு சத்திரமும், போதும் நீர்க்கால்வாய் - மக்கள் தேவைக்குப் போதுமான நீர் ஓடக்கூடிய ஓர் வாய்க்காலும், செழுநிதியால் கண்ட அறம் - தனது திரண்ட செல்வங் கொண்டு செய்த தருமமும், இவ்வேழும் - ஆகிய இவ்வேழு கருமங்களும், போவோர் பின் கூடப்புகும் - இறந்து போனவரின் ஆத்துமாவுடன் கூடச் செல்லுவனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு :**

கற்பித்த கல்வி தன்னாற் கற்பிக்கப்பட்ட வருக்கு மாத்திரமன்றி மேலும் அவராற் கற்பிக்கப்படுவோருக்கும் அதன் மேலும் பரந்து பயன்படச் சகல பயனும் முன்னவனிடத்து வந்தடையும். நல்ல இலட்சியமும் ஒழுக்கமுமுள்ள மைந்தனின் செயலால் ஆகும் நல்ல பேறுகள் தந்தையின் பாலும் வந்து சேரும். தன்னால் ஆக்கப்பட்ட நீதிநூல் கற்கப்படும் போதெல்லாம் அதன் பயன் ஆக்கியோனை வந்தடையும். பள்ளிவாசல் தொழுகைக்கு உபயோகப்படுத்தப்படும் போதெல்லாம் ஆக்கியோனைப்பயன் வந்தடைந்து கொண்டேயிருக்கும். சத்திரம் ஏழைகளால் உபயோகிக்கப்படும் காலமெல்லாம் அதன் பயன் ஆக்கியோனை அடைந்து கொண்டிருக்கும். நீர்க்கால்வாய் நீருதவும் நாளெல்லாம் அதன் பயன் செய்தானைச் சென்றடையும். நியாயமான உழைப்பிலிருந்து கொடுத்த தருமம் அது பயன்படும் வரை உடையானைப் பயனும் சென்றடையும். ஆகவே, இவ்வேழு கைங்கரியங்களும் அபிவிருத்தியடைந்து எல்லையில்லாத நன்மை பயந்து உடையானைத் தொடர்ந்து செல்லுவனவாம். மனிதன் இவற்றுள் ஒன்றேனும் பலவேனும் வாழ்க்கையில் செய்து வைத்து இறக்க வேண்டும். நிச்சயமாக இவை ஆத்தும ஈடேற்றத்துக்கு உறுதுணை பயப்பனவாம். இதனால் தெரிந்ததைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதும், பிள்ளைகளுக்குக் கல்வியும் ஒழுக்கமும் கட்டாயம் கற்பிக்க வேண்டுமென்பதும், அறங்கூறும் நூல்களை ஆக்கும் திறம்படைத்தோர் எதிர்கால சந்ததியினருக்கு உபயோகப்படக் கூடியதாக் இயன்ற வரை நூல்களை ஆக்கித்தர வேண்டுமென்பதும், தனக்கு அருளப்பட்ட செல்வகொண்டு வணக்க ஸ்தலங்கள், சத்திரங்கள், நீர்நிலைகள், ஏழை சகாயங்கள் செய்து வைக்க வேண்டுமென்பதும் புலனாகும். கண்ட அறம் என்பதனால் தானேதன் பொருளை ஈதல் வேண்டுமென்பது பெற்றாம். போவார் இவ்வுலக வாழ்வை ஒழித்து இறந்து போவோர், ஆதியிறை - ஆதியாகிய இறை என விரியும் பண்புத்தொகை.

ஆதுலர் - ஏழைகள்.

**5. நபிமொழி :**

தருமம் ஆபத்துக்களைத் தடுத்து விடும் விதியையும் தடுக்கும்

- புகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருமம் தலைகாக்கும்

*தரும மொருவற்குத் தன்வினையா லீங்கு*
*வருமவதி மாற்று மருந்தாம் — அரிய*
*விதிவலியால் வந்து விளைதுன்பம் போக்கும்*
*அதிவலிமை வாய்ந்த தது.*

பொருள் :

தருமம் - ஈகையானது, ஒருவற்கு - ஒருவனுக்கு தன்வினையால் - தனது தப்புக் காரணமாக, ஈங்கு வரும் அவதி - இவ்வுலகில் ஏற்படும் ஆபத்துக்களை, மாற்றும் மருந்தாம் - மாற்றிவிடுதற்கு ஏற்ற மருந்தாக அமையும். அது - அவ்வீகை தானே, அரிய விதிவலியால் வந்து - எவ்வித சக்தியாலும் மாற்றுவதற்கு அரிதான ஊழ் வினையாக வந்து, விளை துன்பம் போக்கும் - ஒன்று பலவாக விளைகின்ற துன்பத்தினையும் போக்கி விடக்கூடிய, அதி வலிமை வாய்ந்தது - அதிக வலிமை பொருந்தியதுமாகும்.

**விளக்கக் குறிப்பு :**

தனது தவறு காரணமாக ஏற்படவிருந்த பெரிய ஆபத்தினைத் தான் செய்த தருமம் இடை நின்று அஃதேற்படாமற் தடுத்துவிடும். எனவே தன் செயலாலன்றிப் பிறர் சதியால் சம்பவிக்க விருந்த ஆபத்துக்களையும் தடுக்குமென்பது அவாய்நிலையாற் பெற்றாம். 'ஆர் செய்த புண்ணியமோ தப்பித்துக் கொண்டான்' என்று சொல்ல நாம் பலதடவைகளில் கேட்டிருக்கிறோம். விதிப் பயனாம் துன்பத்தையும் தருமம் தவிர்க்குமெனின் தருமத்தின் அபார சக்தி சிந்தித் துணரற்பாலது. விளை துன்பம் வினைத்தொகை, போக்கும் என்றதனால் - முற்றிலும் போக்குவதும், இலேசாக்குவதும் அமையும் . விதியை மாற்றுவது அரிது ஆதலின் அரிய எனப்பட்டது.

வினை- செயல் , அவதி - ஆகத்து.

6. **நபிமொழி :**

**எனது ஆவி எவன் வசத்திலுள்ளதோ அவன் மீது பிரமாணமாகத் தனக்கு நல்லதெனக் கருதும் ஒரு பொருளைத் தனது சகோதரனுக்காகவும் விரும்பாத வரையில் ஒருவன் உண்மையான முஸ்லிமாயிருக்க முடியாது.**

**- திர்மதி. இப்னுமாஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னைப்போல் பிறரையும் நேசி

*தனக்குகந்த வொண்பொருளே தன்சோ தரற்கும்*
*மனக்குகந்த தென்று மதியான் — எனக்குகந்த*
*உண்மை முசிலிமென வோரப் படானென்றார்*
*பெண்ணுரிமை தந்த பிரான்.*

**பொருள் :**

பெண் உரிமை தந்த பிரான் - பெண்ணினத்துக்கு அன்று மறுக்கப்பட்டிருந்த சகல உரிமைகளையும் வழங்கிய நபிகள் பிரான், தனக்கு உகந்த ஒண்பொருளே - தனக்கு நல்லது எனக் காணும் சிறந்த பொருள் ஒன்றனையே, தன் சோதரற்கும் - தனது சகோதரனுக்கும், மனக்கு உகந்தது என்று மதியான் - மனதுக்கு உவப்பானதாகும் எனக் கருதாத ஒருவன், எனக்கு உகந்த உண்மை முசிலிம் என - என்னால் விரும்பப் படக்கூடிய உண்மையான ஒரு முஸ்லிமாக, ஓரப் படான் என்றார் - எண்ணப்படமாட்டான் என்றார்.

**விளக்கக் குறிப்பு :**

பெண்ணுரிமை தரல் - நபிகளுக்கு முன் பெண்கள் ஒரு போகப் பொருளாக மட்டுமே எண்ணப்பட்டார்கள். பெண் குழந்தைகளை உயிருடன் வாழ விட்டு வைப்பது அவமானம் எனக் கருதி அவர்களை உயிருடன் புதைத்தார்கள் அம்மறமாக்கள். அந்நிலையில் பெண்களும் மனித இனம், அவர்களுக்கும் மனிதருக்குமுள்ள சகல உரிமைகளும் ஆண்களுக்குப்போல் உண்டு என உபதேசித்து பெண்களுக்கு விடுதலையளித்தார்கள்.

தனக்கு நல்லதெனக் கண்டதைத் தனக்கென வைத்துக் கொள்வதும் அல்லாததை மற்றவர்களுக்கென ஒதுக்குவதும் மனித இயல்பு, அது சகோரத்துவம், சமத்துவம் என்ற பண்புகளுக்கு உகந்ததாக ஆகாது. முஸ்லிம்கள் யாவரும் சமம். ஒருவருக்கொருவர் சகோதரர்களே - தன் சகோதரனைத் தன்னைப் போல நேசிக்காதவன் உண்மை முஸ்லிமாக இருக்க முடியாது.

மனம் + கு = மனக்கு - மனதுக்கு, ஒரு பொருள் - சிறந்த பொருள். ஓர - எண்ண.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நபிமொழி :

தன்னுடைய பாக்கியம் தாராளமாகப்கப்பட வேண்டுமென்றும், தன்னுடைய வாழ்நாளின் தவணை தாமதிக்கப்பட வேண்டுமென்றும் விரும்பும் ஒருவன் தனது இரத்தக் கலப்புடையாருக்கு உதவி புரிவானாக.

- புகாரி

## சுற்றம் தழுவு

*தாராள மாகத் தனம்பெருகத் தன்வாழ்நாள்*
*ஏராள மாக விருக்கவெனில் — நேராய்*
*இரத்தக் கலப்புடையா ரின்னல்தீர்த் தென்றும்*
*புரக்கக் கடனாம் பொருள்.*

பொருள் :

தாராளமாகத் தனம் பெருக - வேண்டிய அளவு தனது செல்வம் பெருகவும், தன் வாழ்நாள் ஏராளமாக இருக்க எனில் - தனது வாழ்வின் நாள் அதிகரிக்கவும் வேண்டும் என ஒருவன் விரும்பு-வானானால், ஆம் பொருள் - தன்னிடத்துள்ள பொருளைக் கொண்டு, நேராய் இரத்தக் கலப்புடையார் இன்னல் தீர்த்து - நேரடியான இரத்தத் தொடர்புடைய தனது சுற்றத்தாரின் துள்பங்களைப் போக்கி, என்றும் புரக்கக் கடன் - எப்போதும் அவர்களைக் காவந்து செய்வது கடனாகும்.

விளக்கக் குறிப்பு :

செல்வம் பெருகவும், வாழ்நாள் மிகவும் விரும்பினால் அதற்குத் தனது இரத்தக் கலப்புடையாரின் இன்னல் தீர்ப்பது கடமையான கருமம் என்பதும் பொருளாகும்.

கொடுத்தாருக்குக் குறைவில்லை; பெருகும்.

தனம் - செல்வம் . இரத்தக்கலப்புடையார் - தாய், தந்தை, உடன் பிறந்தார், புதல்வர் ஆதியோர், ஆம்பொருள் - தன்னிடத்து உண்டாயிருக்கும் பொருள், புரத்தல் - காத்தல்.

8. நபிமொழி :

ஏழைகளுக்குச் செய்யும் தருமம் ஒன்றேயாகும். ஆனால் அஃது இரத்தக் கலப்புடையாருக்குச் செய்யப்பட்டால் தருமமும், உறவினரை ஆதரித்ததுவும் ஆகிய இரண்டு நன்மைகள் செய்தது ஆகும்

- திர்மதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருகிய தருமம்

*எளியார்க் களித்த லொருதரும மஃதுன்*
*கிளையார்க் கெனிலிரண்டாங் கேளாய் — கிளையாரை*
*ஆதரித்த லேழைக் களித்த லவையென்ப*
*மாதவத்தார் சொன்ன வகை.*

பொருள் :

எளியார்க்கு அளித்தல் ஒரு தருமம் - ஏழைகளுக்குக் கொடுக்கும் ஒரு தருமம், ஒரு தருமமாகவே எண்ணப்படும். அஃதுடன் கிளையார்க்கு எனில் இரண்டாம் - அந்த ஒரு தருமம் உனது சுற்றத்தார்க்குக் கொடுக்கப்படுமாயின் இரண்டு தருமமாக எண்ணப்படும். கேளாய் - அஃதெவ்வாறெனக் கேட்பாயாக, அவை - அவ்விரண்டும், கிளையாரை ஆதரித்தல் -சுற்றத்தாரை ஆதரித்த தருமம் ஒன்று, ஏழைக்கு அளித்தல் - ஏழைக்கு உதவிய தருமம் மற்றொன்று, என்ப - என்பனவாம், மாதவத்தார் சொன்ன வகை - இவை பெரிய தவத்தினராகிய நபிகள்பிரான் சொன்ன வகைகளாகும்.

**விளக்கக் குறிப்பு :**

கிளையாரை ஆதரிப்பவன் மகத்துவம் இதனாற் கூறப்பட்டது. இருமடங்கு இலாபம் தருவது சுற்றத்தாருக்களிப்பது. சுற்றத்தார், கேளாய் - முன்னிலையேவல் முற்று.

எளியார் - ஏழைகள், கிளையார் - தனது சந்ததியில் வந்து பிறந்தோர்.

**9. நபிமொழி :**

பசியுள்ளவருக்கு உணவளிப்பீராக. நோயாளியிடம் சேமம் விசாரிப்பீராக. சிறைப்பட்டவர்களை விடுவிப்பீராக.

- புகாரி

## சாந்தி யளிக்குக

*அளிக்க பசித்தோருக் கன்னம் பிணியால்*
*இளைத்தோருக் கின்பமொழி யீக — வளைத்த*
*சிறைப்பட்டோர் தம்மைச் சிறைவீடு செய்தே*
*நிறைப்பட்டோ ராக்கல் நெறி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருள் :**

பசித்தோருக்கு அன்னம் அளிக்க - பசியால் வருந்துவோருக்கு உணவு அளிப்பீராக, பிணியால் இளைத்தோருக்கு - நோயால் வருந்திக் களைத்துப் போனவருக்கு (அவரிடம் சென்று), இன்ப மொழி ஈக - இனிய வார்த்தைகளைக் கூறி அவர் மனத்தைச் சாந்தி செய்வீராக, வளைத்த சிறைப்பட்டோர் தம்மை - பொது வாழ்வினின்று தடுத்து வேறாக்கிச் சிறைப்பட்டிருப்பவர்களை, சிறைவீடு செய்தே - அச் சிறையினின்றும் விடுதலையடையச் செய்தே, நிறைப்பட்டோர் ஆக்கல் நெறி - அவரைப் பொதுவாழ்வை அனுபவிக்கும் சுதந்திர புருஷர் ஆக்கி வைத்தல் சிறந்ததாகும்.

**விளக்கக் குறிப்பு :**

பசி தீர்த்தலும், நோயாளருக்கு இன்ப மொழி கூறலும் சிறையினின்று விடுவிப்பதும் நொந்த உள்ளத்துக்குச் சாந்தி தரும் செயல்களாகும். இவை அறிவுடைய நல்லோர் தேடிச் செய்யும் சிறந்த தருமங்களாகும். அளிக்க , ஈக - வியங்கோல் முற்றுக்கள்.

இன்பமொழி - நோயாளரின் உள்ளம் சாந்தி பெறத் தக்கதாகக் கூறும் நம்பிக்கை வார்த்தைகள். வளைத்த சிறை - பொதுவாழ்வினின்றும் தடுத்து வேறாக்கிக் காவலுட்படுத்தப்பட்டிருப்பது. வீடு - விடுதலை. வீடுசெய்தல் - பிணை நிற்றல். பிணை கொடுத்தல், நியாயந் துரந்து நாட்டல், முதலியவற்றால்.

**10. நபிமொழி :**

அநியாயஞ் செய்தவனாயினும் அநியாயஞ் செய்யப்பட்டவனாயினும் உனது சகோதரனுக்கு உதவி செய்வாயாக. என்று நபிகள் கூறினார்கள். அநியாயஞ் செய்தவனுக்கு எப்படி உதவுவது? என்று கேட்கப்பட்டபோது அநியாயத்தை விட்டு அவனை விலக்குவாயாக. அதுவே அவனுக்கு உனது உதவியாகும் என விடை பகர்ந்தார்கள்.

- புகாரி

## துணை செய்க

*துன்புறுத்தப் பட்டோர் துயர்களைக வஃதன்றித்*
*துன்புறுத்து வோர்க்குந் துணையாக — அன்புசெய்தே*
*துன்புறுத்துந் தன்மை துடைத்தவரைச் சீராக்கல்*
*துன்புறுத்து வோர்க்காந் துணை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருள் :**

துன்புறுத்தப்பட்டோர் துயர்களை - பிறரால் துன்பப்படுத்தப்பட்டு வருந்துவோரின் துன்பங்களைத் தீர்த்து விடுவீராக. அஃதன்றி - அதுவுமன்றி, துன்புறுத்துவோர்க்கும் துணையாக - பிறரைத் துன்பப் படுத்துவோர்களுக்கும் உதவி செய்வீராக, (எவ்வாறெனில்) அன்பு செய்தே - அன்னாரிடத்து அன்பு காட்டி, துன்புறுத்தும் தன்மை துடைத்து - அவர் பிறரைத் துன்புறுத்துவதாகிய கெட்ட தன்மையை அவரிடத்து இல்லாமற் செய்து அவரைச் சீராக்கல் - அவரை நல்வழிப்படுத்துதலே, துன்புறுத்துவோர்க்காம் துணை - பிறரைத் துன்புறுத்துவோர்க்குச் செய்யும் உதவியாகும்.

**விளக்கக் குறிப்பு :**

பிறரைத் துன்புறுத்துவதாகிய கெட்ட தன்மை ஒருவரிடத்துக் காணப்படுமாயின் அவரை நல்வழிப்படுத்துவதனால் அவருக்கும் அடுத்தவருக்கும் உதவி செய்ததாகும். அவரிடத்தில் அக்கெட்ட தன்மை ஏற்பட்டுள்ளமைக்குரிய காரணத்தை ஆராய்ந்து உரிய பரிகரிப்பைத் தேடுவதனால் அவரைச் சீராக்கலாம். மேலும் அவரை நன்மையான துறைகளில் ஈடுபடுத்தவும் முடியும். கெட்டவர் என்று தள்ளி வையாது அவருக்கு அன்பு செய்து சீராக்குக. அன்பினால் எவரையும் இலகுவாய்க் கட்டுப்படுத்தலாம்.

11. **நபிமொழி :**

உன்னுடைய சகோதரனுக்கு நேர்ந்த துன்பத்தைப் பற்றி நீ சந்தோஷங் காட்டாதிருப்பாயாக. ஏனெனில் அல்லாஹ் அவனுக்கு இரங்கி உன்னைச் சோதனைக் குள்ளாக்கி விடலாம்.

- திர்மதி

## பிறர் துன்பம் கண்டு மகிழாதே

*உன்சோ தரன்துன்ப முற்றா லதுகண்டு*
*நன்றெ யெனமகிழ்வு நண்ணாதே — என்னே*
*இறையோ னவனையீ டேற்றியே யுன்னை*
*மறைசோ தனைசேர்க்க லாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருள் :**

உன் சோதரன் துன்பம் உற்றால் அது கண்டு - உன் சகோதரன் ஏதாவது துன்பப்படுவானாயின் அதைக் கண்டு, நன்றே என மகிழ்வு நண்ணாதே - அவன் துன்பப்படுவது நல்லதுதான் என்று கூறிச் சந்தோஷமடையாதிருப்பாயாக, என்னே - ஏனெனில், இறையோன் அவனை ஈடேற்றி - இறைவன் அவனை அத்துன்பத்தினின்றும் விடுதலை செய்து, உன்னை மறை சோதனை சேர்க்கலாம் - உன்னை நீ அறியாதே சோதனைக்குள் சேர்த்து விடலாம்.

**விளக்கக் குறிப்பு :**

பிறர் இன்பம் கண்டு மகிழ்வார் சிலர், பிறர் துன்பம் கண்டு மகிழ்வார் பலர், மற்றவன் விழுகையை எங்கே என்று எதிர்பார்த்திருப்பவருமுண்டு, பிறர் கல்வி, செல்வம் முதலியன கண்டு பொறாமையாலும் அவன் விழுகை கண்டு மகிழ்கின்றனர். வேணும் வேணும் என்று கூறிப் பரிகசிக்கின்றனர். இறைவன் விரும்பினால் ஒரே கணத்தில் நிலைமையை மாற்றியமைக்கவும், மகிழ்ந்தவரைச் சோதனைக்குட்படுத்தவும் கூடும். உன்னால் சிரிக்கப்பட்டோன் உன்னைப் பார்த்துச் சிரிக்கும் நிலைமையை இறைவன் ஏற்பாடு செய்ய இயலாதவனல்ல. மறை சோதனை எதிர்பாராத வகையில் இறைவனால் ஏற்படுத்தப்படும் சோதனை.

'பழித்தவாய் பாழ்போகாது' என்பது பழமொழி.

**12. நபிமொழி :**

நீங்கள் நோயாளியிடம் பிரவேசிக்கும் போது அவருடைய மரணத்தைப் பற்றிய கவலையை அவரை விட்டும் அகற்றி வடுவீர்களாக. நிச்சயமாக இது எவ்விஷயத்தையும் தடுக்காது. ஆனால் அவர் சந்தோஷ மடைவார்.

### பிணியாளர் கிலி தீர்க்க

*வருந்து பிணியாளன் மனக்கவலை மாற்றிப்*
*பொருந்து மரணபயம் போக்க — வருங்கருமம்*
*ஏதேனும் மாற்றநமக் கேலா தெனினுமவர்க்*
*காதாரஞ் சேர்மகிழ்ச்சி யாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் :

வருந்து பிணியாளன் - கடும் நோயினால் வருந்துகின்ற ஒரு நோயாளியை (சந்திக்க நேர்ந்தால்) அவனது, மனக்கவலை மாற்றி - (நான் இறந்துபடுவேனோ என்றுள்ள) மனக்கவலையை மாற்றிக் கொள்ளுமாறு, பொருந்தும் மரண பயம் போக்க - (எல்லா உயிர்களுக்கும்) பொருந்துவதாகிய மரணம் பற்றிய பயத்தினை நீக்கி விடுவீர்களாக, வருங் கருமம் ஏதேனும் - பின்னால் தெய்வ சங்கற்பத்தால் வரவிருக்கின்ற கருமங்களில் எதையேனும், மாற்ற நமக்கு ஏலாது எனினும் - மாற்றியமைக்க நம்மால் இயலாதேயென்றாலும், சேர் மகிழ்ச்சி - அந்த நல்வார்த்தைகளால் அப்பொழுதைக்கு ஏற்படும் சந்தோஷமாகது, அவர்க்கு ஆதாரம். ஆம் - கவலைப்படும் அவரது உள்ளத்துக்கு ஆதாரம் தருவது ஆகும்.

விளக்கக்குறிப்பு :

"உங்களுக்கு இப்பொழுது மரணம் வரமாட்மாது; பயப்பட வேண்டாம்" என்று நாம் அப்பொழுது கூறும் வார்த்தை வரவிருக்கும் மரணத்தை வராமற் தடுத்துவிடும் சக்தியுள்ளதல்ல. வருமோ வராதோ எனத் திடமாகக் கூறும் ஆற்றலும் தீர்க்கதரிசனமும் நமக்கில்லை. எனினும் அவ்வார்த்தை கலக்கமும், பயமும் கொண்டுள்ள இதயத்தைச் சாந்திப்படுத்தும் அல்லவா? மனத்தைச் சாந்தியடையச் செய்வது சிறந்த ஒரு தருமமாகும்.

ஆதாரம் - துணை

13. நபிமொழி :

யார் தமது சிறுவர்கள் மீது அன்பு காட்டுவதில்லையோ, மேலும் நமது பெரியோர்களைக் கண்ணியப்படுத்துவதில்லையோ, மேலும் ஜனங்களை நன்மை செய்யும் படி ஏவி தீமை செய்வதினின்றும் விலக்குவதில்லையோ அத்தகையவர் நம்மைச் சேர்ந்தவரல்லர்.

## நபியினினஞ்சேர்

*சிறுவர்மீ தன்பு செலுத்தா னறிவிற்*
*பெரியாரை நன்கினிது பேணான் — தெரியாரை*
*நன்றேவித் தீதகற்றான் நாடி னிவர்மூவர்*
*இன்றே நபியி னினம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் :

சிறுவர் மீது அன்பு செலுத்தான் - குழந்தைகளிடத்தில் அன்பு காட்டாதவனும், அறிவில் பெரியாரை நன்கு இனிது பேணான் - அறிவில் மேம்பட்ட பெரியார்களைக் கண்ணியப்படுத்தி ஆதரிக்காதவனும், தெரியாரை நன்று ஏவி - கற்று அறிந்து கொள்ளாத பாமர மக்களுக்கு தான் அறிந்த நல்ல தருமங்களைச் செய்யுமாறு ஏவியும், தீது அகற்றான் - அவரைத் தீமையினின்றும் விலக்காதும் இருக்கும் அறிஞனும், நாடின் - சொல்லுமிடத்து, இவர் மூவர் - இவர் மூவரும், நபியின் இனம் இன்றே - நபிகளின் இனத்தவராகார் (உண்மை முஸ்லிமாக இருக்க முடியாது).

விளக்கக் குறிப்பு :

எதிர்காலப் பிரசைகள் இன்றைய சிறுவர்களே. அவர்களிடத்து அன்பு காட்டி, அவர்களை நல்ல முறையில் வளர்க்க வேண்டியவர். இன்றைய பெரியார்களே. ஒரு சிறந்த சமுதாயம் உருவாக வேண்டுமானால் இன்றைய சிறுவர்களிடத்து அன்பு காட்ட வேண்டும். பெரியார்களைக் கண்ணியப்படுத்தி ஆதரிப்பதால் அவர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும். நாம் அவர்களை மதிப்பதைக் கண்ட பிறரும் அன்னாரை மதித்து நடப்பர். தெரியாதவர்களுக்கு நல்ல நெறிமுறைகளைக் கொண்டு ஒழுகுமாறு ஏவி அவர் செய்யும் தவறுகளினின்று அவர்களை விலக்கி விடுவதால் சாந்தியும் சமாதானமும் சகோதரத்துவமும் நிலவும். எனவேதான் நபிகளுக்குகந்த இந்த நல்ல பண்புகளை மேற்கொள்ளாதோர் 'என்னைச் சேர்ந்தவராகார்' என்றார்கள்.

இம்மூன்று செயல்களும் நபிகள் உவந்து கடைப்பிடித்தவை. எண்ணலும்மைகள் தொக்கன.

14. நபிமொழி :

உங்களில் எவராவது மற்றொருவர் தீயது செய்யப் பார்ப்பாராயின் அதை அவர் தனது கரங்களால் தடுக்க வேண்டும். முடியாவிட்டால் அதைத் தன் நாவாலாவது தடுக்க வேண்டும். அதுவும் முடியாவிட்டால் தனது மனத்தாலாவது வெறுக்க வேண்டும். மூன்றாவது ஈமானின் மிகத் தாழ்ந்ததாக இருக்கும்.

-புகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறர் தீது தடுப்பீர்

*தீதொருவன் செய்கையிலே கைம்மறித்துத் தீர்த்தறலை*
*ஓதுரையாற் றீமை யொழித்தலிடை — ஓதுரையால்*
*ஒண்ணா ருளத்தால் வெறுத்தல் கடையென்றார்*
*கண்ணார் கருணைக் கடல்.*

**பொருள் :**

கருணைக் கடல் கண்ணார் - கிருபை நிரம்பிய கடல் போலும் கண்ணினையுடைய நபிகள் பிரான், ஒருவன் தீது செய்கையிலே கை மறித்துத் தீர்த்தல் - ஒருவன் தீமை செய்வதைக் காணும்போது கொண்டு தடுக்க வேண்டும். தலை - அவ்வாறு தடுத்தலானது முதற் தரமானதாக எண்ணப்படும். ஓது உரையால் தீமை ஒழித்தல் - (கை கொண்டு தடுக்க இயலாதவர்) இது தீது என நாவால் உரைத்தேனும், அவனைத் தீமையினின்றும் தடுத்தல் வேண்டும், இடை - இது நடுத்தரமான உறுதிப் பாட்டுடன் கூடிய முயற்சியாக எண்ணப்படும், ஒது உரையால் உளத்தால் வெறுத்தல் - அவன் செயலை உள்ளத்தினாலேனும் வெறுத்து விலகுதல் வேண்டும். கடை - இது கடைப்பட்ட உறுதிப்பாட்டுடன் கூடிய முயற்சியென எண்ணப்படும், என்றார் - என்று கூறினார்கள் (நபிகள்).

**விளக்கக் குறிப்பு :**

மூவகைப்பட்ட உறுதிப்பாட்டுடன் கூடிய மயற்சிகள் இங்கு கூறப்பட்டுள்ளன. அஞ்சாமல் நெருங்கிக் கையாற் தடுப்பது, அஞ்சி வாயாலுரைப்பது, வெறுத்து விலகியிருப்பது என்பன அவை. தனக்கு எளியார் செய்யும் தீமையைக் கையாற் தடுத்தலும், சமமானோன் செய்யும் தீமையை வாய்ச் சொல்லால் தடுத்தலும், வலியான் செய்யும் தீமையை வெறுத்துப் புலப்படுத்தலும் நிகழத்தக்கனவாம்.

ஒண்ணார் - இயலாதவர் . தீர்த்தல் + தலை = தீர்த்தறலை. ஓது + உரை = ஓதுரை . இது தீமை இதைச் செய்யாதே பாவம் எனக்கூறி விலக்கல். கருணைக் கடலாகிய கண்ணார் - நபிகள் பிரான்.

**15. நபிமொழி :**

நன்மையைச் செய்யும்படி மற்றவரைத் தூண்டுபவன் அதைச் செய்பவரைப் போன்றே ஆவான்.

-புகாரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூண்டுதலுஞ் செய்தனிகரே

*நன்மை புரிய நமரை வழிநடத்தும்*
*வன்மை யுடையானும் மற்றவர்போல் — நன்மை*
*புரிந்தா னெனப்படுவா னென்றார் புவியில்*
*விரிந்த மறைமெழிந்த வேந்து.*

**பொருள் :**

புவியில் விரிந்த மறை மொழிந்த வேந்து - இவ்வுலகில் சகல கலைகளையும் விரிவாகக் கூறுகின்ற திருமயையை யுபதேசித்த நபிகள் திலகம், நன்மை புரிய நமரை வழி நடத்தும் வன்மையுடையானும் - நன்மையான கருமங்களைச் செய்யுமாறு நம்மவரை ஏவிச் செய்விக்கக் கூடிய சாதுரியமுடைய ஒருவனும், அவர் போல் நன்மை புரிந்தான் எனப்படுவான் - தன்னால் வழி நடத்தபட்டோர் போன்று தானும் நன்மையான கருமத்தைச் செய்தவனாக எண்ணபப்டுவான், என்றார் - என்று கூறினார்கள்.

**விளக்கக் குறிப்பு :**

தான் மற்றவரைக் கொண்டு செய்வித்த நன்மைக்கு இறைவனால் அளிக்கப்படும் சன்மானம் இதுவாகும்.

'செய்வார் கிடைத்தாலும் சொல்வார் கிடைப்பது அரிது' என்பது பழமொழி.

குறுஆன், இது இறுதி வேதமாதலின் இறுதி நாள்வரை உலக மக்களுக்கு வேண்டிய சகல ஞானங்களும் காலதேச வர்த்தமானங்களுக்குப் பொருந்த விரிவாக எடுத்து இயம்பிக் கொண்டிருக்கிறது.

வேந்து - இஸ்லாமியக் குடியரசுத் தலைவராகிய நபிகள். நமர் - நம்மவர். விரிந்த மறை - புறுக்கான் வேதம்.

**16. நபிமொழி :**

மானிடர்களே. சமாதானம் பரவச் செய்வீர்களாக. ஏழைகளுக்கு உணவளிப்பீர்களாக. இரத்தக் கலப்புடையாரைத் தழுவி நடப்பீர்களாக. இரவில் மானிடர் தூங்கும் போது இறைவனைத் தொழுவீர்களாக. நீங்கள் சாந்தியோடு சொர்க்கத்தில் பிரவேசிப்பீர்கள்.

- திர்மதி - இபுனுமாஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவர்க்கம் சேர்க

*நாட்டிற் சமாதானம் நாட்டிடுக வேழைகளை*
*ஊட்டிடுக சுற்றம் உவப்பவே — கூட்டிடுக*
*தூங்கும் பொழுதிற் தொழுகதனித் தீங்கிதனால்*
*ஆங்கு சுவர்க்கமுமக் காம்.*

**பொருள் :**

நாட்டில் சமாதானம் நாட்டிடுக - நாட்டிலே சமாதானத்தைப் பரவச் செய்வீர்களாக, ஏழைகளை ஊட்டிடுக - ஏழைகளுக்கு உணவளிப்பீர்களாக, சுற்றம் உவப்பாகவே கூட்டிடுக - சுற்றத்தார் மகிழ்ச்சியோடு வாழ அவர்களை ஒன்று கூட்டி வாழ்வீர்களாக, தூங்கும் பொழுதில் - யாவரும் தூங்கும் வேளையாகிய நள்ளிரவில், தனித்துத் தொழுக - தனித்திருந்து இறைவனைத் தொழுவீர்களாக, ஈங்கு இதனால் - இவ்வுலகில் வாழும் நாளில் இவ்வாறு செய்வீர்களானால், ஆங்கு சுவர்க்கம் உமக்காம் - மறுமையில் சுவர்க்க வாழ்வு உங்களுக்கு உண்டு.

**விளக்கக் குறிப்பு :**

சமாதானம் நிலவச் செய்வதும், ஏழையின் பசி தீர்ப்பதும், சுற்றம் தழுவுவதும், இரவில் விழித்துத் தனித்திருந்து தொழுவதும் சுவர்க்கம் புகுவிப்பனவாம். பொறுமையும், மன்னித்தலும், விட்டுக் கொடுத்தலும் சமாதானம் நிலவச் செய்வன.

நாட்டுதல் - நிலவச் செய்தல், ஊட்டுதல் - உணவூட்டுதல். கூட்டுதல் - ஒன்றுபட வாழச் செய்தல். யாவரும் தூங்கும் பொழுது தொழும் தொழுகை - தஹஜ்ஜுது தொழுகை. ஈங்கு - இவ்வுலகில் ஆங்கு - மறுமையில்.

**17. நபிமொழி :**

அனாதைகளைப் பராமரிப்பவன் என்னோடு சொர்க்கத்தில் இவ்வாறு இருப்பான் என்று கூறித் தங்கள் இருவிரல்களை ஒன்றோடொன்று சேர்த்துக் கட்டினார்கள் நபிகள்.

- அபுதாவூத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனாதைகளை ஆதரிப்பீர்

*இருவிரல்க ளொன்றா யிணைந்தா லெனவே*
*பரமன் சுவர்க்கப் பதியில் — ஒருவன்*
*இணைந்தென் னுடனிருப்பா னெய்து மனாதைக்குத்*
*துணையானா னென்றார் துணிந்து.*

பொருள் :

எய்தும் அனாதைக்குத் துணையானானொருவன் - தன்னை வந்தடைந்த ஒரு அனாதைக் குழந்தைக்குத் துணை செய்யும் ஒருவன், பரமன் சுவர்க்கப் பதியில் - இறைவனது சுவர்க்க லோகத்திலே, இருவிரல்கள் ஒன்றாய் இணைந்தால் என - கைவிரல் இரண்டு ஒன்றோடொன்று இணைந்திருப்பதுபோல, என்னுடன் இணைந்து இருப்பான் - என்னுடன் மிக நெருங்கியிருப்பான், என்றார் துணிந்து - என்று துணிந்து கூறினார்கள் (நபிகள்).

**விளக்கக்குறிப்பு :**

அனாதைக் குழந்தைகளை ஆதரிப்பவர்கள் நபிகளுடன் சுவர்க்கத்தில் நெருங்கியிருப்பார்கள். இறைவனின் நபிகள் சுவர்க்கவாசியே என்பது துணிவு. அனாதைகளை ஆதரித்தவர்கள் தன்னுடன் அங்கு வசிப்பார்கள் என்று துணிந்து கூறினாகள். நிச்சயமாக அவர்களும் சுவர்க்கத்திற் புகுவார்கள் என்பது கருதி அனாதைகளை ஆதரித்தல் எத்தகைய மகத்துவமான செயல் என்பது இதனால் புலனாகும். இரு விரல்கள் இணைந்தால் இடையீட்டில்லாது இணையுமென்பதும் நபிகளின் இருக்கையின் மிக அண்மையில் அனாதைகளின் ஆதரவாளர்களின் இருக்கையும் அமையும் என்பதும் தெளிவு. என்றார் என்பது அவாய் நிலையான் நபிகளைக் குறித்தது.

பரமன் - இறைவன்.

18. நபிமொழி :

**தன் தந்தையையும், சந்தானங்களையும் சகல மனிதர்களையும் விட என்னை அதிகமாக உவக்கும்வரை உங்களில் ஒருவனும் விசுவாசியாக மாட்டான் என நபிகள் கூறினார்கள் - புகாரி - முஸ்லிம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நபியையுவப்பவனே நல்ல முஸ்லிம்

*தனையீன்ற தந்தை தனதுசந் தானம்*
*தனைமேவு மாந்தரிவர் தம்மின் — எனையதிகம்*
*நேசிக்கு மட்டும் நிறைந்த முசிலிமென*
*ஆசிப்ப தில்லை யறி.*

பொருள் :

தனையீன்ற தந்தை - தன்னைப் பெற்றெடுத்த தகப்பன், தனது சந்தானம் - தான் பெற்றெடுத்த சந்ததியினர், தனைமேவும் மாந்தர் - தன்மீது அன்பு செலுத்தும் மனிதர், இவர் தம்மின் - ஆகிய இவர்களை விட,, எனை அதிகம் நேசிக்கும் மட்டும் - என்னை அதிகமாக ஒருவன் நேசிக்கும் வரையிலும், நிறைந்த முசிலிமென - அவன் பூரணமான ஒரு முஸ்லிம் எனக் கொண்டு, ஆசிப்பதில்லை - என்னால் விரும்பப்படுவதில்லை. அறி - இதை நன்கு அறிந்து கொள்வாயாக (என்று நபிகள் கூறினார்கள்).

**விளக்கக்குறிப்பு :**

மனிதரால் அதிகம் நேசிக்கப்படுவோர் பெற்றார் பிள்ளைகள், தனது அன்புக்குப் பாத்திரரானோர் ஆதியோராவர். ஈமான் கொண்டு இஸ்லாத்தின் கடமைகளைச் சரிவர ஒருவன் செய்து வந்த போதிலும் தன்னால் நேசிக்கப்படுவோர் யாவரையும் விட தான் ஒரு முஸ்லிமாக வாழுவதற்கு வழி காட்டியாக அமைந்துள்ள நபிகளை அதிகமாக நேசித்து ஒழுகாதவரை அவன் ஒரு சிறந்த முஸ்லிமென நபிகளால் விரும்பப்படுவதில்லை என்க. இதனால் தந்தை முதலானோரை நேசிக்க வேண்டாமென்பது அர்த்தமல்ல. அவர்களை உவப்பின் அளவு கருவியாகக் கொண்டு நபிகளின் மீது கொள்ளும் உவப்பு கணிக்கப்பட்டது.

தனை - தன்னை, எனை - என்னை (நபிகளை), நிறைந்த முஸ்லிம் - பூரணத்துவ மடைந்த முஸ்லிம், சந்தானம் - சந்ததி, பெற்ற பிள்ளைகள்.

19. **நபிமொழி :**

**விசுவாசியானவன் எவரையும் கடுமையாய் நிந்திப்பவனல்லன்; அவன் கடுமையாய்ச் சபிப்பவனுமல்லன்; அவன் ஒழுக்க மற்றவனுமல்லன்; அவன் மானமற்றவனுமல்லன்.**

**-திர்மதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுப்பன விழையான் விசுவாசி

*எவரும் வருந்த விகழான் கடிந்தே*
*எவருங் கெடச்சபியா னீங்க — அவமானம்*
*புல்லு மொழுக்கம் பொருந்தா னவனிறைமேல்*
*நல்லவிசு வாசியென நாடு.*

**பொருள் :**

எவரும் வருந்த இகழான் - எவரும் மனம் வருந்தத் தக்கவாறு இகழ்ந்து பேசமாட்டான், எவரும் ஈங்கு கெடக் கடிந்து சபியான் - எவரும் இவ்வுலகில் கேட்டடையுமாறு கடுமையான சாபமிட மாட்டான். அவமானம் தரத்தக்கதான் கூடா ஒழுக்கங்களைக் கைக்கொள்ள மாட்டான், அவன் - இத்தகைய ஒருவன் உளனானால் அவனே, இறைமேல் நல்ல விசுவாசி என நாடு - இறைவன் மேல் உண்மையாக விசுவாசங் கொண்டவனாவான் என எண்ணுவாயாக.

**விளக்கக் குறிப்பு :**

பிறர்மேற் கோபங் கொள்ளும் போது இழித்துரைப்பதும், மனம் நொந்து சாபமிடுவதும் மனித சுபாவம். அவை பிறருக்குத் தீமை விளைவிக்கத் தக்கன. அவர் மனம் ஒப்பாதன. ஆகவே ஒரு நல்ல முஸ்லிம் அவற்றைச் செய்யான். பிறருக்கு இடும் சாபம் சில சந்தர்ப்பங்களில் பலித்து விடுவதுமுண்டு. ஒரு சிறந்த முஸ்லிம் ஒழுக்கத்தை மிகக் கண்ணியமான முறையில் பாதுகாப்பான். அவமானம் தரத்தக்க செயல்களையும் செய்ய மாட்டான்.

இன்சொல் மொழிதலும், பொறுமையும் நல்லொழுக்கமும் தன்மானமும் ஒரு சிறந்த முஸ்லிமின் அணிகலன்களாகும் என்க.

சபித்தல் - திட்டுதல், புல்லுதல் - பொருந்துதல்.

**20. நபிமொழி :**

தனது அயலகத்தான் தனக்கருகே பசித்திருக்க வயிறார உண்பவன் உண்மையான விசுவாசியல்லன். - பைஹகி

## அயலானை ஆதரி

*அண்டை யயலான் பசித்திருக்கத் தன்கண்ணாற்*
*கண்டிருந்துங் காணா தவன்போல — உண்டு*
*பசிதீர்ந் தகமகிழ்வான் பார்மீதி லுண்மை*
*முசிலி மெனப்படுத லின்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் :

அண்டை அயலான் பசித்திருக்க - அயல் வீட்டிலுள்ளவன் உணவின்றிப் பசியோடிருப்பதனை , தன் கண்ணால் கண்டிருந்தும் - தன் கண்ணாலேயே நேரில் கண்டும், காணதவன் போல - காணாதவன் போல் நடித்து, உண்டு பசி தீர்ந்து அகம் மகிழ்வான் - வியறார உண்டு பசி தீர்ந்து மகிழ்ச்சியோடிருப்பவன், பார்மீதில் உண்மை முஸ்லிம் எனப்படுதல் இன்று - இவ்வுலகிலும் ஒரு உண்மையான முஸ்லிம் எனக் கருதப்படுவதில்லை.

**விளக்கக் குறிப்பு :**

உலகத்தாரால் உண்மை முஸ்லிம் எனக் கருதப்படாதவன் இறைவனாலும் கருதப்படுவதில்லை. அண்டை வீட்டில் அடுப்பெரிகிறதா என்று பார்த்த பின்பே தான் உண்பான் ஒரு உண்மை முஸ்லிம். அயலான் பசியோடிருக்கிறான் எனத் தெரிந்து கொண்டும் அவன் பசியை ஆற்ற முயலாமல் தான் விலாப் புடைக்க உண்டு மகிழ்ந்திருப்பவன் எவ்வாறு உண்மை முஸ்லிமாக முடியும்?

அண்டை - அருகு, பார் - பூமி.

**21. நபிமொழி :**

எவனுடைய நாவினின்றும் கரத்தின்றும் முஸ்லிம்கள் தீங்கிழைக்கப்படாது சுகமாக இருக்கின்றனரோ அவனே சிறந்த முஸ்லிமாவான்.

-திர்மதி

## பிறர் நோவ ஒழுகேல்

*நாவினாற் கையால் முசிலீம் நனிவருந்தத்*
*தீவினை செய்யாத செம்மையுளோன் — பூவில்*
*சிறந்த முசிலிமெனச் செப்பினார் தீமை*
*மறந்த நயினார் மகிழ்ந்து.*

பொருள் :

பூவில் - உலகத்திலே, நாவினால் கையால் முசிலீம் நனிவருந்த - தனது சொல்லினாலும் செயலினாலும் ஏனைய முஸ்லிம்கள் மிகுதியும் வருந்தத்தக்கதாக, தீவினை செய்யாத செம்மையுளோன் - தீமை செய்யாத நற்குணமுள்ள ஒருவன், சிறந்த முசிலிமென - ஒரு சிறந்த முஸ்லிமாவான் என்று, தீமை மறைந்த நயினார் மகிழ்ந்து செப்பினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தீமையென்பதையே மறந்து விட்ட நபிகள் திலகம் மகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

**விளக்கக் குறிப்பு :**

ஒரு சிறந்த முஸ்லிம் பிறருக்குத் தீமை செய்வதை விட்டும் தனது நாவையும் கையையும் தவிர்த்துக் கொள்வான். பிறர் குற்றம் பொறுக்கும் பண்புள்ளவனின் நாவும், கையும் பிறருக்குத் தீமை செய்யா. பதிலுக்குப் பதில் கொடுக்க முயலா. நபிகள் வாழ்வில் எப்பொழுதேனும் யாருக்கும் தீங்கு நினைத்ததில்லை. பிறர் செய்த கொடுமைகள் அத்தனையும் பொறுத்திருந்தார்கள். அதனால் வெற்றியும் கண்டார்கள்.

நனி - மிகுதி, பூ - பூமி, செம்மை - பண்பு.

22. நபிமொழி :

யார் தனது நா. மர்ம ஸ்தானம் ஆகிய இரு உறுப்புக்களையும் கட்டுப்படுத்தி வைத்திருக்க என்னிடம் பொறுப் பேற்றுக் கொள்ளுகிறாரோ அவரைச் சொர்க்கத்திற் புக வைப்பதாக அவருக்கு நான் பொறுப் பேற்றுக் கொள்ளுவேன்.

- புகாரி

**ஈரங்கக் காப்பீர்**

*தன்னாவும் மர்மத் தலமுமா மீருறுப்பும்*
*எந்நாளுங் காக்கு மிருஞ்சுமையை — என்முன்*
*பொறுப்பேற்றுக் காப்பானைப் பொற்பதியிற் சேர்க்கப்*
*பொறுப்பேற்ப னென்றார் புரிந்து.*

பொருள் :

தன் நாவும் மர்மத் தலமுமாம் ஈருறுப்பும் - தனது நாக்கு மர்ம உறுப்பு ஆகிய இரு அங்கங்களையும், எந்நாளும் காக்கும் இருஞ்சுமையை - சீவிய காலமெல்லாம் காத்துக் கொள்வதாகிய பெரிய பாரத்தை, என் முன் பொறுப்பேற்று - என்முன் பிரமாணிக்கஞ் செய்து ஏற்று காப்பானை - காத்து வருபவனை, புரிந்து பொன் பதியில் சேர்க்கப் பொறுப்பேற்பன் என்றார் - அறிந்து அவனைச் சுவர்க்க லோகத்தில் சேர்த்து வைக்க யான் பொறுப்பேற்றுக் கொள்வேன் என்று கூறினார்கள் (நபிகள்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு :**

பாபங்கள் யாவும் நாவும் மர்மத்தலமும் ஆகிய இவ்விரு உறுப்புக்களையும் கொண்டேதான் உற்பத்தியாகின்றன. அவ்விரண்டையும் தவறிப் போகாமற் பாதுகாக்குமொருவன் பாவத்தினின்றும் நீங்கியிருப்பான். அவனைச் சொர்க்கத்தில் சேர்ப்பதில் ஆட்சேபமிருக்க முடியாது. இவற்றைக் காப்பதாக வாக்களிப்பவனைச் சொர்க்கத்திற் சேர்ப்பதாக நபிகள் வாக்களிக்கின்றார்கள். அவற்றைக் காப்பது மதிகக் கஷ்டமான காரியம், எனவே தான் இருஞ்சுமை எனப்பட்டது. இவ்விரு உறுப்புக்களும் தவறிழைக்கக் கூடிய சூழ்நிலையிலேயே மனிதன் பிறந்திருக்கிறான்.

பொன்பதி - அழகிய இடம், சொர்க்கம்.

23. **நபிமொழி :**

நயவஞ்சகர்க்கான அடையாளங்கள் மூன்று . அவை :

(அ) பேசும்போது பொய் பேசுவான்.

(ஆ) தான் ஏதாவது வாக்குறுதி செய்தால் அதை மீறி நடப்பான்.

(இ) அவனிடம் அமானிதம் வைக்கப்பட்டால் அதில் நம்பிக்கைத் துரோகம் செய்வான்.

-புகாரி.

## நயவஞ்சகம் நாடேல்

*வாக்கினிலே பொய்யுரையும் மற்றோர்க்குத் தான் கொடுத்த*
*வாக்குறுதி மீறும் வழ்கமுடன் — காக்கும்*
*அடைகக்லத்தை யோரா தபகரித்தல் மூன்றுங்*
*கெடுக்குநய வஞ்சகுணங் கேள்.*

**பொருள் :**

வாக்கினிலே பொய்யுரையும் - பேச்சிலே பொய்க் கலப்பும், மற்றோர்க்குத் தான் கொடுத்த வாக்குறுதி மீறும் வழக்கமுடன் - பிறருக்குக் கொடுத்த வாக்குறுதியை புறக்கணித்து விட்டு விடும் வழக்கமும், காக்கும் அடைக்கலத்தை ஓராது அபகரித்தல் - தன்னிடம் பாதுகாக்குமாறு தரப்பட்ட அடைக்கலப் பொருளை எவ்வித சிந்தனையுமின்றி அபகரித்துக் கொள்ளுதலும், மூன்றும் - இம்மூன்று குணங்களும், கெடுக்கும் நயவஞ்ச குணம் - பிறரை நம்பப் பண்ணிக் கெடுக்கும் நயவஞ்சகர்களின் குணங்களாகும். கேள் - இதை நன்கு கேட்டுத் தெரிந்து கொள்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு :**

பொய்யுரையால் பிறரை நம்பப் பண்ணிக் கெடுப்பர், வாக்குக் கொடுத்தால் அதை நிறைவேற்றாது அதை அவரே நிராகரித்து ஏமாற்றுவர். நம்பிக்கைக்காகத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளைத் திருப்பித்தர மறுப்பர். தாமே சொந்தமாக்கிக் கொள்வர். இவர்கள் நம்பிக்கைத் துரோகிகள், தெய்வ சாபத்துக்கு இலக்கானவர்கள். இவர்களை நம்புபவர்கள் ஏமாந்து கெடுவர். நயவஞ்சகுணம் - நம்பப் பண்ணிக் கெடுக்கும் குணம். இக்குணம் படைத்தோர் நயவஞ்சகர் எனப்படுவார்.

ஓராது - எவ்வித சிந்தனையுமில்லாது.

**24. நபிமொழி :**

நெருப்பு விறகைத் தின்று விடுவது போன்று கபடமும் பொறாமையும் நன்மைகளைத் தின்றுவிடும்.

-புகாரி.

## பொறாமையும் கபடமும் போக்குமே நன்மை

*இந்தனத்தை வெந்தீ யெரித்துண்ணல் போலொருவன்*
*புந்திதனிற் தோன்றும் பொறாமையுடன் — அந்தோகேள்*
*வஞ்ச மெனுநெருப்பு மாய்த்துணுமே யாருயிர்க்கோர்*
*தஞ்சமெனு நன்மையினைத் தான்.*

**பொருள் :**

ஒருவன் புந்திதனில் தோன்றும் - ஒருவனுடைய உள்ளத்திலே தோன்றுகின்ற, பொறாமையுடன் வஞ்சம் எனும் நெருப்பு - பொறாமை வஞ்சகம் என்னும் நெருப்புக்கள், இந்தனத்தை வெம்தீ எரித்துண்ணல் போல - விறகைப் பெரு நெருப்பானது எரித்து இல்லாமற் செய்தல் போல, ஆருயிர்க்கு ஓர் தஞ்சம் என்னும் நன்மையினைத்தான் - அருமையான் அவனது உயிருக்கு உறுதுணையாகவுள்ள அவன் செய்த நன்மைகளையே, மாய்த்து (உ(ண்)ணும் - கொன்று இல்லாமல் ஒழித்துவிடும். அந்தோகேள் - ஐயோ இதனைக் கேட்பாயாக.

**விளக்கக் குறிப்பு :**

ஒருவன் பிறர்மீது அன்னாரின் கல்வி, செல்வம் முதலியன கண்டு கொள்ளும் பொறாமையும், அது காரணமாக அவரைக் கெடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கும் வஞ்சகமும் சூழ்ச்சிகளும் ஆகிய நெருப்புக்கள் அவன் பிரயாசைப்பட்டுத் தேடிய நன்மைகளைத் தொலைத்து விடும். இருதயம் பரிசுத்தமாக இருந்தாலே நாம் செய்த நன்மைகள் நமக்குப் பயனாகும். நெருப்பு விறகை எரியச் செய்து இல்லாதொழிக்கும். தனது உயிருக்குத் துணையாமாறே மனிதன் நன்மையான காரியங்களைச் செய்கிறான். தனது கெட்ட எண்ணத்தினால் தானே அதனை அழித்தும் விடுகின்றான்.

''தன்வினை தன்னைச் சுடும்'' என்பது பழமொழி.

விறகை வெந்தீ எரித்துச் சாம்பராக்கிவிடும். மாய்த்து என்பதனால் நன்மைகளை அடியோடு இல்லாமற் செய்யுமென்க. அந்தோ என்பது பாடுபட்டுத் தேடிய நன்மை அழிகிறதே என்ற பரிதாபக் குறிப்பு.

இந்தனம் - விறகு , புந்தி - புத்தி, பொறாமை - பிறர் கல்வி செல்வம் கண்டு பொறுக்க மாட்டாமை. வஞ்சகம் - பிறரைக் கெடுக்கச் செய்யும் சூழ்ச்சி வெந் தீ - பெரு நெருப்பு.

25. நபிமொழி :

இன்னொருவர் மீது தப்பெண்ணங் கொள்வதிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். நிச்சயமாகத் தப்பெண்ணம் பொய்யேயாகும். யாருக்கும் வேவுவேலை பார்க்காதீர்கள். யாருடைய குறைகளையும் கண்டு பிடித்தலையாதீர்கள். ஒருவருக்கொருவர் புறம் பேசித் திரியாதீர்கள். அல்லாஹ்வின் அடியார்களே. நீங்கள் எல்லாரும் சகோதரராயிருங்கள்.

- புகாரி

## பிறர் மாசு தேடேல்

*பிறரைப் பிழைகருதேல் பேசினது பொய்யே*
*பிறர்க்குளவு போகேல் பிறரில் — மறவேதும்*
*காண்டற் கலையேல் புறங்கூறேல் சோதராய்*
*யாண்டு மிருப்பீ ரிசைந்து.*

பொருள் :

பிறரைப் பிழைகருதேல் - பிறரைப் பற்றிப் பிழையாக எண்ணாதே, பேசின் அது பொய்யே - சொல்லப்போனால் அவ்வெண்ணம் பொய்யானதேயாகும், பிறர்க்கு உளவு போகேல் - பிறருக்காக இரகசியங்களைத் தேடும் உளவு வேலைபார்க்கச் செல்லாதே. பிறரில் மறு ஏதும் காண்டற்கு அலையேல் - பிறரிடத்துள்ள குற்றங் குறைகளைக் காணும் பொருட்டுத் தேடியலையாதே, புறம் கூறேல் - மற்றவரைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரில்லாதபோது புறம் கூறாதே. சோதரராய் இசைந்து யாண்டும் இருப்பீர் - எல்லாரும் சகோதரராக ஒன்று சேர்ந்து எப்பொழுதும் வாழ்வீர்களாக.

**விளக்கக் குறிப்பு :**

நாம் பிறரைத் தப்பாக எண்ணுவது போல நம்மை அவர்களும் தப்பாக எண்ணத் தொடங்கினால் நாம் அதை விரும்ப மாட்டோம். சந்தேகமும், அதிருப்தியும் அபிப்பிராய பேதங்களும் தான் விளையும். சமாதானம் நிலவுவதற்கு இடமில்லாது போம். எனவேதான் பிறரைத் தப்பாக எண்ணுவதினின்றும் தப்பித்துக் கொள்ள வேண்டும். நாம் எண்ணியது பொய்யாகும் போது வெட்கமடைய நேரும். வேவு வேலை பார்க்கத் தொடங்கினால் நமது வேலையுங் கெட்டுப் பிறரின் பகையையுஞ் சம்பாதிக்க வேண்டிவரும். பிறரின் தவறுகளை அம்பலப்படுத்தி அவரை அவமானப்படுத்த வேண்டியதாகும். ஆபத்துக்களில் சிக்கித் துன்பப் படவும் நேரும். மற்றவர்களின் குறையைத் தேடித் திரிவதைவிடப் பிறரிடமுள்ள நல்ல அம்சங்களைப் பாராட்டி நாம் திருந்த முயல வேண்டும். நாம் இல்லாத போது நம்மைப் பற்றிப் பிறர் குறை கூற நாம் விரும்ப மாட்டோம். அதுபோல நாம் கூறப் பிறரும் விரும்ப மாட்டார் என எண்ணிப் புறம் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் சகோரராவார். நமக்குள் அபிப்பிராய பேதங் காரணமாக ஏற்படும் சச்சரவுகளை மறந்து சகோதரர்களாக அன்பு பூண்டு வாழ வேண்டும்.

யாண்டும் - எப்பொழுதும், மறு - குற்றம்.

**26. நபிமொழி :**

மூப்பைக் கருதி முதியோரைக் கண்ணியப்படுத்தும் ஒரு இளைஞனுடைய முதுமைப் பருவத்தில் அவனைக் கண்ணியப்படுத்தும் ஒருவனை அல்லாஹ் சிருஷ்டிக்காமலிருப்பதில்லை.

-திர்மதி

## முதியோரைக் கனம் பண்ணு

*வயதின்மூத் தோரை மதிக்கு மிளையோன்*
*வயதின்மூத் தோனாய் வருங்கால் — வயதில்*
*சிறியா னொருவ னிவனை மதித்தற்*
*குறுவா னிறையருளா லோர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் :

வயதில் மூத்தோரை மதிக்கும் இளையோன் - வயதில் முதிர்ந்தவர்களைக் கனம் பண்ணுகின்ற ஓர் இளையவன், வயதில் மூத்தோனாய் வருங்கால் - வயதில் முதிர்ந்தவனாக வரும்போது, இறை அருளால் - இறைவனின் கிருபையினாலே, இவனை மதித்தற்கு - இந்த முதியவனைக் கனம் பண்ணுவதற்கு, வயதில் சிறியான் ஒருவன் - வயதிற் குறைந்த இளையவன் ஒருவன், உறுவான் ஓர் - உண்டாயிருப்பான் என்பதனை உணர்வாயாக.

விளக்கக் குறிப்பு :

''முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்'' முன்னேதான் முதியவரை மதித்தமையால் தனது மூப்பின்போது தன்னை மதிக்கப் பிறிதொரு இளைஞனை இறைவன் அனுப்பி வைக்கிறான். இதனால் முதியோரைக் கனம் பண்ணுவது இறைவனுக்கு மிகவும் உகந்த செயல் என்பது புலனாகும்.

ஓர்தல் - உணர்தல்.

27. நபிமொழி :

ஒரு வகுப்பாரின் கனவான் ஒருவர் உங்களிடம் வரும்போது அவரைக் கனம் பண்ணுவீர்களாக.

- முஸ்லிம்

## கனவானைக் கனம் பண்ணு

*எம்மதத்தா ரானாலு மெவ்வகுப்பா ரானாலும்*
*தம்மை யடைந்த வவர்பெரியோர் — தம்மை*
*மரியாதை செய்து மதித்திடுக வன்னார்*
*உரியார் மதிப்பிற் குணர்.*

பொருள் :

எம்மதத்தார் ஆனாலும் - எந்த மதத்தைச் சேர்ந்தவர் ஆனாலும், எவ்வகுப்பார் ஆனாலும் - எந்தச் சாகியத்தைச் சேர்ந்தவர் ஆனாலும், தம்மை அடைந்த அவர் பெரியோர் தம்மை - உங்களை வந்து சேர்ந்த அவ்வகுப்பாரால் பெரியார்களாக மதிக்கப்படுபவர்களை, மரியாதை செய்து மதித்திடுக - பெரியாருக்குரிய முறைப்படி அவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதை செய்வீர்களாக, அன்னார் மதிப்பிற்குரியவர் உணர் - அவர்களும் நன்கு மதித்தற்குரியவர்களே என்று உணர்வீர்களாக.

**விளக்கக் குறிப்பு :**

"அவர்கள் அந்நிய மதத்தினர், சாகியத்தினர் அவர்கள் எத்தகையவராயினும் எமக்கென்ன" என்று பராமுகமாயிருத்தலாகாது. நாம் அவர்களை மதிப்பது போலவே நமது பெரியார்களையும் அவர்கள் மதிப்பர். நமது பெரியார்களை நாம் கண்ணியப்படுத்துவது பொலவே பிறரும் கண்ணியப்படுத்த வேண்டுமென்றேதான் நாம் கருதுகிறோம். அதுபோலவே பிறரும் கருதுவர். அது தவறுமல்ல. பெரியர்கள் யாராயினும் பெரியார்களேதான். மதிப்பிற் குரியவரேதான். அறிவு ஆற்றல் நற்குண - நற்செயல்களால்தான் ஒருவர் பெருமையடைகிறார். மதமும் குலமும் ஒருவரது அந்தஸ்தை மாற்றிவிடா என்க.

28. **நபிமொழி :**

எவனொருவனுடைய தீங்கை விட்டும் அவனுடைய அண்டை வீட்டான் பாதுகாப்புப் பெறவில்லையோ அவன் சுவர்க்கத்திற் பிரவேசிக்க மாட்டான்.

- முஸ்லிம்

## அயலான் அச்சம் தவிர்

*எவனொருவன் தன்னா லிடுக்கண் தவிர்ந்தே*
*அவனயலான் காப்புண்ணா கானோ — அவன்மறுநாள்*
*வல்லா னருள்தங்கும் வான்சுவர்க்க வாழ்வணையச்*
*செல்லா னெனவறிக தேர்ந்து.*

பொருள் :

எவன் ஒருவன் தன்னால் அவன் அயலான் இடுக்கண் தவிர்ந்து காப்புண்ணாகானோ - குடிபதியாக விருக்கும் ஒருவனால் அவனது அயலகத்தான் துன்பம் நீங்கிப் பாதுகாப்புப் பெறவில்லையோ, அவன் மறுநாள் - அத்தகையவன் மறுமை நாளிலே, வல்லான் அருள் தங்கும் வான் சுவர்க்க வாழ்வு அணையச் செல்லான் - சகல வல்லமைகளையுமுடைய இறைவனது அருள் நிறைந்துள்ள உந்நதமான சுவர்க்க வாழ்வை அனுபவிக்கச் செல்ல மாட்டான், என தேர்ந்து அறிக - என்று தெளிவாக அறிந்து கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு :**

ஒருவனை நல்லவனென்றோ தீயவனென்றோ தெரிந்து கொள்ள அவனது அண்டை வீட்டுக்காரன் உரைகல்லாக அமைவான். எவரும் தன்னை அடுத்துள்ளவருக்கு நன்மையாகவே வாழ வேண்டும். அயலில் வலியாருமிருப்பர்; எளியாருமிருப்பர். யாவரையும் ஆதரித்து வாழ வேண்டும். அத்தகையவரே மக்களுக்கும் நல்லவர்; இறைவனுக்கும் நல்லவர். இறைவனுடைய அருளுக்குப் பாத்திரராகி அவனது அருள் தங்கும் சுவர்க்க வாழ்வுக்கும் அருகதையுடையவராவர். பிறரால் துன்புறுத்தப்படும்போது பாதுகாப்பளிப்பதும், தன்னால் துன்புறுத்தப்படாதிருப்பதும் பாதுகாப்பாம்.

இடுக்கண் - துன்பம்.

**29. நபிமொழி :**

நான்கு பொருள்கள் அருளப்பட்டவர். இம்மையிலும் மறுமையிலும் பெறத்தக்கவைகளுட் சிறந்தவற்றை நிச்சயமாக அருளப்பட்டவராவார். அவை:

(அ) நன்றியுள்ள நெஞ்சம்

(ஆ) துதிக்கும்நா.

(இ) ஆபத்துக்களைச் சகிக்கும் உடல்.

(ஈ) தன் கற்பு விஷயத்திலும் தன் கணவனின் சொத்து விஷயத்திலும் மோசம் செய்யாத மனைவி.

-பைஹகி

**அரியன பேணீர்**

*நன்றியுள நெஞ்சம் நயந்தே துதிக்கும்நா*
*ஒன்று மபாயம் பொறுக்குமுடல் — நன்றாய*
*கற்புங் கணவன் கனதனமுங் காக்கும்பெண்*
*பெற்றார்பெற் றாரிருமைப் பேறு.*

**பொருள் :**

நன்றியுள நெஞ்சம் - பிறர் செய்த நன்றியை ஞாபகத்தில் வைத்திருக்கும் உள்ளமும், நயந்து துதிக்கும் நா - இறைவனது அருளை நினைந்து அவனைத் துதி செய்யும் நாவும், ஒன்றும் அபாயம் பொறுக்கும் உடல் - சம்பவிக்கின்ற அபாயத்தைத் தாங்கக் கூடிய உடலமைதியும், நன்றாய் கற்பும் - நல்ல கற்பு நெறியையும், கணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனதனமும் - தனது கணவனின் பெருஞ் செல்வத்தையும், காக்கும் பெண் - பாதுகாக்கும் பெண்ணும், பெற்றார் இருமைப் பேறு பெற்றார் - ஆகிய இந்நான்கும் பெற்றுக் கொண்டவர் இரு உலகப் பேறும் பெற்றுக் கொண்டவராவர்.

**விளக்கக் குறிப்பு :**

நன்றி மறவாதவரை மக்களும் மதிப்பர். இறைவனும் உகப்பன். துதிக்கப் பழகிய நா இதமாகப் பேசி மக்களை ஐக்கியப்படுத்தும். துதிப்பதனால் இறை கடாட்சமுண்டு. அபாயத்தைப் பொறுக்கும் உடலில் திடமான உள்ளமிருக்கும். அது சகிப்புத் தன்மையுள்ளதாக இங்கு சாந்தியும் சமாதானமும் காணும். இறை சோதனையை மேற்கொண்டு அவனருளைப் பெறும். கற்பைக் காப்பவளால் தனக்கும் தன் கணவனுக்கும் பெருமையும் புகழுமுண்டு. கணவனின் பொருளைக் காப்பவள் நன் மனைவி, சீரிய வாழ்வுள்ளவள். அவளைக் கணவன் உவப்பான். அதனால் இறைவனும் உவப்பான். எனவே அவற்றால் ஒருவனுக்கு இரு உலகப் பேறும் உண்டு என்க.

இருமை - இம்மை, மறுமை.

**30. நபிமொழி :**

தனது தொழுகை ஐந்தையும் தொழுது தனது றமலான் மாதத்தின் நோன்பு வைத்து. தனது கற்பையுங் காப்பாற்றித் தனது கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் ஒரு மாது சுவர்க்கத்தின் வாசல்களில் தனக்கு இஷ்டமான ஒன்றன் வழியே பிரவேசிப்பாளாக.

-அபூநயீம் - ஹூல்யா

## சுகுணமாது சுவர்க்கம் புகுவாள்

*இறைதொழுகை யைந்து மியைறமலான் நோன்பும்*
*கறையிலாக் கற்பொழுங்குங் காத்து — நிறைகணவன்*
*சொற்படிவாழ் மாது சுவர்க்கந் திறந்தாங்கு*
*பொற்புறவே சென்று புகும்.*

**பொருள் :**

இறைதொழுகை ஐந்தும் (காத்து) - நாளும் ஐந்து வேளை இறைவனைத் தொழுவதில் தவறில்லாதவாறு பாதுகாத்து, இயைறமலான் நோன்பும் (காத்து) - வருடந்தோறும் வந்து இயையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றமலான் மாதத்தில் விதியாக்கப்பட்ட நோன்பையும் நோற்று, கறையிலாக் கற்பொழுங்கும் காத்து - பழுது படாத தனது கற்பு நெறியையும், பாதுகாத்து, நிறை கணவன் சொற்படி வாழ்மாது - தனக்கு நிறைவளிக்கும் தனது கணவன் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து வாழும் ஒரு பெண், சுவர்க்கம் திறந்து ஆங்கு பொற்புறவே சென்று புகும் - மறுமையில் சுவர்க்கத்தில் தான் விரும்பிய வாயிலைத் திறந்து கொண்டு அலங்காரமாகச் சென்று புகுவாள்.

**விளக்கக் குறிப்பு :**

இறைதொழுகை ஐந்து - நாளாந்த ஐங்காலத் தொழுகை (கட்டாயமானது). றமலான் மாதத்தில் நோன்பு நோற்பதும் கட்டாயமானது. இவை இறைவனுக்காக அனுஷ்டிக்கப்படுவன. தனது கற்பைக் காப்பது பெண்ணின் நீங்காத கடமை. !!மனைவியின் சுவர்க்கம் கணவனின் பாதத்தின் கீழ்'' என்பது நபிமொழி, இறைவனுக்காகவும் தனக்காகவும் கணவனுக்காகவும் தனனை அர்ப்பணம் செய்யும் பெண் சுவர்க்கவாசி யென்பது துணிபு. சுவர்க்கம் திறந்து என்றதனால் தனக்குப் பிரியமான ஒரு வாயிலைத் தானே திறப்பாள் என்பது பெற்றாம். இதனால் இத்தகைய பெண்ணுக்கு இறைவன் அளிக்கும் உந்நத ஸ்தானம் எத்தகையது என்பது புலனாகும். இறை வழிபாடும்,. பதிவழிபாடும் பெண்ணின் சுவர்க்க வழி திறப்பன. காத்து என்பதனை தொழுகை நோன்பு இரண்டுக்குங் கூட்டுக.

பொற்பு - அழகு , அலங்காரம்.

**31. நபிமொழி :**

எப்பொழுதும் தலைவருக்கு வழிபடுதல் கடமையாகும். அவர் இறைவனுக்கு மாற்றமான ஏவல் செய்தால் வழிபடாதீர்கள் என நபிகள் கூறினார்கள்.

-புகாரி

### தலைவர் சொற் பேணு

*இறைவனுவக் காத செயலேவா விடத்து*
*நெறியே தலைவர்வழி நிற்க — இறையேவன்*
*மாறுபடவேவின் மறுத்தல் கடனெனவே*
*கூறுநபி நாயகர்சொற் கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருள் :**

இறைவனுவக்காத செயல் ஏவா இடத்து - இறைவனின் ஏவலுக்கு மாற்றமான செயலைச் செய்யுமாறு கட்டளை செய்யாத போது, தலைவர் வழி நெறியே நிற்க - தலைவரின் கட்டளைக்கு இணக்கமாக ஒழுகுவாயாக., இறை ஏவல் மாறுபட ஏவின் - இறைவனின் ஏவலுக்கு மாறான கட்டளையை அவர் பிறப்பித்தால், மறுத்தல் கடன் எனக் கூறும் நபி நாயகர் சொல் கொள் - அதனைச் செய்யாது மறுத்து விடுவது கடன் எனக் கூறிய நபிகள் நாயகம் அவர்களின் வார்த்தையை மேற்கொள்வாயாக.

**விளக்கக் குறிப்பு :**

தலைவருக்கு கீழ்ப்படிய வேண்டும். அதுவும் அவரின் கட்டளை இறைவனின் ஏவலுக்கு மாறில்லாத போதுதான். இறை ஏவல் - திருமறை கற்பிக்கும் கட்டளைகள், மாறுபட ஏவல் - திருமறை விலக்கியவற்றைச் செய்யுமாறு ஏவுதல். நெறியே நிற்றல் - கட்டளைப்படி தவறில்லாது செய்து முடித்தல். இஸ்லாம் என்பதற்குக் கீழ்ப்படிதல் என்பதும் பொருளாகும். தலைவருக்குக் கீழ்ப்படியத் தெரிந்தவன் இறைவனுக்கும் கீழ்ப்படிவான். தனக்கொரு தலைவரிருக்க அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்துவரும் ஒருவன் தவறான வழியிற் பிரவேசியான். இம்மையிலும் மறுமையிலும் இலாப மடைவான்.

**32. நபிமொழி :**

கூலிக்காரன் வியர்வை உலருமுன் கூலியைக் கொடுத்து விடுக.

- புகாரி

## கூலியை யுடனே கொடுப்பீர்

*வேலை முடித்தவரின் வேர்வை யுலர்வதன்முன்*
*கூலி கணக்காய்க் கொடுத்திடுக — கூலி*
*உடன்பெற்றா னுள்ள முறுமகிழ்வே வேலை*
*திடன்பெற்றா லன்ன சிறப்பு.*

**பொருள் :**

வேலை முடித்தவரின் வேர்வை உலர்வதன் முன் - கூலிக்குப் பொருந்திய வேலையைச் செய்து முடித்தவருடைய உடலின் வியர்வை காய்வதற்கு முன்னே, கூலி கணக்காய்க் கொடுத்திடுக - பேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலியைக் குறைவின்றிக் கொடுத்து விடுவீர்களாக, கூலி உடன் பெற்றான் உள்ளம் உறும் மகிழ்வே - வேலை முடித்தவுடனே கூலியைப் பெற்றுக் கொண்டவனது உள்ளம் அடையும் மகிழ்ச்சியின் அளவினதாகவே, வேலை திடன் பெற்றால் அன்ன சிறப்பு - அவன் செய்த வேலையின் உறுதிப்பாட்டின் அளவும் சிறந்து விளங்கும்.

**விளக்கக் குறிப்பு:**

"செய்தவன் மனம் குன்ற ஐவினைப் பயன் கெடும்" என்பது பழமொழி

வேலையை முடித்தவுடன் கைமேல் கூலி கிடைத்தால் வேலை செய்த களைப்பு அவனுக்குத் தெரியாது. மறைந்து விடும். உள்ளம் மகிழும். அதுபோல் வேலையும் உறுதி யடையும். நீடித்திருக்கும். கூலி பெறுவதில் மன மொடிந்தவன் ஒருவன் செய்த வேலை நாளடைவில் பாழ்பட்டுப்போன் உண்மையை நாம் பல தடவைகளில் கண்டிருக்கிறோம். கூலியை உடன் கொடுக்காமலோ, காலந் தாழ்த்திக் கொடுத்தோ, தவணை கூறிக் கடத்தியோ இருப்பின் அவன் மனம் வருந்த நேரும். கணக்காய்க் கொடுத்தல் - பேசிப் பொருந்திய கூலியைக் குறையாது கொடுத்தல், நியாயமான கூலியைக் கொடுத்தல், வழக்கமான கூலியில் குறையாது கொடுத்தல் என்பன.

**33. நபிமொழி :**

நோன்பு துர்க்கிரியைகளையும், நோய்களையும் நரக வேதனையையும் தடுக்கும் கேடயமாயிருக்கிறது.

-புகாரி

## நோன்பை விரும்பி நோற்பீர்

*உபவாசம் நோயதனுக் கொப்பில் மருந்தாம்*
*அபவாதச் செய்கை யகற்றும் — தபவாசி*
*அஞ்சும் நரகத் தவலந் தடுப்பதற்கோர்*
*எஞ்சலிலாக் கேடயமு மீது.*

**பொருள் :**

உபவாசம் நோயதனுக்கு ஒப்பில் மருந்தாம் - நோன்பானது உடல் நோய்க்கு ஒப்பில்லாத மருந்தாகும். (அது) அபவாதச் செய்கை அகற்றும் - அந்நோன்பு கெட்ட செயல்களைச் செய்ய வொட்டாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்து விடும், ஈது - இந்நோன்பானது, தபவாசி அஞ்சும் நரகத்து அவலம் தடுப்பதற்கு - முற்றத் துறந்த முனிவர்களும் கூடப் பயப்படும் வேதனை நிரம்பிய நரகத் துன்பத்தினின்றும் தடுப்பதற்கு ஏற்ற, எஞ்சல் இலா ஓர் கேடயமும் - ஒழிதல் இல்லாத ஒப்பற்ற கேடயமுமாக (அமையும்).

**விளக்கக் குறிப்பு :**

நோன்பினால் உடல் நோய் நீங்கிப் புனிதமடைகிறது. உள்ளம் அபவாதம் நீங்கிப் புனிதமடைகிறது. ஆத்துமா நரக வேதனை நீங்கிப் புனிதமடைகிறது. எனவே உடல், உள, ஆத்தும புனிதத்துக்கு நோன்பு சிறந்த ஔடதமாகிறது. நரக வேதனையின் கொடுமையைத் தெரிந்த தபவாசி அதற்குப் பயந்து உபவாசமிருந்து தவஞ் செய்கின்றான். வைத்தியன் நோய்க்கு மருந்தைக் கொடுத்து உணவு உண்ணாதிருக்கும்படி கூறுவது நாமறிந்ததே.

உபவாசம் - நோன்பு , அபவாதம் - கெடுதி, அவலம் - துன்பம், கேடயம் - எதிரி தாக்கும் படைக்கலத்தைத் தடுக்கும் கருவி, எஞ்சல் - ஒழிதல்.

34. **நபிமொழி :**

தந்தையாகவுள்ள ஒருவன் ஒரு மரக்கால் அளவு ஏதேனும் ஒரு பொருள் தருமஞ் செய்வதை விட அவன் தனது பிள்ளைகளுக்கு ஒழுக்கங் கற்பிப்பதே மேலானதாக இருக்கிறது. (தனயனுக்கு ஒழுக்கம் கற்பிப்பதே தந்தையின் முதற் கடமை).

### மக்களை ஒழுங்காய் வளர்ப்பது கடனே

*தந்தை யொருவன் தருமஞ் சிறிதேனும்*
*சிந்தை யுவந்திங்கு செய்வதினும் — தந்தநன்*
*மக்கட் கொழுக்க வரம்புகற்பித் தாலதுவே*
*மிக்கசிறப் பென்றே விளம்பு.*

**பொருள் :**

தந்தை ஒருவன் சிந்தை உவந்து தருமம் சிறிதேனும் செய்வதினும் - தகப்பனாகவுள்ள ஒருவன் தனது செல்வத்தில் ஒரு சிறிதாவது மனமுவந்து தருமம் செய்வதைவிட, தந்த நல் மக்கட்கு - தான் பெற்றெடுத்த நல்ல புதல்வர்களுக்கு, ஒழுக்க வரம்பு கற்பித்தால் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லொழுக்க விதிகளைக் கற்பிப்பானானால், அதுவே மிக்க சிறப்பு என்றே விளம்பு - அவ்வொழுக்கங் கற்பிப்பதே மிகுந்த சிறப்பாக அமையும் என்று கூறுவாயாக.

**விளக்கக்குறிப்பு :**

தலைகாக்கும் சக்தி வாய்ந்த தருமம் செய்வதை விட தம் மக்களுக்கு ஒழுக்கங் கற்பிப்பது மேலானதாகும். பிள்ளைகள் பெற்றாரின் உரைகல். ஆகையால் பெற்றாரை விளங்கச் செய்யும் மக்களை ஒழுக்கசீலர்களாக்குவது பெற்றாரில் தந்தையின் முக்கிய கடமையாகும். ஒழுக்கமுள்ள பிள்ளையையே சான்றோனெனக் கேட்கலாம். ஒழுக்கங் கெட்ட பிள்ளையைக் ''குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு'' என்பார்கள். சிந்தை யுவந்து கொடுக்கும் தருமம் அதிக பயனுடையது. கல்வியறிவினால் ஒழுக்கத்தைத் தெரிந்து கொள்ள முடியும்.

35. **நபிமொழி :**

மானிடர் தனக்கு மரியாதையாக எழுந்து நிற்பதில் மகிழ்ச்சியடைகிறவனுடைய முடிவான வாசஸ்தலம் நரகமாகும்.

-துர்மதி - அபூதாவூ த்

## மனிதர் மதிக்க மகிழேல்

*தன்வரவு கண்டுபிறர் தன்னை மதித்தெழுந்து*
*முன்வரவு செய்து முடிசாய்த்தல் — தன்வரிசைக்*
*கேற்ற தெனமகிழ்ச்சி யெய்துவான் புன்னரகச்*
*சேற்றி லழுந்துமெனச் செப்பு.*

**பொருள் :**

தன் வருகை கண்டு - தனது வருகையைக் கண்டு, பிறர் தன்னை மதித்து எழுந்து - மற்றையோர் தன்னை மேலாக மதித்து எழுந்து நின்று, முன்வரவு செய்து - முன் வந்து வரவேற்று, முடி சாய்த்தல் - தலை வணங்குதல், தன் வரிசைக்கு ஏற்றது என - தனது பெருமைக்கு ஏற்றதுதான் என்று, மகிழ்ச்சி எய்துவான் - சந்தோஷம் அடைபவன், புல்நரகச் சேற்றில் அழுந்தும் எனச் செப்பு - மறுமையில் இழிவான நரகச் சேற்றிலே விழுந்து அழுந்துவான் என்று கூறுவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு :**

தன்னைப் பிறர் மதிக்கிறார்களென்றால் அதில் தவறில்லை. ஆனால் பிறர் தன்னை மதிக்க வேண்டுமென விரும்புவதும் அவ்வாறு மதித்து வரவேற்பது தனக்குத் தக்கதுதான் என நினைப்பதும் அதனைக் கண்டு மகிழ்வதும்தான் தப்பு. பிறர் தன்னை மதிக்க வைத்த இறைவனுக்கே புகழ் எனக் கொண்டு அவனை ஸ்தோத்தரித்தலே முறையாகும்.

முன்வரவு செய்தல் - வரவேற்று உபசரித்தல். முடி சாய்த்தல் - தலை வணங்குதல், வரிசை - அந்தஸ்து, அழுந்தும் - செய்யுமென் முற்று.

36. நபிமொழி :

சகோதரருக்குள் இளையவன் பேரில் மூத்தவனுக்குள்ள கடமையானது மகன் பேரில் தந்தைக்குள்ள கடமையைப் போன்றது.

- பைஹகி

## தலைச்சன் தந்தைக்கு நேர்

*அம்புவியில் முன்பிறந்தா னன்புடனே பின்பிறந்த*
*தம்பிதனுக் காற்றும் தகுதிபெறும் — நன்கடன்தான்*
*தந்தை தனயற்குத் தான்செய் கடன் போன்றே*
*முந்தைநபி சொன்ன மொழி.*

**பொருள் :**

தந்தை தனயற்குத் தான் செய்கடன் போன்றே - ஒரு தகப்பன் தன் மைந்தனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எவையோ அவை போன்றெ, அம்புவியில் முன் பிறந்தான் - உலகத்திலே ஒரு வயிற்றில் முன்னே பிறந்த தமையனானவன், அன்புடனே பின் பிறந்த தம்பிதன்கு - தனது அன்புக்குப் பாத்திரனான தனக்குப் பின்னே பிறந்த தம்பிக்கு, நன்கடன் தான் ஆற்றும் தகுதி பெறும் - நல்ல கடமைகளைச் செய்யும் தகைமையினைப் பெறுவான், முந்தை நபிசொன்ன மொழி - இது நபிகளுக்கெல்லாம் முந்திய நபியாகிய முகம்மது (ஸல்) அவர்கள் சொன்ன மொழியாகும்.

**விளக்கக் குறிப்பு :**

ஒரு குடும்பத்தின் மூத்தவன் தந்தையின் ஸ்தானத்திலிருந்து தனக்குப் பின் பிறந்தோருக்குரிய கடமைகளைச் செய்ய வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தஸ்தும் பொறுப்புமுள்ளவனாகிறான். மகன் மீது தந்தைக்குள்ள கடமைகள் அவனை விட்டு நீங்காததுபோல தந்தையில்லாதபோது அத்தனை கடமைகளும் தம்பியின் மீது தமையனை விட்டு நீங்காவாம். ஒழுக்கங் கற்பித்தல், தொழிலுக்கு வழி காட்டுதல், சாலிஹான பெண்ணை விவாகஞ் செய்து வைத்தல், என்பன தந்தையின் கடமைகளாகும். தமையன் தந்தையின் கடமைகளை ஏற்பது பொலவே, தம்பி தமையனைத் தந்தையின் ஷஸ்தானத்தில் வைத்து மதித்தலும் வேண்டும்.

தனயன் - மைந்தன், முந்தை - முந்திய, அம்புவி - அழகிய உலகம், தகுதி - அந்தஸ்து.

37. நபிமொழி :

ஒரு தாயையும் அவளின் பிள்ளையையும் பிரித்து விடுகிறவனை இறுதித் தீர்ப்பு நாளன்று அவனுடைய அன்புக்குரியவரை விட்டு அல்லாஹ் பிரித்து விடுவான்.
-திர்மதி

## சேயைத் தாயிற் பிரியேல்

*பிள்ளைமனம் பேதலிக்கப் பெற்றவளை வேறாக்கித்*
*தள்ளிவைக்கும் பொல்லாத் தறுகணனை — வள்ளல்தான்*
*அந்நா ளவனுடைய அன்பரின்வே றாக்கிடுவான்*
*எந்நா யகர்வாக் கிஃது*

பொருள் :

பிள்ளை மனம் பேதலிக்க - குழந்தையின் மனம் பதற, பெற்றவளை வேறாக்கி - பெற்ற தாயைக் குழந்தையை விட்டுப் பிரித்து, தள்ளி வைக்கும் பொல்லாத் தறுகணனை - தூரத்தில் ஆக்கிலிடும் பொல்லாத கொடியவனை, வள்ளல்தான் - இறைவனே, அந்நாள் - மறுமையில், அவனுடைய அன்பரின் வேறாக்கிடுவான் - அவனுடைய அன்புக்குரியவரை அவனை விட்டும் வேறாக்கிப் பிரித்து வைப்பான், இது எம் நாயகர் வாக்கு - இது எங்கள் நபிகளின் பொன் மொழியாகும்.

விளக்கக் குறிப்பு :

பெற்றவளை விட்டுப் பிள்ளையைப் பிரிப்பது மிக மிகப் பரிதாபமான செயல். பெற்றவளுக்குப் பிள்ளையின் மீதுள்ள பாசம் நிகரற்றது. பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் அரவணைப்பில் வளர வேண்டியது. பிரிக்க முடியாத இயற்கைத் தொடர்புள்ள இரு ஆத்துமாக்களை பலவந்தமாகப் பிரிப்பது பாவம். அக்கொடுமை இழைப்போர் மறுமையில் அது போன்ற துயரத்தை அனுபவிப்பார்கள். இங்கு அன்பு பூண்டுள்ளவர்களுக்கு அன்புப் பிணைப்பு மறுமையிலும் உண்டு என்பது இந்த நபிமொழி மூலம் புலனாகும். தெய்வாதீனமாகத் தாயும் சேயும் பிரிக்கப் படுகிறார்களே யென்றால் பின்னால் நன்மை பயக்கத்தக்க முக்கியமான காரணங் கொண்டு முன்னேற்பாட்டுடன் நிகழும் தெய் நியதி அது. தெய்வ நியதியை மக்கள் புரிந்து கொள்ளும் ஆற்றலிலர். மக்கள் தெய்வ நியதிக்கு ஒருப்பட வேண்டியவரே.

பேதலித்தல் - மனம் பதறுதல், தறுகணன் - கொடியவன், வள்ளல் - கைம்மாறு கருதாது வழங்கும் இறைவன், அந்நாள் - மறுமை.

எம் + நாயகர் = எந்நாயகர்.

**38. நபிமொழி :**

அல்லாஹ் அருளிய சொற்ப செல்வத்தால் திருப்தியடைகிறவனுடைய சொற்ப நற் செயலால் அல்லாஹ் திருப்தியடைகிறான்.

- பைஹகீ

## கிடைத்தது கொண்டு திருப்தியடை

*உள்ளதே போதுமென வோர்ந்து நிறைவுகா*
*ணுள்ள முடையா னுவந்தாற்றும் — நல்ல*
*சிலவினையில் வல்லோன் திருப்திகொள்வா னென்றார்*
*நலமுடைய நாயகனார் நன்கு.*

**பொருள் :**

நலமுடைய நாயகனார் - நல்லனவற்றையே சொல்லியும் செய்தும் காட்டிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உள்ளதே போதும் என ஓர்ந்து நிறைவு காண் உள்ளமுடையான் - தனக்குக் கிடைத்த பொருளே போதும் என்று மனத்திருப்தியடையும் ஒருவன், உவந்து ஆற்றும் நல்ல சிலவினையில் - விரும்பிச் செய்யும் சொற்ப நல்ல செயல்களைக் கொண்டே, வல்லோன் நன்கு திருப்தி கொள்வான் என்றார் - இறைவன் நன்கு திருப்தியடைவான் என்று கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கக் குறிப்பு :**

இறைவன் அருளிய சொற்ப பாக்கியத்தைப் போதும் என்று நிம்மதியாய் வாழ்வதனால் அவனது சொற்ப நல்ல செயலும் போதும் என இறைவனும் திருப்தியடைகிறான். மனிதனுடைய தேவைக்குப் போதிய அளவு செல்வத்தை யருளுபவன் இறைவன். தனது சக்திக்குட்பட்ட நல்ல கருமங்களைச் செய்யக் கடமைப்பட்டுள்ளவன் மனிதன். அவன் அருளியதில் திருப்தியடைந்த மனிதனின் சக்திக்குட் படச் செய்த நல்ல கருமங்களிலும் இறைவன் திருப்தியடைகிறான். பெருத்த செல்வத்தை அனுபவிக்க விரும்பும் மனிதனிடத்திலிருந்து கூடிய நல்ல கருமங்களையும் இறைவன் எதிர்பார்ப்பது நியாயமாகும்.

''போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என்பது பழமொழி.

ஓர்ந்து - உணர்ந்து, நிறைவு - திருப்தி, ஆற்றுதல் - செய்தல், வினை - செயல்.

**39. நபிமொழி :**

வெட்கம் ஈமானின் அம்சமாகும். ஈமானுக்குரிய இடம் சொர்க்கமாகும். வெட்கமின்மை ஆபாசத்தினிடமாகும். ஆபாசத்துக்குரிய இடம் நரகமாகும் என நபிகள் கூறினார்கள்.

- அஹமத் - திர்மதி

## வெட்கமின்றேல் சொர்க்கமில்லை

*நாணுடைமை யீமானின் நல்லம்ச மஃதின்பங்*
*காணுஞ் சுவர்க்கப் பதிகாட்டும் — நாணின்மை*
*ஆபாசஞ் சேர்க்கு மதுசே ரிடம்நரகாம்*
*மாபாசங் கூட்டும் மருள்.*

**பொருள் :**

நாண் உடைமை ஈமானின் நல் அம்சம் - வெட்கம் ஆனது ஈமானின் ஒரு முக்கியமான பங்காகும். அஃது இன்பங்காணும் சுவர்க்கப் பதி காட்டும் - அவ்வெட்கமுடைமை இன்பம் நிறைந்த சுவர்க்க வாழ்வைக் காண்பிக்கும், நாண் இன்மை ஆபாசம் சேர்க்கும் மாபாசம் கூட்டும் மருள் - வெட்க மின்மையானது கெடுதிகளை யெல்லாம் சேகரிப்பதற்கு மிகுந்த பிரியத்தை உண்டாக்கக் கூடிய ஒருவகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயக்கமாகும். அது சேர் இடம் நரகாம் - அது கொண்டு சேர்க்குமிடம் நரகமாகும்.

**விளக்கக் குறிப்பு :**

வெட்கமுள்ளவன் கெடுதியின் பக்கம் திரும்பான். உலகம் நகைக்குமெனப் பயந்து உலகம் உவக்கும் கருமங்களையே செய்வான். அதனால் இறைவனும் அவனை உவக்கிறான். சுவர்க்க வாழ்வளிக்கிறான்.

''வெட்கமில்லாதவனுக்குச் சொர்க்கமில்லை'' என்பது பழமொழி.

யார் எதைச் சொன்னாலென்ன, நான் நினைத்ததைச் செய்வேனெனத் துணிபவனுக்கு எந்தக் கெட்ட செயலும் விலக்காயிராது. அதனால் பாபம் சேரவும் தடை ஏற்படாது. முடிவு நரகந்தான். ஆகவே தான் வெட்கம் ஈமானின் முக்கிய பங்காயிருக்கிறது. ஈமானுள்ளவன் வெட்க முள்ளவனாயிருப்பான். பொருள் சேகரிக்க வேண்டுமென்ற பேராசை தலைக்கேறியவன் களவெடுக்க, பொய் சொல்ல, ஏமாற்ற, வாக்குமாற, பழி பாவங்களைச் செய்ய அஞ்சான். இத்தகையவனுக்கு வெட்கமேது?

அம்சம் - பங்கு, ஆபாசம் - கெடுதி, பாசம் - விருப்பம்.

**40. நபிமொழி :**

**மனித சரீரத்தில் ஒரு துண்டு இறைச்சியிருக்கிறது. அது சீர்பெற்றிருந்தால் சரீரம் முழுவதும் சிர்பெற்றிருக்கும். அது சீர்கெட்டுவிட்டால் சரீரம் முழுவதும் சீர்கெட்டுவிடும். அதுவே இருதயமாகும். -புகாரி.**

## உள்ளம் புனிதமா உடலும் புனிதமே

*ஒன்றுமூன் துண்டொன் றுடலி லுளததுதான்*
*நன்றா மிதய மெனநவில்வார் — குன்றாமல்*
*சீருற்றா லஃதுடலஞ் சீரா மதுகெட்டால்*
*சீரற்ற தாமுடலந் தேர்.*

**பொருள் :**

உடலில் ஒன்றும் ஊன் துண்டு ஒன்று உளது -உடலிலே பொருந்திய இறைச்சித் துண்டு ஒன்று உண்டு, அதுதான் நன்றாம் இதயம் என நவில்வார் - அதுவே நல்ல இருதயம் என்று கூறுவார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ஼து சீர் குன்றாமல் உற்றால் - அவ்விருதயம் செம்மை குறையாது புனிதமாக இருக்குமாயின், உடலம் சீராம் - நமது உடலும் செம்மையாக இருக்கும். அது கெட்டால் - அவ்விருதயம் சீர் கெட்டுப் போனாலே, உடலம் சீர அற்றதாம் - நமது உடலும் சீர் கெட்டுப் போகும். தேர் - இதை நன்கு அறிந்து கொள்வாயாக.

**விளக்கக் குறிப்பு :**

இருதயம் புனிதமாயிருந்தால் எண்ணங்களும் புனிதமாயிருக்கும். அதனால் சொல்லும் செயலும் புனிதமாகும். இருதயத்தின் புனிதத்துவம் அதனாலியக்கப்படும் உடலெங்குஞ் செறிய உடலம் புனிதமாகிறது. ஒருவனது சொல்லும் செயலும் புனிதமாகக் காண்பவர் அவரையே புனிதராகக் காண்கிறார். இதனால் உடலும் புனிதத்துவமடைகிறது. உடல் ஈடுபடுங் கருமங்களும் புனிதமானவையாகவே அமைகின்றன. இருதயம் அசுத்தமடையின் எண்ணம் சொல் செயல் யாவும் அசுத்தமாகவே அமையும். அதனால் உடலம் கெட்டு அவலம் அடைகிறது. எனவே எப்பொழுதும் இருதயம் புனிதமாயிருக்க முயற்சித்தல் வேண்டும்.

ஒன்றுதல் - பொருந்துதல், ஊன் - இறைச்சி,

**– முற்றும் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலவியல்

# நாற்பது

(உரையுடன்)

புலவர்மணி
அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன்
மருதமுனை

உரையாசிரியர்:
முகம்மது நயீம் ஷரிபுத்தீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை.......

இலங்கை சாஹித்திய மண்டலப் பரிசுபெற்றுத் தந்தது நேரிசை வெண்பாக்களாலான "**நபி மொழி நாநாற்பது**" என்னும் எனது முதலாவது கவிதை நூல்.

எனது எழுபத்தேழு வருட அனுபவத்தைப் பிற்சந்ததியினர் படித்துப் பயனடைய வேண்டும் என்பது எனது பேரவா. இஸ்லாமிய நெறிமுறைகளையும் உலகியல் வழிமுறைகளையும் இக்கால் நிலையில் அவர்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமென்னும் ஆவலினால் பழந்தமிழ் இலக்கியங்களின் தழுவலாக இன்னிசை வெண்பாக்களால் இந்நூலைச் செய்தேன்.

நான் அனுபவித்து நன்மை கண்ட கருத்துக்கள் சிலவற்றைத் திரட்டி "**நலவியல் நாற்பது**" என்னும் இந்நூலைச் செய்தேன். எனது பிறசந்ததியினர் இந்தக் கருத்துக்களைத் தெரிந்து கைக்கொள்வார்களானால் எனது அனுபவம் முழுமை பெறும் என்பது எனது நம்பிக்கை. நான் கவிதையாக இதனைச் செய்த பொழுது "இதற்கு உரை வேண்டும். அதை நான் செய்கிறேன்" என்று என் மகன் முஹம்மது நயீம் ஷரிபுத்தீன் ஏற்றுக் கொண்டார்.

**ஆ. மு. ஷரிபுத்தீன்**
பெரிய நீலாவணை
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சமர்ப்பணம்......*

செந்தமிழைக் கற்றுச் சிறப்படையும் நல்லெண்ணம்
சிந்தையிலே கொண்டென்னைச் சேரவைத்த – தந்தையெனும்
ஆதம்தாய் பாத்திமா ஆகும் சமர்ப்பணமே
போதம் தெரிக்குமிந் நூல்

*காப்பு....*

இலகொளி யிறைவனை யிருந்தலை தாழ்த்தி
நலவியல் புகல்மொழி நாற்பதும் மொழிவாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலவியல் நாற்பது

1. அறிவுயர் கல்வித் தெளிவும் நலமே
நெறிபடு முண்மை யொழுக்கம் நலமே
வறியவர்க் கொன்றும் வழங்கல் சுகந்த
நறியன பூண்டல் நலம்

**இதன்பொருள் :** உயர்வுதரும் கல்விதனைக் கற்று அறிந்து தெளிவு பெறுதல் நன்மை பயக்கும். நேர்வழிப்படுத்தத் தக்க உண்மையும் ஒழுக்கமும் நலமே. வறியவர்க்கும் தேவை கண்டு கொடுத்தலும், நல்ல, வாசனைப் பொருட்களைப் பூசிக் கொள்ளலும் நலமாகும்.

"நறுமணமும் பெண்ணும் நான் விரும்புபவையாக்கி
வைத்தேன்" - நபிமொழி

2. தினமும் இறைநாமம் எண்ணல் நலமே
சனமும் பணமு மிருப்பின் நலமே
குணமுளாள் பெண்ணைக் குமரன் தெரிதல்
மணமாகும் ஆயின் நலம்.

**இதன்பொருள் :** எந்நாளும் இறைவன் திருநாமத்தை நினைப்பது நல்லது. இனசனத்தாரும், பணமும் இருக்குமாயின் வாழ்வு சிறக்கும். நல்ல குணவதியான ஒரு பெண்ணைத் தனது வாழ்க்கைத் துணையாக வயது வந்த ஒரு ஆண்மகன் தெரிந்து மணந்து கொள்வதால் வாழ்வு நிறைவு பெறும்.

"அழகில்லையாயினும் குணத்தையே தேடு"

3. எதிலும் புதுமைகள் காண்டல் நலமே
விதியை யொழுங்காகப் பேணல் நலமே
பதியைப் பணிந்தார்க்கு வாய்க்கும் இனிய
துதியைப் புரிதல் நலம்.

**இதன்பொருள் :** எதைச் செய்யினும் அதில் முற்றாகப் பழமையே தழுவாது ஒரு விசேடத்தைப் புகுத்திப் புதுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணல் வேண்டும் கட்டாயக் கடமைகளைத் தவறாது ஒழுங்காகச் செய்தல் வேண்டும். இறைவனைத் தினமும் துதிப்பவர்க்கும் தலைவனைப் பணிந்து நடப்பவர்க்கும் நிறைய நன்மைகள் சித்திக்கும்.

"நன்மையும் தீமையும் நாயன்புறத்தது எனநாம்
ஒப்புக் கொண்டிருக்கிறோம்."

4. *நடத்துவா னுண்டு நடக்கும் நலமே*
*விடத்தகா தெல்லாம் விரும்பல்*
*மடக்கொடி யார்க்குப் பணிவும் இனிதே*
*நடத்துவார்க் குண்டு நலம்.*

இதன்பொருள் : யாவற்றையும், நடத்திக் கொண்டிருக்கின்ற தனிமுதல்வனாகிய இறைவன் செய்வதனைத்தும் நன்மை பயக்கும். செய்யத்தக்க கருமங்களை-யெல்லாம் செய்ய விரும்புவது நலமே. பணிந்து நடக்கும் பண்புடையவளாகப் பெண் அமைவதும், அவளை வழிநடாத்தும் கணவன் இனிய நேர்மைக் குணாணனாய் அமைவதும் நன்மை தரும். இருவர்க்கும் இறைபொருத்தம் கிட்டும்.

"பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்" - ஔவையார்.

7. *கணுக்கால் தெரிய வுடுத்தல் நலமே*
*மனுக்குலத்தார் உள்ளம் துலக்கல் நலமே*
*இணக்கம் பெறுவார் இகலாது சால*
*மணப்பரே லுண்டு நலம்.*

இதன்பொருள் : உடை உடுத்தும் பொழுது கணுக்கால் தெரியுமாறு உடுத்தல் வேண்டும். அழுக்காகவும், அசுத்தம் சேர்வதும் இதனால் தடுக்கப்படும். மனிதரது உள்ளம் தெளிவடையும் வழிகளைக் கையாளுதல் நன்மை பயக்கும். நட்புக் கொள்பவர் கோபிக்காத வகையில் நடக்க முடியுமாயின் அது மிகுந்த நன்மை தரும். "சுத்தம் சோறிடும்" - பழமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. *வருமானம் ஒன்று வகுத்தல் நலமே*
*பிறர்தய வில்லாமல் வாழ்தல் நலமே*
*ஒருவருக்கு நாளும் உணவளிக்கும் நேமம்*
*விரும்பாமை கோடி நலம்.*

**இதன்பொருள் :** எவருக்கும் நிரந்தர வருமானம் வரத்தக்க தொழில் ஒன்று இருத்தல் ந்னமை பயக்கும். பிறருடைய தயவில்லாமல் வாழ முயலுதல் வேண்டும். எந்நாளும் ஒருவரை மட்டுமே ஆதரிக்கும் கொள்கையை விரும்பாமல் விடுவது மிக மிக நல்லதாகும்.

"தன்கையே தனக்குத்துணை
பலருக்கு ஒரு நேர உணவளிக்கலாம். ஆனால்
ஒருவருக்குப் பலநேர உணவளிக்க முடியாது."

9. *அளவோடு நிற்றல் அதிக நலமே*
*உளவாகுமத் நிலைமை யுணர்தல் நலமே*
*வளமான வாழ்வின் வளத்தக்கார்க் கின்று*
*விளையாடு மூரே நலம்.*

**இதன்பொருள் :** தனது கல்வி, கேள்வி, செல்வம் முதலான அனைத்திலும் அளவை அறிந்து, அந்த அளவுக்கேற்ற வகையில் நின்று கொள்வது ந்னமை பயக்கும். தனக்குச் சொந்தமான பொருளின் அளவைத் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். செல்வத்தால் ஒருவன் வளமான வாழ்வு வாழ்கின்றானென்றால் அவனை ஊர் மதித்துப் போற்றும்.

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம்" - பழமொழி

10. *பொருந்தும் கணவரைத் தேர்தல் நலமே*
*விருந்தோம்பு வார்கன்பு மேவும் நலமே*
*அருந்தியது தந்த அருளாளன் நாமம்*
*பொருந்த வுரைத்தல் நலம்.*

**இதன்பொருள் :** பொருத்தமான குணநல இயல்புடைய கணவரைத் தேர்ந்தெடுத்தல் ஒரு பெண்ணுக்கு நன்மை பயக்கும். விருந்தோம்புபவர்களுக்கு அன்பு அதிகரிக்கும். உண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவைத் தந்த அருளாளனாகிய இறைவனுக்கு அவன் நாமத்தை மொழிந்து நன்றி செலுத்துவது மிகுந்த நன்மையைச் சேர்க்கும்.

11. *உதாசீனஞ் செய்யா வுணவு நலமே*
*யதார்த்தமே பேணும் விரதம் நலமே*
*பதாதி யுடலின் பரிசுத்த ராதற்*
*குதாரண மாதல் நலம்.*

இதன்பொருள் : தள்ளிவிடப்படாத உணவுப்பொருள் நன்மை பயப்பதாகும். உண்மை பேசுவதை நோன்பாகக் கொள்வது விரும்பத்தக்கது. பிறர் பார்த்துத் தாங்களும் பின்பற்றக் கூடியதாக பாதம் முதல் உடலின் எல்லா உறுப்புக்களும் பரிசுத்தமாக இருக்கும் நிலை மிகவும் நல்லதாகும்.

"உண்மைக்கு ஒருபோதும் அழிவில்லை" - பழமொழி

12. *படிப்பு பகுத்தறிவைத் தூண்டின் நலமே*
*படித்தார் சமூகத்தைப் பார்ப்பின் நலமே*
*படித்தார்க் குதவி பலவும் புரிந்து*
*படிப்பை வளர்த்தல் நலம்.*

இதன்பொருள் : பகுத்தறிவை விருத்தி செய்யத்தக்க கல்வி நன்மை பயப்பதாகும். படித்தவர் தமது சமூகத்தின் நிலைமையை ஆராய்ந்த பார்த்து தனது சக்திக்குட்பட உதவுதல் நல்லது. படிப்பவர்கட்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்து படிக்க வைப்பது சாலச் சிறந்ததே.

"கல்விக்கு உயிரைக் கொடுத்தவன் மரணிப்பதில்லை" - நபிமொழி

13. *அயலாரை யண்டி யொழுகல் நலமே*
*தயவோ டனாதையைத்தாங்கல் நலமே*
*வயமிழந் தார்க்கும் வழியொழிந் தார்க்கும்*
*நயமிருப்ப வைத்தல் நலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதன்பொருள் :** அந்தரத்தில் உதவும் அயல்பாகக் காரரை நோவிக்காமல் ஒற்றுமையாக வாழ்தல் நன்மை பயப்பதாகும். உதவுவதற்கு யாருமில்லாத அனாதைகளுக்கு தயவோடு பாதுகாப்புக் கொடுத்தல் வேண்டும். பலமிழந்த வயோதிபர்களுக்கும், வாழ வழியின்றித் தவிப்பவர்களுக்கும் தம்மாலான உதவிகளைச் செய்து அவர்களை வாழ வைப்பது நலமான காரியமாகும்.

**14.** ***சிறுவர்க் குரியவுரை செப்பல் நலமே***
***வறுமையிலும் ஏற்ப வழங்கல் நலமே***
***அறுதாலி கட்டி யனுதாபங் கொள்ளல்***
***பெறுவார்க்கு முண்டு நலம்.***

**இதன்பொருள் :** சிறுபிள்ளைகளுக்கு ஏற்ற நல்லுபதேசங்களைக் கூறிக் கொண்டிருத்தல் அவர்களுக்கு நன்மை பயப்பதாகும். தமக்கு வறுமை வந்துற்ற போதும் பிறருக்கு உதவக் கூடியதை உதவுதல் வேண்டும். ஒரு விவாகம் பிரிய இருக்கும் நிலையில் கூடியவரை முயற்சித்து அது பிரியாமற் செய்ய முடியுமானால் அதனால் முயற்சித்தவர்க்கும் சேர்ந்து வாழ ஒருப்பட்டவர்க்கும் நன்மை உண்டாம்.

**"இறைவன் தான் ஆகுமாக்கியதில் அதிகம் அவன் வெறுப்பது மணமுறிவு ஒன்றையேதான்" - நபிமொழி**

**15.** ***இறைதுணை நிற்கும் பொறுமை நலமே***
***துறைபோகக் கற்றால் துலங்கும் நலமே***
***மறையோதிப் பெற்ற மார்க்க முறையில்***
***நெறிநீதி செய்தல் நலம்.***

**இதன்பொருள் :** தெய்வம் துணை நிற்கின்ற பொறுமையை கடைப்பிடித்தல் மிக்க நன்மை பயப்பதாகும். எந்தத் துறையில் கற்றபோதும் அதில் நிபுணத்துவம் பெறும் வகையில் கற்றுத் தெளிதல் நலமாகும். மக்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு மார்க்கத்தை நன்பு கற்றுத் தேர்ந்த அறிஞர் பெருமக்கள் தீர்வு காணுதல் நலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அல்லாஹ் பொறுமையாளருடனிருக்கிறான்" - குர்ஆன்

16. *பகுத்துணர்வைத் தூண்டினிது வாழ்தல் நலமே*
*வகுத்த திதிக்குள் வழங்கல் நலமே*
*ஒகுத்துவர நாளும் தொழுதல் தொழுகை*
*மிகுபக்தி சேரின் நலம்.*

இதன்பொருள் : இயற்கையான அமைந்துள்ள பகுத்தறிவை நன்கு பயன்படுத்தி வாழ்தல் நன்மை பயப்பதாகும். தவணை சொல்லி வாங்கிய பொருளை அத்தவணை தப்பாது திருப்பிச் செலுத்துதல் வேண்டும். நேரம் வந்ததும் உடன் தொழுதலும், அத்தொழுகை பக்தி நிறைந்ததாயமைதலும் நலமாகும்.

"ஒகுத்து : குறிப்பிட்ட நேரம்"

17. *கரிகூற அழைப்பின் கலத்தல் நலமே*
*உரியாரைத் தேடிக் கொடுத்தல் நலமே*
*எரிவாய் நரகில் உகுக்கும் வினைகள்*
*அரிதேயும் நீங்கல் நலம்.*

இதன்பொருள் : சாட்சியம் கூற அழைக்கின்றபோது மறுப்பின்றி சென்று கூறுதல் நன்மை பயப்பதாகும். கண்டெடுத்த பொருளை உரியவரைத் தேடிக் கொண்டுபோய்க் கொடுத்தல் நலமாகும். நரக நெருப்பில் சேர்ப்பிக்கும் தீவினைகள் சிறிதாயினும் செய்யாதிருத்தல் நன்மையின் பால் கொண்டு சேர்க்கும்.

"வழியிலே கண்டால் எடு. உடையானைத் தேடிக்கொடு" - பழமொழி

18. *படுதூறு பேசாது மௌனம் நலமே*
*அடுபோரி லஞ்சா ஆண்மை நலமே*
*உடுமான மின்றி யொதுங்குவார் காணின்*
*கடிதாக வீதல் நலம்.*

இதன்பொருள் : பிறரைப்பற்றி அவதூறான வார்த்தைகளைப் பேசாது மௌனமாயிருத்தல் நன்மை பயப்பதாகும். நெருங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று போராடும் யுத்தத்தில் பயமின்றித் தமது ஆண்மையைக் காட்டுதல் நலமே. உடுக்க உடையின்றி ஒதுங்கி வாழும் மக்களை அறிந்து மிக்க விரைவாக, முடிந்தவரை அவர்களுக்கு உடுமானங்கள் கொடுத்து உதவுதல் நன்மை தரும்.

"மௌனம் கலஹ நாசம்" - பழமொழி

19. *மறந்தபொருள் மீட்டு வழங்கல் நலமே*
*இறந்தவரின் நன்மை யிசைத்தல் நலமே*
*வறந்தபயிர் நீர்க்கால் வழங்கல் அதனிற்*
*சிறந்தது முண்டோ நலம்.*

**இதன்பொருள் :** மறந்து விட்டுச் செல்லும் பிறர் பொருட்களைப் பவுத்திரமாக வைத்திருந்து கொடுத்தல் நன்மை தரும் செயலாகும். இறந்து போனவர்களின் நன்மையான காரியங்களை மட்டும் சிலாகித்துக் கூறுதல் சிறப்புடையதாகும். நீர் தேடி எங்கும் செல்ல முடியாத, நீரின்றிக் காயும் பயிருக்கு நீர் பெறும் வழியைக் கண்டு கொடுத்தலை விடச் சிறந்த தருமம் வேறொன்றுமில்லை.

20. *குடிபோதை தீது விடுதல் நலமே*
*மடிசூதும் தீது விலகல் நலமே*
*கொடிகட்டி நேர்ச்சை கொளலும் பேயை*
*குடிவிட்டுப் போக்கல் நலம்.*

**இதன்பொருள் :** மதியை மயக்கத் தக்க பொருள் எதுவாயினும் அதனை உபயோகிக்காமல் விடுதல் நன்மை பயக்கும். வறுமையை வருவிக்கும். சூதும் அணுகாதவாறு காத்துக் கொள்ளல் நன்மையே. நேர்ச்சை செய்து, கொடிகட்டி வழிபடுதலும், பேயை நம்பி அதற்காக நேரத்தையும், பணத்தையும் செலவிடும் அறியாமையை அடியோடு அகற்றிவிடுதல் நலமாகும்.

"சூதும் வாதும் வேதனை செய்யும்" - பழமோழி
"குடி குடியைக் கெடுக்கும்" - பழமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. *எதிருரைக்கே யேற்ற பதில்தான் நலமே*
*சதிகாரர் சார்பை விடுதல் நலமே*
*புதிர்போட்டுப் பேசிவரும் பொல்லாதவரை*
*எதுவிதத்தும் நீங்கல் நலம்.*

**இதன்பொருள் :** முன்னுக்கு முன்னாகப் பேசும் பேச்சுக்குத்தான் தக்க பதிலுரைப்பது நன்மை பயக்கும். பிறருக்குச் சதி நினைப்போரையும், செய்வோரையும் சாராது ஒதுங்கி விடுதல் நன்மை தரும். விளக்கமின்றி ஒன்றை மற்றொன்றாக விளங்கத் தக்கதாகப் பேசுபவரை நெருங்காதிருத்தல் எவ்வகையினும் மேன்மையுடைய செய்கையாகும்.

"கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான்" - பழமொழி

22. *பரிகாசப் பேச்சினைப் பேசாய் நலமே*
*தெரிந்ததையே வாய்வழங்கித் தீரல் நலமே*
*தெரியாத தொன்றைத் தெரியா தெனலே*
*சரியாகு மான்ற நலம்.*

**இதன்பொருள் :** பரிகாசம் பேசுதல் எல்லோருக்கும் பிடிக்காதாகையால் அதனைப் பேசாது விடுதல் நன்மை பயப்பதாகும். தெரிந்த செய்தியை மட்டுமே பேசுதல் வேண்டும். தெரியாததொன்றைத் தெரியாது எனக்கூற வெட்கப்படக்கூடாது. பிழையாகக் கூறும்போது பிரச்சினைகள் உருவாகக் கூடும்.

23. *வரலாறு காண விழைதல் நலமே*
*பரலோக வாழ்வதனை நம்பல் நலமே*
*உரமின்றிப் பேசும் நயவஞ் சகரைத்*
*தெரியாமல் நீங்கல் நலம்.*

**இதன்பொருள் :** தனதும், குடும்பத்தினதும், கிராமத்தினதும், நாட்டினதும் வரலாறுகளை அறிந்துகொள்ள விரும்புவது, முயல்வது நன்மை பயக்கும் செய்கையாகும். மறுமை ஒன்று உண்டு என நம்புதல் வேண்டும். நெஞ்சில் ஒன்றும் வாயில் ஒன்றுமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் நயவஞ்சகத்தனம் உள்ளவர்களை அவர்கள் அறியாதவாறு விலகுதல் நன்மை தரும்.

"துட்டனைக் காணத் தூர விலகு" - பழமொழி

24. *பழங்கால வாழ்வினை எண்ணல் நலமே*
*விளங்கும் படியொன்றை விள்ளல் நலமே*
*இளங்காதற் சோடி யிணையைப் பிரிக்கும்*
*வழங்காரை வைதல் நலம்.*

**இதன்பொருள் :** தனது முன்னைய வாழ்வினை எண்ணிப் பார்ப்பது தற்கால வாழ்வினுனுக்கு நன்மை பயக்கும் செய்கையாகும். பிறருக்கு நன்கு விளங்கிக் கொள்ளத் தக்கதாக மொழிதல் நலமாகும். காதலித்த இருவரிடை குறுக்கிட்டு அவர்களைப் பிரித்துவிடும் வழங்காதவர்களை ஏசி விலக்கல் நன்மை தரும்.

"பழைய நிலையை எண்ணிப் பார்க்கப் பரமசிவனும் படியளப்பான் " - பழமொழி

25. *பெரியாரின் ஆசி பெறுதல் நலமே*
*கரிகூறி னுண்மை யுரைத்தல் நலமே*
*மரியாதை மற்றோர் செயக்கண்டால் நீயும்*
*மரியாதை செய்யின் நலம்.*

**இதன்பொருள் :** பெரியவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முயலுதல் நன்மை பயப்பதாகும். சாட்சி சொல்ல அழைக்கப்பட்டால் கண்டதை, கேட்டதை, ஒழியாமற் கூறுதல் நன்மையான செய்கையாகும். எந்த வர்க்கத்தாராயினும் பெரியவர் ஒருவருக்கு மற்றவர்கள் மரியாதை செய்வதைக் கண்டால் நாமும் அவருக்கு மரியாதை செய்வதே நலமாகும்.

"ஒரு சாகியத்தாராற் கௌரவிக்கப்படுபவரைக் கண்டால் நீரும் அவரைக் கௌரவிப்பீராக" - நபிமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. குருவி னுபதேசங் கொள்ளல் நலமே
மருவாரை நட்பாய்க் கொளாமை நலமே
இருபாகம் ஆணுக்கும் தாயதியில் பெண்ணுக்
கொருபாக மீதல் நலம்.

இதன்பொருள் : தனது குரு உயிரோடிருப்பினும், இறந்து விட்டாலும் அவரின் உபதேசத்தை மறந்து விடாது அதன்படி ஒழுகுதலே நன்மை பயக்கும். தீயவர்களை நட்பாளர்களாகக் கொள்ளாது விடுதல் நலமே. தாயதிச் சொத்தினைப் பங்கிட அழைக்கப்பட்டால் ஆணுக்கு இரு மடங்கும் பெண்ணுக்கு ஒரு மடங்கும் கொடுத்தல்தான் மார்க்கம் வழங்கும் வழி முறையாகும். அதுவே நலமாகும்.

"தீயாரோ டிணங்கி யிருப்பதுவும் தீது" - ஔவையார்

27. இருகுரவர் நோகாத பிள்ளை நலமே
வருவிருந்து பேணும் குணமும் நலமே
இருகுரவர் தள்ளாத போது தனையன்
அருகிருந்து பேணல் நலம்.

இதன்பொருள் : தாயும் தந்தையுமாகிய இரு குரவரையும், நோகாத பிள்ளையும், அவ்விரு குரவரும் ஒருபோதும் நொந்தறியாத பிள்ளையும் நல்லவனே. தனது வீட்டுக்கு வந்த விருந்தினரை தக்க முறைப்படி உபசரிக்கும் குணம் என்றும் நன்மை பயப்பதாகும். தாயும் தந்தையும் தள்ளாத கிழப்பருவத்தையடைந்தால் அவர்களுக்கு அருகிலிருந்து அவர்களை காப்பாற்றும் மகனே நல்லவனாவான்.

"தந்தைதாய் பேண்" - ஆத்திசூடி

28. விடியுமுன் நித்திரை நீத்தல் நலமே
கடிமணம் கன்னியரைக் காட்டல் நலமே
குடியிருப் பாரை அகலவைத் தன்னார்
குடியலை யாமை நலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதன்பொருள் :** பொழுது விடியுமுன்னர் நித்திரை விட்டெழும் பழக்கம் என்றும் நன்மை பயப்பதாகும். கன்னிப் பெண்களைத் திருமணஞ் செய்து இல்லறங் காத்தல் நலமாகும். ஒரு தலத்தில் குடியிருப்போரை, அவர் இல்லத்தை அபகரித்து அலைக்கழியாமை நல்லறத்தின் பாற்படும்.

"ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்" - பழமொழி

**29.** *அகதியை யாதரித் தீதல் நலமே*
*சுகநிலைமை வேண்டிநற் சுத்தம் நலமே*
*தகரா று கண்டால் நடுநின் றதனைத்*
*தகுமா று தீர்த்தல் நலம்.*

**இதன்பொருள் :** அகதியாக உள்ளவரை ஆதரித்து அவருக்கு வேண்டிய உதவுதல் செய்பவருக்கும், பெறுபவருக்கும் நன்மை பயப்பதாகும். சுகமாக வாழ வேண்டுமாயின் எதிலும் சுத்தத்தினைப் பேணுதல் வேண்டும். இரு பகுதியினரிடையே சச்சரவு தோன்றுமிடத்து அவர்களை மோதிக் கொள்ள விடாது அவர்களிடையே சமரசம் தோன்றுமாறு நடுநின்று உதவுதல் நலமாகும்.

"சுத்தம் சுகந் தரும்"

**30.** *அரசாணை பேணல் அதிக நலமே*
*கரவா து பொன்னைக் கொடுத்தல் நலமே*
*தரவேண்டு வோர்களே தாள்பொறித் துக் கோடல்*
*தரவேண்டு வார்க்கு நலம்.*

**இதன்பொருள் :** அரச சட்டத்தை மீறாமல் கட்டுப்பட்டு நடத்தல் நன்மை பயப்பதாகும். கேட்பவர்களுக்கு நம்மிடம் பொருள் இருக்குமாயின் மறைத்து வைக்காமல் கொடுத்து உதவுதல் நலமாகும். கொடுக்கல் வாங்கல்களில் வாங்கியவர் அதனைத் தாமே எழுதிக் கொடுத்தல் அவசியமும் நலமுமாகும்.

"பொறித்து எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. *சமமொன்று மில்லானை நம்பல் நலமே*
*தமர்க்கருளி னீர்மடங்கு சேரும் நலமே*
*தமருதவி யில்லாத நாளுக் குதவும்*
*சமயமிது போற்றல் நலம்.*

**இதன்பொருள் :** இணையேதுமில்லாத இறைவனொருவன் இருக்கிறான் என நம்புதல் நன்மை பயப்பதாகும். நெருங்கிய சுற்றத்தாருக்கு ஈயும் அறத்திற்கு இருமடங்கு நன்மையுண்டு. யாரும் உதவ முடியாத மறுமை நாளில் உதவுவதற்காக நன்மையைச் சம்பாதிக்க இவ்வுலக வாழ்வைப் பயன்படுத்துதல் நலமாகும்.

“தமருதவியில்லாத நாள் மறுமை

32. *உரிமையிலார் பேச்சைத் தவிர்தல் நலமே*
*கருமமிலா மாற்றம் தவிர்தல் நலமே*
*பெருக நினைத்துப்பின் கொஞ்சமாய்ப் பேசல்*
*பெருக உறுமே நலம்.*

**இதன்பொருள் :** தமக்குச் சொந்தமில்லாதவர்களைப் பற்றிய பேச்சைப் பேசாது விடுத்தல் நன்மை பயப்பதாகும். கருத்தில்லாத வார்த்தைகளைப் பேசாது தவிர்த்துக் கொள்ளுதல் நலமாகும். அதிகம் நினைத்துக் கொஞ்சமாகப் பேசுதல் அதிக நன்மை தரும்.

“அதிகம் பேசுபவனுக்கு நினைக்க நேரமில்லை”

33. *தகுதிக் களவோடு எண்ணல் நலமே*
*மிகுபொருட் காப்பின் நிறைவும் நலமே*
*அருமதுப் பேர்நபி தோழர் தமக்கும்*
*மிகுசாந்தி கூறல் நலம்.*

**இதன்பொருள் :** தனது தகுதியறிந்து அதற்களவோடு எண்ணுதலும், செய்தலும் நன்மை பயப்பதாகும். சம்பாதித்த பொருட்களைக் காப்பாற்றுவதில் குறைவுபடாதிருத்தல் நலமாகும். முஹம்மது நபிக்கும், அவர்கள் தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழருக்கும் மிகுதியும் சாந்தியும், சுபசோபனமும் கூறுதல் மிகுந்த நலம் தரும் காரியமாகும்.

34. *வருக்கங் கருதா தளித்தல் நலமே*
*அருக்க னுதிக்குமுன் மூழ்கல் நலமே*
*தருக்குளார் தம்மைத் தயவோடு நோக்கல்*
*தருக்கை யொழித்தல் நலம்.*

**இதன்பொருள் :** வித்தியாசம் நோக்காது எவருக்காயினும் கேட்பவர்களுக்குக் கொடுத்துதவுதல் நன்மை பயக்கும் செயலாகும். சூரியன் உதிக்குமுன்பே குளிப்பு அவசியமானவர்கள் குளித்து விடுதல் நலமாகும். அகங்காரமுள்ளவர் தம்மை அனுதாபத்தோடு நோக்கலும், நம்மிடம் அகங்காரம் அணுகாதவாறு பார்த்துக் கொள்ளலும், இருப்பின் நீக்கிக் கொள்ளலும் நலம் தரும் செய்கைகளாகும்.

“வருக்கம் சாதி மதம்

35. *மறுமணம் ஆசிக்கும் மாதும் நலமே*
*உறுதி யுரைகூறும் வாக்கும் நலமே*
*சிறுமணம் சீரற்ற தாகு மதனால்*
*திருமண மாமேல் நலம்.*

**இதன்பொருள் :** கணவனை இழந்த பெண், மறுமணம் செய்ய விரும்புவது நன்மை பயக்கும் செயலாகும். திட்டமான கருத்துக்கள் பொதிந்த வார்த்தைகளை உபயோகித்தல் நலமாகும். சீரில்லாத பால்ய விவாகத்தை விடுத்து, வயதுப் பொருத்தமுள்ள திருமணத்தையே விரும்புவது நலமாகும்.

36. *திருமறை காட்டும் வழிகள் நலமே*
*அருமறை கற்று அறிதல் நலமே*
*இருமையு மீடேற்றங் காண்பிக்குந் தூய*
*பெருமறை தேர்தல் நலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பொருள் : பரிசுத்த திருமறை காண்பிக்கும் வழிநின்றொழுகல் நன்மை பயப்பதாகும். அத்திருமறையை கற்பதோடு நிற்காது பொருள் அறிந்து ஓதுதல் நலமாகும். இம்மை, மறுமையாகிய இருமைக்கும் ஈடேற்றம் அளிக்கவல்ல அத்திருமறையை ஆராய்ந்து தெளிதல் நன்மை பயக்கும்.

37. *உதவினார்க்கு நன்றி யுரைத்தல் நலமே*
*புதியவர்க்குச் சாந்தி யுரைத்தல் நலமே*
*உதவினார்க்குத் தக்க உதவி புரிதல்*
*எதுவிதத்து மான்ற நலம்.*

இதன்பொருள் : உதவி செய்தவர்களுக்கு நன்றி சொல்லுதல் என்றும் நன்மை பயப்பதாகும். புதியரைக் காணும் போது சாந்தி (ஸலாம்) கூறுதல் நலமாகும். உதவி செய்தவர்களுக்கு அதற்கு ஏற்ற உதவியினைத் தேடிச் செய்தல் என்றும் நன்மை தரும்.

"உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு" - திருவள்ளுவர்

38. *அறிவுள்ள மக்களாய் ஆக்கல் நலமே*
*நெறிநீதி காணும் நடுவர் நலமே*
*உறுதி யுரைகூறும் சாட்சியும் கூலி*
*பெறுவ தொழிதல் நலம்.*

இதன்பொருள் : தனது பிள்ளைகளை அறிவுள்ள பிள்ளைகளாக ஆக்கிவிடுதல் ஒரு தந்தைக்கு என்றும் நன்மை பயப்பதாகும். நடுநின்று சரியான நீதி வழங்கும் நீதிபதியும் நலமாவார். சாட்சி கூறுபவரும், தீர்ப்பளிப்பவரும், கூலி பெறாது தம் நிலையை நெறிப்படுத்தல் நன்மையே தரும்.

"நீதி மன்னன் நெறியினுக் கோர்மழை" -விவேக சிந்தாமணி

39. *நிறைகாணும் கண்ணி னியல்பு நலமே*
*மறையோது நாவினது மாண்பும் நலமே*
*துறைபலவும் கற்பிக்கும் நூலா சிரியர்*
*இறைவணக்கம் சால நலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதன்பொருள் :** பிறரின் நிறைவையே காணுங் கண்களின் இயல்பு என்றும் நன்மை பயப்பதாகும். வேதம் ஓதுகின்ற நாவினது பெருமை நல்லதாம். பல துறைகளையும் கற்பிக்கும் ஆசிரியன் இறைவனைத் தொழுபவனாக இருப்பானாயின் அது மிகுந்த நலத்தை அளிக்கும்.

"வேதம் ஓதிடும் வேதியர்க் கோர்மழை" - விவேக சிந்தாமணி

*40.* *வளரும் அறத்தை வளர்த்தல் நலமே*
*களர்நிலத் துப்புப்போற் சான்றோர் நலமே*
*கிழப்போதில் மார்க்கத்தின் சீரிய ராகி*
*இளமை பிறப்பின் நலம்.*

**இதன்பொருள் :** வளர்ந்துவரும் தரும சிந்தையை மேலும் வளரச் செய்தல் நன்மை பயப்பதாகும். உப்பு நிலத்தில் பூத்த உப்புப்போல் கொஞ்சமாக இருந்து அதிக பயனை நல்கும் பெரியோர் நல்லவரே. கிழப்பருவத்தில் இளவல்கள் போல மார்க்க ஆசாரங்களைச் செய்துவரும் முதியோர் நல்லவரே.

"வளரும் அறம்: ஒன்று பலவாக வளர்ந்து
வரக்கூடிய நல்லறம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிமொழி நானூற்பது

புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிமொழி நானாற்பது

காப்பு

நபிமொழி நானாற் பதுகவி கூறப்
புவிதொழு மேகன் துணை

நூல்

## 1. உளவியல் நாற்பது

### எண்ணம்

#### வினையும் பயனும்

நபிமொழி : நிச்சயமாகச் செயல்களின் தன்மை எண்ணங்களைப் பொறுத்திருக்கிறது. அன்றி ஒவ்வொருவருக்கும் அவரவர் எண்ணத்துக்குத் தக்க பலன் உண்டு.

(புகாரி, முஸ்லிம்)

1. *செய்வினையின் தன்மையது செய்வா னுளத்துநிறை*
*நிய்யத் தினுக்கமைய நேருங்காண் — செய்வானின்*
*நிய்யத் துறுதியள வெய்தும் வினைப்பயனே*
*வையத்து நாயகர்தம் வாக்கு*

*(நிய்யத்து — எண்ணம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனத்தின் நிறைவு

நபிமொழி : செல்வமென்பது உலகப் பொருள்களின் மிகுதியன்று. மனத்தின் செல்வமே உண்மைச் செல்வம். அது போதுமென்ற மனமேயாகும்.

(புகாரி, முஸ்லிம்)

2. *உள்ள நிறைவே யுயர்செல்வ மாமதனின்*
*விள்ளும் பெருஞ்செல்வம் வேறில்லை — உள்ளுங்கால்*
*தேடும் பொருட்பெருக்கம் செல்வ மெனலாகா*
*நாடு நபிமணிநல் வாக்கு.*

## மனத்திருப்தி

நபிமொழி : உங்களில் எவரேனும் தம்மைவிட அதிகப் பொருளுடையவரையும், தோற்றத்தில் தம்மைவிட மேலாக உள்ளவரையும் கண்டு தம் நிலை பற்றி வருந்த நேரிட்டால் அப்பொழுது அவர் தம்மைவிட இவ்விஷயங்களில் கீழாக உள்ளவரை நோக்கவும். ஏனெனில் இது நீங்கள் உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருளைக் குறைவாகக் கருதாமலிருக்க மிகவும் உதவியாயிருக்கும்.

(புகாரி, முஸ்லிம்)

3. *தம்மி னுருவுந் திருவுமுயர்ந் தார்க்காணின்*
*தம்மி னெளியாரைத் தாம்நோக்கித் — தம்மைப்*
*பெரியா ரெனக்கொள்க பேதுறே லாண்டா*
*னருளோ பெரிதென் றமை.*

## தரமான மனோநிலை

நபிமொழி : செயல்களில் மிகமேலானது அவற்றில் மிகையுங் குறையுமின்றி நடுத்தரமானதாகும்.

(றஸீன்)

4. *மினவுயர்வு மின்றி மிகுதாழ்வு மின்றி*
*தகுசெயலைச் செய்தற்கே சார்தல் — புகலின்*
*நடுத்தரந்தா னென்றுரைத்தார் நன்றாய்ந்து தம்மை*
*அடுத்தார்க் கிதமளித்தா ராங்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நம்பிக்கை

நபிமொழி : ஆண்டவன்மீது நம்பிக்கை வையுங்கள். ஆனால் உங்கள் ஒட்டகத்தையும் கட்டி வையுங்கள்.

(புகாரி)

5. *காக்குமிறை யென்னக் கருத்தி லுறுதிமிகின்*
*தூக்கு மவனுங்கள் சுமையெனினும் — வீக்கியே*
*ஒட்டைநிக ருள்ளமகன் றோடா தமையவதைக்*
*கட்டி விடுதல் கடன்.*

## அறிவுடைமை

### கல்விக்குயிரளித்தல்

நபிமொழி : கல்விக்கு உயிரளித்தோன் எஞ்ஞான்றும் இறப்பதில்லை

(இபுனுமாஜா)

1. *நல்லறிவு தந்துநமை நாளுங் கரைசேர்க்கும்*
*கல்விக் குயிரளித்த காவலன்றான் — தொல்புகழால்*
*என்றென்றும் வாழ்வா னிறந்து மிறவாதான்*
*நன்றறிந்த நாயகர்சொல் நாடு.*

### அறிவைப் பெறுதல்

நபிமொழி : அறிவு இறை நம்பிக்கையாளரின் தவறிப்போன பொருளாகும். எனவே அவர் அதனை எங்கு அடையப்பட பெறினும் அது அவருக்கே உரிமையுள்ளதாகும்.

(திர்மிதி)

2. *கண்டவிடத் தொருவன் கையிகந்து போனபொருள்*
*கொண்டபெரு மாவலுந்தக் கொள்வதுபோல் — சந்தித்த*
*கல்விதனை யன்றே கடுகிப் பெறமுயல்வான்*
*நல்லவிசு வாசியென நாடு*

### கற்றலின் தவறான கொள்கை

நபிமொழி : எவன் கற்றோருடன் மோதவும், அறிவீனர்களுடன் வாதம் புரியவும், மக்களைத் தன்பால் கவர்ந்து நிற்கவும் கருதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைக் கற்கிறானோ அவனை அல்லாஹ் நரகம் புகச் செய்வான்.

(திர்மிதி)

3. *கற்றா ருடனிகலக் கல்லாரை வாதமிட*
*மற்றோரைத் தன்பால் வசமாக்கக் — கற்பானை*
*புன்னரகு சேர்ப்பான் பொறுமையுளா னென்றுரைத்த*
*விண்ணுலகு போய்மீண்ட வேந்து.*

## கற்றபடி நட

நபிமொழி : கற்க, நீர் கற்றவற்றைக் கொண்டு அல்லாஹ்வை அஞ்சுக. கற்றாங்கு ஒழுகுக.

(திர்மிதி)

4. *கற்றறிக பல்கலைகள் கற்றுணர்வா லெம்மிறையை*
*முற்ற வுணர்ந்தஞ்சி யேத்திடுக — கற்றாங்கு*
*நாளும் நடக்க நமூனா நபிமணிதான்*
*வாழும் வகைசொல் வழி*

## அறிவுளாரும் அறிவிலாரும்

நபிமொழி : தம்மைத்தாமே நோட்டமிட்டுக் கணக்குப் பார்த்துக் கொள்பவரும், மறுமையில் தமக்கு நன்மை பயக்கத்தக்க நற்செயல்களை ஆற்றுபவரும் தாம் அறிவாளர். எவர் தம் மனோ இச்சையின்படி செயலாற்றி 'அல்லாஹ் பாவங்களை மன்னித்து விடுவான்' என மேலோட்டமாக எண்ணுகிறாரோ அவர் அறிவற்றவராவார்.

(திர்மிதி)

5. *தம்மைத்தா மேகணிப்பா ரம்மைக் குதவுநன்மை*
*இம்மைசெய்வா ரறிவோ ரென்றுணர்வாய் — அம்மா*
*மனம்போல் நடந்திறைவன் மன்னிப்பா னென்பார்*
*மனம்போ லறிவிலா தார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடைமை

## மக்களிடத்தன்பு

நபிமொழி : மாந்தரிடத்து இரங்காதான்மீது அல்லாஹ்வும் இரங்க மாட்டான்.

(திர்மிதி)

1. *மக்கள் துயரால் வருந்துநிலை கண்டுமவர்*
*பக்க லிரங்காத பாவியின்மேல் — மிக்க*
*கிருபா கரனிரங்கா னென்றார் கிளையா*
*ரிருபா லிரங்கும் பிரான்.*

## அல்லாஹ்வின் அன்பு

நபிமொழி : அல்லாஹ், தன் அடியார் மீது, ஒருதாய் தன் குழந்தை மீது கொண்டுள்ள அன்பை விட, அதிகம் அன்பு கொண்டவனாவான்.

(புகாரி, முஸ்லிம்)

2. *தாயினிய பிள்ளை தனில்வைக்கு மன்பினிலும்*
*நேயமிகு மடியார் மேல்நிமலன் — ஆயபெரு*
*மன்புடையா னென்றா ரடிமைகள்மே லாராப்பே*
*ரன்புடைய நாத ரறிந்து*

## இரங்குவார்க்கிரங்குவான்

நபிமொழி : ஆண்டவனுடைய படைப்புப் பொருள்களிடத்தும், தனது சொந்தக் குழந்தைகளிடத்தும் அன்பு பாராட்டாதவனிடத்தே, ஆண்டவனும், அன்பு பாராட்டமாட்டான்.

(புகாரி)

3. *இறையின் படைப்பிடத்து மேந்தியதன் செல்வ*
*நறைவாய்க் குழவியர்கள் மாட்டும் — இறையே னும்*
*அன்புபா ராட்டானுக் கிங்கன்பு தானிரங்கி*
*அன்புபா ராட்டா னறி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பும் பண்பும்

நபிமொழி : ஆயிஷா, அன்புடன் நடக்க வேண்டும். கடுஞ் சொல்லும் முன்யோசனையில்லாத குறும்பு வார்த்தையுங் கூடாதன. (முஸ்லிம்)

4. *யாரோடு மன்பாய் நடந்திடுக வன்சொல்லும்*
*ஓரா துரைக்குங் குறும்புரையும் — வாராதே*
*வாயடக்க வென்றார் வளமார் மனைநல்லார்*
*ஆயிஷா நாயகியார்க் கன்று.*

## மெலியாரிடத்தன்பு

நபிமொழி : எவரிடம் மூன்று காரியங்களுண்டோ அவர்களின் பாதுகாப்பை இறைவன் விரிவுபடுத்தி சுவர்க்கத்திற் புக வைப்பான்.

1. மெலியாரிடத்தில் அன்பு கொள்ளுதல்
2. பெற்றாரிடத்திற் பிரியம் வைத்தல்
3. அடிமைகளிடத்தில் தாராள மனத்துடன் நடத்தல். (திர்மிதி)

5. *பெற்றாரைப் பேணல் பெலமிலார்க் கன்பு செயல்*
*பற்றும் அடிமைகளைப் பாவித்தல் — உற்றானை*
*தன்னகரி லான்மிகவே தாபரித்து மேலைநாள்*
*பொன்னுலகு சேர்ப்பான் புரந்து.*

# பண்புடைமை

## தன்மானம்

நபிமொழி : எந்தப் பொருளில் மானக்கேடான தன்மை பொதிந்துள்ளதோ அதனை அது பாழ்ப்படுத்தி விடுகிறது. எந்தப் பொருளில் தன்மானம் இருக்கிறதோ அதனை அது ஒளிரச் செய்கிறது.

(திர்மிதி)

1. *மானமழிய வருமியல்போர் காரியத்தே*
*தானுழையி னக்கருமந் தான்பாழாம் — மேனிலைசேர்*
*தன்மானந் தங்கிற் றழைத்தொளிருஞ் செய்கருமம்*
*என்றா ரிறைதூத ரீங்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மென்மைத்தன்மை

நபிமொழி : நிச்சயமாக எதில் மென்மைத்தன்மை குடிகொண்டுள்ளதோ அதனை அது அழகுபடுத்தி விடுகிறது. ஆனால் எதிலிருந்து அது அப்புறப்படுத்தப்படுகிறதோ அதனை அது அழகற்றதாக்கி விடுகிறது.

(முஸ்லிம்-அபூதாவூத்)

2. *மனம்வாக்குக் காயத்தில் வாய்ந்தமைந்து மென்மைக்*
*குணந்தழைத்தால் யாவு மழகாம் — இணங்காத*
*வன்மைக் குணமழகை மாற்றுமென மொழிந்தார்*
*மென்மை கடைப்பிடித்த வேந்து*

## மென்மையும் நன்மையும்

நபிமொழி : எவர் மென்மையை இழந்து விடுகிறாரோ அவர் நன்மைகள் அனைத்தையும் இழந்து விட்டவர் ஆவார்.

(முஸ்லிம்-அபுதாவூத்)

3. *நன்மை யனைத்தினையும் நல்கு மினிமையுள*
*மென்மைக் குணந்தன்னை மேவாதார் — இம்மையிலே*
*சாந்தி யிழந்தார் தவிப்பார் மறுமையிலும்*
*ஏந்தல் நபியுரைத்தா ரீது.*

## பெருமிதம்

நபிமொழி : பெருமிதமென்பது உண்மையை மறுப்பதும், மற்ற மனிதர்களை இழிவாகக் கருதிச் செருக்குறுவதுமாகும்.

(அபூதாவூத்)

4. *உண்மை மறுத்தே யுரைப்பதுவும் மாண்பின்றி*
*தன்னிற் பிறர்தம்மை தாழ்வாக — எண்ணிச்*
*செருக்குற் றிருப்பதுவுந் தீதா மிரண்டும்*
*உரைப்பிற் பெருமிதமென் றோது.*

## பொறுமைக்குக் கூலி

நபிமொழி : தனக்கு உவப்பான பொருளொன்று தவறிப் போனபோது அவர் மனம் பொருந்தி, அது நன்மைக்கே எனக் கருதிக் கொள்ளின், இறைவன் சுவன பதியைத் தவிர்த்து வேறு எதனையும் அவருக்கு நல்குவதில்லை.

(புகாரி, திர்மிதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. *தனக்குகந்த வொன்று தவறியக்கா லாங்கு
மனக்கவலை மாற்றி மகிழ்ந்தே — எனக்கஃது
நன்மைக்கே என்பார்க்கு நாதன் தருபரிசில்
பொன்னின் பதியே புகல்.*

# நல்வழி

## பிறர்குறை மறைத்தல்

நபிமொழி : எவர் இப்புவியில் பிறரின் குறையை மறைத்து வைக்கிறாரோ, அவரின் குறையை இறைவன் மறுமைநாளில் மறைத்து விடுவான்.

(முஸ்லிம்)

1. *கண்ணாரக் கண்டும் பிறர்குற்றம் தாமதனை
எண்ணார் மறைக்கு மியல்புடையோர் — மண்ணுலகில்
செய்த பிழைமறைத்துத் தேற்றியே நல்லருளைச்
செய்யு மிறையென்றார் தேர்ந்து.*

## நல்லவரும் தீயவரும்

நபிமொழி : எவர் விஷயத்தில் நல்லது எதிர்பார்க்கப்பட்டு தீயதை விட்டும் அச்சமற்று விடுகிறதோ அவரே நல்லவர். எவர் விஷயத்தில் நல்லது எதிர்பார்க்கப்படாது தீயது பற்றி அச்சமுறப்படுகிறதோ அவரே தீயவர்.

(திர்மிதி, பைஹகீ)

2. *நல்லதே நாடி நலமிலதைக் கைவிட்டே
அல்லல் தருமச்சம் அகன்றாரே — நல்லவர்காண்
தீயதே நாடியதால் சேரச்சம் தானடைவோர்
தீயரே யாவரெனச் செப்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்பண்புகள்

நபிமொழி : உமக்கு அநீதி இழைப்பாரை மன்னித்துவிடும். உம்முடன் உறவை முறித்துக் கொள்பவருடன் உறவாடும். உமக்குத் தீங்கிழைத்தவருக்கு நன்மை செய்யும். உமக்குத் தீமை பயப்பதாக விருப்பினும் உண்மையே பேசும்.

(றஸீன்)

3. *மன்னிக்க தீமை யுறவைமுறித் தாருடனும்*
*பின்னும் உறவையே பேணிடுக — தின்மையே*
*செய்தார்க்கும் நன்மையே செய்திடுக தீங்குறினும்*
*மெய்மையே பேச விரும்பு.*

## இறந்தவரின் நன்மை தீமைகள்

நபிமொழி : உங்களில் இறந்தவர்களின் நன்மைகளை நினைவு கூருங்கள். அவர்களின் தீமைகளை (நினைக்கவோ பேசவோ செய்யாது) விட்டு விடுங்கள்.

(அபுதாவூத், திர்மிதி)

4. *முன்னிருந்தோ ரிங்கு முயன்ற வினைகளிலே*
*நன்மைகளைக் கூறி நயந்திடுக — அன்னவரின்*
*தீதொன்று மெண்ணேல் தெரிந்துரையே லென்றுரைத்தார்*
*யாதொன்றுந் தீதியலா தார்.*

## பாக்கியவான்கள்

நபிமொழி : நிச்சயமாகப் பாக்கியம் பெற்றவர், குழப்பங்களை விட்டுத் தப்பித்து விடுபவரும், சோதனைக்குள்ளாகி அதனைப் பொறுத்துக் கொள்பவருமாவார்.

(அபூதாவூத்)

5. *வேதனைக்குள் வீழ்த்துங் குழப்பம் விலகிடுவோர்*
*சோதனைக்குள் ளாகி லதுபொறுப்போர் — மேதினிக்குள்*
*பாக்கியம்பெற் றாரென்றார் பண்பி லெதிரஞ்சும்*
*வாக்கியரா மெங்கள் வரன்.*

## நல்லார் தீயார் உறவு

நபிமொழி : நல்லவருடன் சேர்ந்திருப்பதும், தீயவருடன் சேர்ந்திருப்பதும் முறையே நறுமணம் வைத்திருப்ப-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடனும், கொல்லனுடனும் சேர்ந்திருப்பது போலாகும்.
(புகாரி, முஸ்லிம்)

6. *சொல்லுஞ் சுகந்தப் பொருளாளன் சேர்க்கைபோல்*
*நல்லா ருறவு நலந்தருங்காண் — அல்லாதார்*
*கூட்டமது கொல்வினையோர் கூட்டம் போற் றீதென்றார்*
*ஏட்டி னெழுத்தறியா வேந்து.*

## நண்பனும் பகைவனும்

நபிமொழி : உமது நண்பனுடன் அளவோடு நட்புக் கொள்ளும். ஏனெனில் ஒருநாள் உமக்குப் பகைவனாகவும், மாறிவிடக் கூடும். அன்றியும் உமது பகைவனோடு அளவோடு பகைமை பாராட்டும். ஏனெனில் அவன் ஒருநாள் உமக்கு நண்பனாகவும் மாறிவிடக் கூடும்.

(திர்மிதி)

7. *அருந்துணைவ னோடு அளவறிந்து வாழ்க்*
*பிரிந்துபகை யாதலும்பின் சேரும் — பொருந்தாப்*
*பகைவனோ டேனுங் கடும்பகைபா ராட்டேல்*
*நகைபுரிநண் பாமவனோர் நாள்*

## நண்பருடன் எழும்புவான்

நபிமொழி : மனிதன் எவரை இவ்வுலகில் நேசிக்கிறானோ அவருடன் அவன் கியாமத்து நாளில் எழுப்பப்படுவான்.

(திர்மிதி)

8. *நல்லா ருடனுறவு நாடுபவர் மேலைநாள்*
*எல்லாரு மொன்றா யெழும்புவார் — அல்லாதார்*
*தம்மோடு நல்லுறவு தாங்க வவர்தமராய்*
*சும்மா வுயிர்த்தெழுவா ராங்கு.*

## நேசித்தலும் பகைத்தலும்

நபிமொழி : ஆண்டவனுக்காக நேசித்தலும் ஆண்டவனுக்காகப் பகைத்தலும் செயல்களிலெல்லாம் சிறந்த செயலாகும்.
(அஹ்மத், அபூதாவூத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. *நேசிக்க வேண்டின் நிமலன் தனக்காக*
*நேசிக்க வன்றிப் பகைகொளலும் — யோசிப்பின்*
*செய்வினையு ளெல்லாம் சிறப்பா மிவையிரண்டும்*
*தூய்ய நபிமணிசொல் தூது.*

## நண்பனுக்கு நல்லவன்

நபிமொழி : தம்முடைய நண்பர்களிடத்தில் நல்ல விதமாக நடந்து கொள்ளுகிறவரே ஆண்டவனிடத்திலும் நல்லவரா-யிருப்பார். தமது அண்டை வீட்டாரிடம் நல்ல விதமாக நடந்து கொள்ளுகிறவர் ஆண்டவனுடைய அண்டையிலும் நல்லவராகக் கருதப்படுவார்.

(திர்மிதி, தாரமீ)

5. *நல்லவராய் வாழ்வோர்தம் நண்பருட னாண்டவற்கும்*
*நல்லவராய் வாழ்வார் நலம்பொலிந்தே — நல்லவகை*
*அண்டையய லாரிடத்து மன்புசெய்வா ராண்டவனின்*
*அண்டையிலும் நல்லவரா வார்*

# கோபம்

## கோபி நபிக்கு விரோதி

நபிமொழி : மனிதரில் நல்லவர்கள் மெதுவாகச் சினங்கொண்டு விரைவில் தணிந்து விடுபவர்தாம். அன்றி அவர்களில் கெட்டவர்கள் விரைவில் சினமுற்று மெதுவாகத் தணியப் பெறுபவர்கள் தாம்.

(திர்மிதி)

1. *மெல்லச் சினத்து வெகுவிரைவி லாறுபவர்தாம்*
*நல்லார் விரைந்து நனிமுனிந்து — மெல்லத்*
*தணிபவர்தாந் தீய தகவுடையா ரிஃது*
*முனிவறியா வேந்தர் மொழி*

## திட்டுதலும் சண்டையிடுதலும்

நபிமொழி : ஒரு முஸ்லிமைத் திட்டுவது ஆண்டவனுக்கு மாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதாகும். மேலும் ஒரு முஸ்லிமுடன் சண்டை செய்வது குபுரியத்தாகும்.

(புகாரி, முஸ்லிம்)

2. *ஆயவிசு வாசிதனை யல்லசொலித் திட்டுவது*
*தூயனுக்கு மாறுசெய்த தோஷமே — பூசலொடு*
*மாறுபடின் மாறும் மனத்து விசுவாசம்*
*தேறு நபிமணியின் தீர்ப்பு*

## கோபத்தையடக்கல்

நபிமொழி : சினத்தை நீடிக்கச் செய்து அதன்படி செயலாற்ற ஆற்றலிருந்தும், எவர் சினத்தை அடக்கி விழுங்கி விடுகிறாரோ அவரை இறைவன் மறுமை நாளில் எல்லாப் படைப்புக்களின் முன்னிலையிலும், அழைத்து அவர் விரும்பும் ஹுறுலீன் என்னும் கண்ணழகிகளில் எவரையும் தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதி வழங்குவான்.

(அபூதாவூத் - திர்மிதி)

3. *செல்லிடத்துத் தோன்றும் சினத்தை விழுங்கிவிடும்*
*வல்லவனை யந்நாள் வருமுயிர்முன் — நல்லிறைவன்*
*கூவி யவன்விரும்பும் ஹுறுகளைத் தேர்ந்துகொள*
*ஏவுமெனச் சொன்னார் இனிது.*

## மாவீரன்

நபிமொழி : எவன் சினமுற்றபோது தன்னையே தான் அடக்கியாள ஆற்றல் பெற்றிருக்கிறானோ அவன் தான் வீரன்.

(முஸ்லிம்)

4. *மல்லர் பலரை மடக்குந் திறமுடைய*
*வல்லவனோர் மாவீ ரனல்லன்காண் — புல்லி*
*மனத்தைக் கவர்ந்தெழும்பும் மாசினத்தை வென்றோன்*
*அனைத்துலக வீர னறி.*

## கோபந்தணிதல்

நபிமொழி : உங்களில் எவருக்கும் சினமேற்படுமானால் அவர் உளுச் செய்து கொள்ளவும். அவர் நின்று கொண்டிருந்தால் அமர்ந்து கொள்ளவும், அன்றேல் படுத்துக் கொள்ளவும்

(அபூதாவூத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அர்த்தநா னஞ்சினத்தை யாற்றிடுங்கா ணின்றநிலை
நிற்பா ரிருந்திடுக நின்கிடையும் — பொற்பாகும்
என்றா றிகவாழ்வி லென்றுங் கடுஞ் சினந்தான்
ஒன்றா துயர்ந்தா ருணர்ந்து

## 8. பேராசை

### உலக ஆசை

நபிமொழி : உலக ஆசைதான் எல்லாப் பாவங்களுக்கும் கடைக்காலாகும். அன்றி ஒன்றன் மீது நீர் ஆசை கொள்ளுதல் உம்மைக்குருடனாகவும் செவிடனாகவுஞ் செய்து விடுகிறது.

(றஸீன்)

1. உலகாசை பாவமுதிக் குமொரு மூலம்
பலகாலா யோடுமொன்றன் பற்று — விலகாயேல்
கண்ணைக் குருடாக்கிக் காதைச் செவிடாக்கும்
உண்மை நபியி னுரை

### கலவரங்களுக்குக் கால்

நபிமொழி : பசியுள்ள இரு ஓநாய்களை ஆட்டு மந்தையுள் விட்டால் அவை எத்துணைக் குழப்பத்தை உண்டு பண்ணி விடுமோ, அத்துணைக் குழப்பத்தை ஒரு மனிதனுடைய பொருளாசையும் பதவிமோகமும் அவனுடைய மார்க்கத்தில் உண்டு பண்ணி விடும்.

(திர்மிதி)

2. ஆட்டுமந்தை யுள்ளே யடர்பசியா லோரிரண்டு
காட்டோனாய் புக்க கலவரம்போல் — மூட்டுமே
ஆக்கும் பொருள்பதவி யாசையா லீங்கொருவன்
மார்க்கத் திடைநடுவே வந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயதேற ஆசையேறும்

நபிமொழி : மனிதனுக்கு வயது ஆக ஆக அவனின் இரு செயல்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன. அவை :

1. பொருளின் மீது பேராசையும்
2. வயதின் மீது பேராசையும் என்பன

(புகாரி, முஸ்லிம்)

3. *மிக்கபொருட் பேராசை மேதினியில் பல்லாண்டு*
*மக்களிடை வாழ மனம்விரும்பல் — மிக்கிரண்டும்*
*மாந்தர் வயதாக ஆக வளர்ச்சியுறும்*
*வாய்ந்த அணிநயினார் வாக்கு*

## உங்களுக்குச் சொந்தமானவை

நபிமொழி : உங்களுடைய பொருளென்று ஒன்றுமில்லை. நீங்கள் உண்டு அழித்ததைத் தவிர. உடுத்துக் கழித்ததைத்தவிர, அறவழியிற் செலவழித்ததைத் தவிர.

(முஸ்லிம்)

4. *உண்ட உணவுக்கு முடுத்த உடைக்குமுளம்*
*கொண்டவறத் திற்குங் கொடுத்ததன்றி — மண்டலத்தில்*
*ஒன்று முனக்கென் றுளதோ விலையிதனை*
*நன்றுணரி னுண்டாம் நலம்*

## பேராசையின் கெடுதி

நபிமொழி : பேராசைக்கு அஞ்சுங்கள். மெய்யாகவே உங்களுக்கு முன்னிருந்தோரை தங்களுக்கிடையில் இரத்தஞ் சிந்தும்படியும் அவர்களுக்கு விலக்கப்பட்டவற்றை நல்லனவென்று ஏற்றுக் கொள்ளும் படியும் அது செய்து விட்டது.

(முஸ்லிம்)

5. *ஐயோபே ராசைக்கே யஞ்சுங்கள் மானிடரே*
*மெய்யேயும் முன்னோரை வேறாக்கி — மெய்சோரச்*
*செங்குருதி சிந்தவைத்துத் தீயவற்றை நலல்னவாய்*
*இங்குகொளச் செய்த இது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. செயலியல் நாற்பது

## 1. உணவு

### உடல்வளர்த்தல்

நபிமொழி : உண்டு கொழுத்த பெரிய மனிதன் மறுமையில் இறைவன் பார்வையில் ஒரு ஈயின் சிறகளவிற்கும் பெறுமதியுடையவனாகான்.

(புகாரி, முஸ்லிம்)

1. *போனகத்தைக் கும்பி புடைக்க நிறைத்ததனால்*
*ஆன பெருவுடல்கண் டாவதெவன் — ஈனமன்றிக்*
*காயும் பெருவெளியிற் கர்த்தன் திருநோக்கில்*
*ஈயின் சிறையளவு மில்*

### உணவுகொள்ளல்

நபிமொழி : மனிதனுக்கு அவனது வயிற்றை விட மிகக் கெட்ட பாத்திரம் வேறொன்றுமில்லை. வயிற்றில் மூன்றிலொரு பாகம் உணவுக்கும், மற்றொரு பாகம் நீருக்கும், மற்றையது மூச்சு விடுவதற்கும், வைத்துக் கொள்ளுங்கள்.

(திர்மிதி)

2. *தேர்ந்தால் வயிற்றைவிடத் தீயகொடும் பாண்டமிலை*
*மாந்துங்கா லுண்டி யிதுமறவீர் — தேர்ந்துண்ணப்*
*புக்கா லுணவுநீர் மூச்சுக் கெனமூன்றாய்*
*வைக்க வயிற்றை வரைந்து.*

### பசியும் தாகமும்

நபிமொழி : பசித்திருப்பதனால் உங்கள் இதயங்களைப் பரவசமாக்கிக் கொள்ளுங்கள். பசியாலும் தாகத்தாலும் உங்களையே நீங்கள் வென்று கொள்ள முயலுங்கள். பிர்தௌசென்னும் சுவர்க்கத்தின் வாசலைப் பசியென்னும் கருவியைக் கொண்டு தட்டிக் கொண்டேயிருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வெல்லமுய லுன்னைநீ வெம்பசியால் தாகத்தால்
நல்லொலிசெய் யுள்ளம் நனிபசியால் — வல்லவனின்
மட்டில் சுவர்க்கத்தின் வாசல்தனைத் தொடர்ந்தே
தட்டுன் பசிக்கரத்தால் சார்ந்து

## விருந்தழைப்பு

நபிமொழி : நீங்கள் விருந்துக்கு அழைக்கப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ளுங்கள். எவரும் விருந்துக்கு அழைக்கப்பட்டு அவர் அதனை ஏற்றுக் கொள்ள வில்லையானால் நிச்சயமாக அவர் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறு செய்தவராவார். அழையா விருந்துக்குச் செல்பவர் திருடராக நுழைந்து கொள்ளையடித்துக் கொண்டு திரும்புபவராவார்.

(அபூதாவூத்)

4. ஏற்க விருந்தழைப்பை யேற்கா திருந்துவிடின்
ஆற்று மிறைக்கு மவன்நபிக்கும் — மாற்றம்
நுழைந்தார் திருட ருணவேற்றார் கொள்ளை
விழைந்தா ரழையாதார் வீடு.

## விரயஞ் செய்தல்

நபிமொழி : வீண் விரயமின்றியும், பெருமையடிக்காமலும் உண்ணுங்கள். அறஞ் செய்யுங்கள். உடுத்துங்கள்.

(புகாரி)

5. உண்பீ ருடுப்பி ருறாதார்க் கொன்றீந்துவக்கும்
பண்பறிவீர் விண்செலவு பண்ணாதீர் — மன்புவியீர்
ஆடம் பரமின்றி யாற்றினிவை என்றுரைத்தார்
நாடம் பரமுதல்வர் நன்கு.

# 2. அணிகள்

## அணியினவசியம்

நபிமொழி : ஆண்டவனுடைய அருளின் அடையாளங்களை உமது உடலின்மேற் காண்பீராக.

(அஹ்மத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆண்டா னருளி னடையாளம் நும்முடலிற்
பூண்பீ ரதன்புனிதப் பொன்னழகைக் — காண்பீர்
உடற்புனிதங் கொள்வீ ருடுப்பீ ரணிவீர்
உடற்குரியான் கொள்வா னுவப்பு

## உடுத்தல்

நபிமொழி : எவன் தன் ஆடையைக் கணுக்கால் மொழிக்குக் கீழாகப் பெருமையை முன்னிட்டுத் தொங்க விடுகிறானோ அவனை அல்லாஹ் ஏறிட்டும் பார்க்க மாட்டான்.

(புகாரி, முஸ்லிம்)

2. கட்டு முடைதான் கணுக்காலின் கீழ்த்தாழ்ந்து
தொட்டுநிலங் கூட்டவே தொங்கவிட்டு — மொட்டாய்
இடம்பநடை போட்டானை ஏறிட்டும் பாரான்
உடம்பருளு மேக பரன்.

## ஆடம்பர உடை

நபிமொழி : பேருக்காகவும், புகழுக்காவும் எவர் ஆடம்பர உடைகளை அணிகிறாரோ அவருக்கு இறைவன் மறுமை நாளில் இழிந்த உடைகளை அணிவிப்பான்.

(அபூதாவூத்)

3. தகுதிக்குத் தக்கதாய்த் தானுடுக்கான் போக்கும்
புகழ்க்கு மிடம்பவுடை போட்டோன் — புகுவான்
இழிவா முடையிறைவ னீயவுடுத் தந்நாள்
அழியான்றன் றாணையிது வாம்.

## ஆகாத அணிகள்

நபிமொழி : பட்டும் தங்கமும் என் சமூகத்து ஆண்கள் மீது ஹராமாகும். அவை பெண்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளன.

(நசாஈ)

4. பட்டுடையும் தங்கப் பணியும் விசுவாசக்
கட்டழக ராண்மக்கட் காகாதே — வட்டமுகக்
காரிகையர்க் காகுங் கருதி லிவையென்றார்
மாரிநிகர் வள்ளல் நபி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அழகாயிருங்கள்

நபிமொழி : ஆண்டவன் அழகின் மயமாகவே யிருக்கிறான். ஆதலால் அழகில் அவன் அதிகம் பிரியம் காட்டுகிறான். ஆனால் கர்வமென்பதோ தன்னைத் தவிர ஏனை ஒவ்வொருவரையும் வெறுப்புடனே மதிக்கச் செய்கிறது. (ஹாகிம்)

5. *அழகின் மயமிறைவ னாதலினால் மாந்தர்*
*அழகிற் பிரீதி யடையும் — அழகிற்*
*தருக்கேல் தருக்குற்றோன் தாழ்வாய்ப் பிறரை*
*வெறுத்தே மதித்து விடும்.*

## 3. நன்றியுடைமை

### நன்றியுள்ளம்

நபிமொழி : நன்றியுள்ள உள்ளமானது மேலான செல்வங்களு-ளொன்றாகும்.

1. *செல்வத்துட் செல்வந் திருவருளா மவ்வருளும்*
*நல்லிதய மாயின் நனிநன்றே — நல்லிதயம்*
*மற்றார்செய்ந் நன்றி மறவா திருக்குமேல்*
*பெற்றான்பெருஞ் செல்வப் பேறு.*

### நன்றி கூறுதல்

நபிமொழி : எவரேனும், பிறரால் நன்மை செய்யப்படுவாரானால், அந்த நன்மை செய்தவரிடம் 'அல்லாஹ் உமக்கு நற்பலனை நல்குவானாக' என்று அவர் கூறின் நன்றி கூறுவதில் அணுவத்தனையுங் குறை வைத்தவராகார். (திர்மிதி)

2. *நன்றி யொருவரால் நல்கப்பெற் றாரிறையோன்*
*ஒன்றும் பலனை யுமக்கருள்க — என்று*
*இறையை நினைந்தாங் கிசைப்பினவர் நன்றி*
*நிறைய மொழிந்தா ரெனல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி கூறுக

நபிமொழி : எவரேனும் பிறரால் எந்த உதவியும் செய்யப் பெறுவாரானால், அவர் தம்மால் இயலுமாயின் உதவி செய்தவருக்கு அதற்குரிய பிரதி பலனைச் செய்யவும். அவ்விதம் இயலவில்லையாயின் அவரைப் பாராட்டி விடவும். எவர் உதவி செய்தவரைப் பாராட்டி விடுகிறாரோ அவர் நன்றி செலுத்தியவராவார். அல்லாதார், நன்றி மறந்தவராவார்.

(திர்மிதி)

3. *நன்றிக்கு நன்றி புரிதனலம் நன்றிக்கு*
*நன்றி செயவியலா நன்மக்கள் — நன்றிக்கு*
*நன்றிபா ராட்டுக நன்றிபா ராட்டாதார்*
*நன்றிமறந் தாரிதனை நாடு.*

## நன்றியுள்ளவர்

நபிமொழி : மார்க்க விஷயத்தில் தம்மைவிட மேலாக இருப்பவரைப் பின்பற்றுபவரையும், உலகவிடயத்தில் பணம், புகழ் ஆகியவற்றில் தாழ்ந்தவரை விடத் தம்மை மேலாக்கியதற்காக அல்லாஹ்வைப் புகழ்பவரையும், நன்றியுள்ளவர், பொறுமையாளர் என அல்லாஹ் எழுதி விடுகிறான்.

(திர்மிதி)

4. *சன்மார்க்க சீலர் தமையொற்றி வாழ்பவனும்*
*தன்னாக்கம் மேலாய்ச் சமைத்தவனை — முன்னாய்ப்*
*புகழ்வானும் நன்றி பொறுமை மிகவாய்த்*
*திகழ்வா ரிறைசமுகந் தேர்.*

## நன்றியிலான்

நபிமொழி : மக்களுக்கு நன்றி செலுத்தாதவன் இறைவனுக்கு நன்றி செலுத்தமாட்டான்.

(திர்மிதி)

5. *மாந்த ருதவிக்கு நன்றி வழங்காதான்*
*சேர்ந்த விறையருளைச் செப்பமாய் — ஆய்ந்தவற்கு.*
*நன்றி செலுத்திடவும் நாடா னவனென்றார்*
*ஒன்றும் பதில்வழங்கு வோர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. நடத்தை

## அசுத்தமாக்கல்

**நபிமொழி :** தண்ணீர்க் கரையிலும் மக்கள் நடமாடும் வழியிலும், நிழல் நல்குமிடத்திலும் மலம் கழித்தல் சாபத்துக்குள்ளான செயல்.

(அபூதாவூத்)

1. *நீர்க்கரையில் நல்ல நிழல்மரத்தின் பாங்கரிலே*
*ஊர்க்குள் நடைபாதை யோரத்தில் — போக்கும்*
*கறைசேர் மலங்கழித்துக் கால்கழுவ லாயின்*
*இறைசாப முண்டென் றறி.*

## கீழ்மக்கள்

**நபிமொழி :** உங்களில் மிகமிகக் கீழோர் யாரென்று நான் உங்களுக்குச் சொல்லட்டுமா? அவர்கள் தாம் தனியாக உட்கார்ந்து சாப்பிடுவோன். தன் பணிமகனை அடிப்பவன். தேவையாளருக்கு உதவி செய்ய மறுப்பவன்.

(திர்மிதி)

2. *தனியா யிருந்துண்போன் தன்வேலை யாளை*
*யனியாய மாயடிப்போ னண்டித் — தனையடைவோர்*
*தேவைக் குதவாதோன் செப்பினிவர் மூவர்*
*பாவப் பிறவியென் பார்.*

## காவல் செய்தல்

**நபிமொழி :** பகலில், பயிருக்குரியவர் மீது அதனைப் பாதுகாப்பது கடமை. இரவில், கால்நடைக்குரியவர் மீது அதனைக் காப்பது கடமையாகும்.

(முஅத்தா)

3. *காத்தல் பயிரைக் கமஞ்செய்வோர் தாம்பகலில்*
*காத்தலிர விற்கன்று காலியுளார் — மேற்கொள்ளும்*
*இக்கடமை தன்னா லிருவர்க்கும் நன்மையென்றார்*
*மக்களை வாழ்வித்த மகான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமும் நிறமும்

நபிமொழி : ஆண்களுக்கழகு மணமேயன்றி நிறமன்று. பெண்களுக்கழகு நிறமேயன்றி மணமன்று.

(அபூதாவூத்)

4. *நன்மணந்தா னன்றாகும் நம்பியர்க்கு நாரியர்க்கு*
*வண்ணந்தா னல்லாது வாசமன்று — எண்ணுங்கால்*
*நாரியர்க் கன்று நறுமணங்கா ணல்வழியின்*
*வீரியர்க்கு வண்ணம் விழல்.*

## சுன்னத்தான கருமங்கள்

நபிமொழி : நாணமுறுவதும் நறுமணம் பூசிக் கொள்வதும், பற்குச்சி கொண்டு பல்துலக்குவதும், மணம் முடித்துக் கொள்வதும், நபிமாரின் வழிமுறை (சுன்னத்)கள் ஆகும்.

(திர்மிதி)

5. *நாணமுறுதல் நறுமணம் பூசிக்கொள்ளல்*
*பேணி மணமுடித்தல் பெட்புடனே — சாணளவு*
*குச்சியினாற் பல்விளக்கல் கோமான் நபிமார்கள்*
*இச்சகத்தில் வைத்த வழி.*

# 5. வாய்மை

## உண்மையாளன்

நபிமொழி : நிச்சயமாக உண்மை நன்மையின் பக்கம் வழி காட்டுகிறது. நன்மையோ சுவர்க்கத்திற்கழைத்துச் செல்கிறது. மனிதன் உண்மையையே பேசவிரும்பி உரைப்பானாயின் அவன் இறைவனிடத்தில் உண்மையாளன் என்றெழுதப்பட்டு விடுகிறான்.

(புகாரி)

1. *உண்மையே நன்மையின்பா லுய்க்கு மதுசுவனம்*
*நண்ணுவிக்கு முண்மை நவில்வார்க்குத் — திண்ணம்*
*இறையிடத்தி லுண்மையெனின் றோர்பெயருண் டென்றே*
*அறிவுறுத்தா ரல்லமீ னன்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயந்தவிர்

நபிமொழி : ஐயுறத் தக்கவற்றை விட்டொழித்து ஐயுறத்தகாதவற்றை மேற்கொள்ளுங்கள். உண்மை மன அமைதியைத் தருகிறது. பொய் ஐயத்தை உண்டாக்குகிறது.

(திர்மிதி)

2. *ஐயந்தருஞ் செயல்விட் டாற்றுமைய மற்றசெயல்*
*மெய்யில் மனச்சாந்தி மேவுங்காண் — பொய்மை*
*தருமைய மென்றார் தரணி தனக்கோர்*
*அருளாக வந்தநபி னார்.*

## அதிகம் பேசாதீர்

நபிமொழி : அதிகமாக உரையாடாதீர்கள். ஏனெனில் அல்லாஹ்வை நினைவு கூர்தலியலாது. அதிகமாக உரையாடுவது மனதைக் கல்லாய்ச் சமைத்துவிடக் காரணமாகிறது. மனம் இறுகியவர்கள் அல்லாஹ்வை விட்டும் அதிக தொலைவில் சென்று விடுகின்றனர்.

(திர்மிதி)

3. *உள்ளங்கல் லாகு முரையாடல் கூடிவிடின்*
*உள்ளங்கல் லானா லுலகத்தோர் — வல்லவனை*
*விட்டே நெடுந்தூரம் வீணுக் கலைந்திடுவார்*
*மட்டாகப் பேசிடுமின் வாய்.*

## மௌனம் சித்தி

நபிமொழி : எவர் வாய் மூடியிருக்கிறாரோ அவர் சித்தி பெற்றவராவார்.

(திர்மிதி)

4. *எத்துணைக் கெத்துணை வாய்மூடல் சாலுமோ*
*அத்துணைக் கத்துணை சித்திவிண் — இத்திறம்*
*மெத்த விருந்து விறல்கண்டார் செம்மொழி*
*சித்திபெற மௌனம் தேர்.*

## தரமறிந்து பேசு

நபிமொழி : மனிதர்களிடம் பேசும்போது அவரவர்களுடைய மனோசக்திக்குத் தக்கவாறே பேசக் கடவீர். எல்லாரிடத்தும் எல்லா விசயங்களைப் பற்றியும் பேசுவீரேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் நீர் பேசுவது இன்னதென உணர முடியாமல் தீயவழியிலே சென்றுவிடக் கூடும்.

(அபூய.'.லா)

5. எதனையெவர் பாலியம்ப லேற்றதென வாய்ந்தோ
அதனையவர் பாலியம்ப லாகும் — இதவியல்பு
பேணா தியம்பின் பிறழ்ந்து கருத்தொருசார்
வீணாகும் தீமை விளைந்து.

## 6. பொய்மை

### முஸ்லிம் பொய்யுரையான்

நபிமொழி : இறை நம்பிக்கயைாளர் கோழையாக, கஞ்சனாக இருக்கலாமானாலும், பொய்யனாக இருக்கக் கூடாது.

(முஅத்தா)

1. கோழையா யேனுங் குணங்கஞ்ச னாயேனும்
ஏழைவிசு வாசி யிருந்திடினும் — பாழாக்கும்
பொய்யனென வாழ்தல் பொருந்தா தெனமொழிந்தார்
மெய்வழியே நின்றநபி னார்.

### பொய்யன்

நபிமொழி : பொய் பாவங்களுக்கு வழிகாட்டுகிறது. பாவம் நரகத்திற்கழைத்துச் செல்லுகிறது. மனிதன் பொய்யையே பேசவிரும்பி உரைப்பானானால் அவன் இறைவனிடம் பொய்யன் என்றெழுதப்பட்டு விடுகிறான்.

(புகாரி)

2. பொய்யுரையே பாவவழி போகச் செயுமதுமேல்
வெய்யநர கக்குழியில் வீழ்த்துமே — பொய்விரும்பும்
தன்மையோன் பொய்யனெனப் பேர்பொறிக்கப் பட்டான்காண்
தன்னிகரி லான்சமூகந் தான்.

### பரிகாசந்தீது

நபிமொழி : எவன் பொய்யுரைத்து அதனால் மனிதரைச் சிரிக்கவைக்கிறானோ அவனுக்குக் கேடுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குக் கேடுதான். அவனுக்குக் கேடுதான்.

(அபூதாவூத் - திர்மிதி)

3. *பரிகாசம் பேசிப் பலரைச் சிரிப்பூட்டக்*
*கருதிப் பொய்கட்டு மொருவன் — எரிவாயிற்*
*கேடுடையான் கேடுடையான் கேடுடையான் என்றுரைத்தார்*
*வீடுடையார் முன்னா யவர்.*

## அதிகம் புகழாதே

நபிமொழி : அதிகமாகப் புகழ்பவர் வாயில் மண்ணை அள்ளிப் போடுங்கள்.

(திர்மிதி)

4. *பொருந்தப் புகழ்தல் பொருளாகு மன்றிப்*
*பொருந்தாப் புகழுரைத்தல் வேண்டாம் — பொருந்தாப்*
*புகழுரைப்போன் வாய்மண்ணைப் போடென்றார் பேசும்*
*புகழ்விரும்பாப் புண்ணிய னார்.*

## பொய்ஹறாம்

நபிமொழி : பொய்கள் அனைத்தும் மக்கள் மீது ஹறாமாகும். மூன்றைத்தவிர அவை :

1. கணவன் தன் மனைவியைத் திருப்தியுறச் செய் அவளிடம் பெய் கூறுதல்
2. போரில் ஒருவர் பொய் கூறுதல்.
3. இரு முஸ்லிம்களுக்கிடையிலுள்ள பிணக்ககைத் தீர்ப்பதற்குப் பொய்கூறுதல்.

(முஸ்லிம்)

5. *பிணக்ககற்றும் போது பெரும்போரி லில்லாள்*
*இணக்கமுற மூவிடத்து மன்றி — இணக்கமல*
*பொய்யுரைத்தல் முற்றும் பொருந்தா தெனவுரைத்தார்*
*வையகத்தை யுய்யமொழி வார்.*

# 7. அதர்மம்

## புறம் பேசுதல்

நபிமொழி : புறம்பேசுதல், என்றால் என்ன என்று அறிவீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களில் தன் சகோதரர் வருத்தப்படும் படியான ஒன்றைக் கூறுவது தான். உண்மையில் அது அவரிடம் இருப்பினுஞ் சரியே. இல்லையாயின் நீர் அவர் மீது அவதூறு கூறியவராவீர்.

(அபூதாவூத் - திர்மிதி)

1. *வருந்தப் பிறர்கூறும் வார்த்தை புறமாம்*
*இருந்தாலும் குற்றம் இயம்பீர் — தெரிந்தும்*
*தவறேது மில்லா தியம்பி னவர்மீ*
*தவதூறு சொன்னீ ரெனல்.*

## மனைவியைப் பிரித்தல்

நபிமொழி : மனைவியை அவளுடைய கணவனை விட்டும் துரத்திவிடச் சதி செய்பவர் நம்மில் உள்ளவராகார்.

(அபூதாவூத்)

2. *கொண்ட மனைவிதனைக் கொண்டவனின் வேறாக்கித்*
*துண்டித் தவர்தொடர்பைத் தூர்த்திவிடத் — தெண்டிக்கும்*
*பொல்லாச் சதிகாரன் போவா னெனைத்துறந்தே*
*வல்லான் நபிமொழிந்த வாக்கு.*

## கோள் சொல்லல்

நபிமொழி : கோள் சொல்லுபவன் சுவன பதியில் நுழைய மாட்டான்.

(புகாரி, முஸ்லிம்)

3. *பார்க்குங்கால் கோள்சொல்வோன் பாம்பினிலும் தீயோனாம்*
*ஆர்க்கு மவனினிய னாகான்காண் — பார்க்குள்ளே*
*கோளுரைப்போன் சொர்க்கம் குறுகா னெமையன்பால்*
*ஆளுடையார் சொன்னார் அறிந்து.*

## பிறர்மானம் வெளியிடல்

நபிமொழி : எவன் ஒருவனுடைய மானத்தை வெளிப்படுத்தி விடுகிறானோ அவனுடைய மானத்தை அல்லாஹ் வெளிப்படுத்துவான். எவன் ஒருவரைக் காட்டிக் கொடுக்கிறானோ அவனை அல்லாஹ் காட்டிக் கொடுத்து விடுவான்.

(இப்னுமாஜா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. *இறையும் பிறர்மானம் ஈங்கழிக்க வெண்ணின்*
*இறையு மவன்மானந் தீர்க்கும் — பிறர்தம்மைக்*
*காட்டிக் கொடுப்பானெவனோ வவன்காணக்*
*காட்டிக் கொடுப்பா னிறை.*

## பூரண விசுவாசியாகாதவர்

நபிமொழி : மக்களின் தன்மானத்தைப் பாதிக்கும் வண்ணம் அவர்களைக் குறை கூறுபவனும், வீண்பழி சுமத்துபவனும், வாயாடித்தனமாகப் பேசுபவனும், பூரண விசுவாசியாக மாட்டான்.

(திர்மிதி)

5. *மானங் கெடமொழிவோன் மற்றோர் மனம்நோவ*
*ஈனப்பழி தலைமே லேற்றுவோன் — ஆணவத்தால்*
*வாயடக்க மில்லா மனிதனுட னிம்மூவர்*
*தூயவிசு வாசியா கார்.*

# 8. தீதுடைமை

## பொன் வெள்ளிப் பாத்திரங்கள்

நபிமொழி : பொன் வெள்ளிப் பாத்திரங்களில் நீர் முதலியன அருந்துபவர் நரக நெருப்பைத் தம் வயிற்றில் அடைத்துக் கொள்பவரைப் போலாவார்.

(புகாரி, முஸ்லிம்)

1. *பொன்வெள்ளி கொண்டு புனைந்தொளிரும் பாத்திரங்கள்*
*உண்கலமாய்ப் பாவித்த லொண்ணாதே — நண்ணியவை*
*கொள்வார் நிரயம் கொழுந்தழலைத் தம்வயிற்றிற்*
*கொள்வார் நிகரென்று கொள்.*

## மிருகப்போர்

நபிமொழி : மிருகங்களைச் சண்டைபோடத் தூண்டி விடுவதை அண்ணல் நபியவர்கள் தடை செய்தார்கள்.

(திர்மிதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. *வேடிக்கை பார்க்க விளையாட்டுக் கொன்றையொன்று*
*சாடிப் பகையின்றி சண்டையிலே — கூடுவித்தல்*
*ஆகாதெனத் தடுத்தா ரண்ணலா ரீதுணர்வீர்*
*போகாதீர் நீர்மிருகப் போர்க்கு.*

## பொறாமை

நபிமொழி : 1. ஒருவர்க்கு அல்லாஹ் கல்வியைக் கொடுத்து அவர் அதன்படி தீர்ப்புக்கூறி அதனைப் பிறருக்கு கற்றுக் கொடுப்பாராயின் அவர் மீதும் 2. ஒருவர்க்கு அல்லாஹ் பொருளைக் கொடுத்து அதனை அவர் நல்வழியிற் செலவழிப்பாராயின் அவர் மீதும் (இவரிலும் தான் சிறந்து விளங்க வேண்டுமென்னும் நல்லெண்ணம் கொண்டால்) அன்றி வேறு எவர் மீதும் பொறாமை கொள்ளல் ஆகாது.

(புகாரி, முஸ்லிம்)

3. *கற்றுப் பிறர்க்குரைத்துக் கற்றாங்கு வாழ்வாரின்*
*மற்றிறைவன் தானருளும் மாநிதியால் — மற்றவர்க்கு*
*நல்லனவே செய்வாரின் மேலாதற் கன்றெரிவு*
*கொள்ளுதல்தீ தாமெனவே கொள்.*

## மாகொடிய பாவங்கள்

நபிமொழி : அல்லாஹ்வுக்கு இணை வைப்பதும், மாதாபிதாக்களைத் துன்புறுத்துவதும், நியாயமின்றியே ஒரு விசுவாசியைக் கொலை செய்வதும், புனித யுத்தத்தின்போது புறமுதுகிட்டோடுவதும், பத்தினிப் பெண் மீது அவதூறுரைப்பதும், சூனியம் கற்பதும், வட்டி சாப்பிடுவதும் மாகொடிய பாவங்களாயிருக்கின்றன.

(இப்னு ஹிப்பான்)

4. *இறைவற் கிணைவைத்த லீன்றார்க் கிடுக்கண்*
*மறைநம்பியைக் கோறல் வட்டி — நிறைகற்பின்*
*மாதுக் கவதூறு மாயம் புறமுதுகும்*
*தீதனா தைப்பொருளுந் தேர்.*

## கர்வம் தீது

நபிமொழி : ஒரு கடுகத்துணையாவது தன்னுடைய இருதயத்தில் கர்வமுள்ள எவனும் சுவர்க்கத்துட் புகமாட்டான்.

(அஹ்மத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. *கடுகத் துணைதானும் கர்வமெனும் தீய*
*வடுதொட்ட நெஞ்ச முடையோன் — முடுகத்தான்*
*மாட்டா னினிய வளமார் நெடுஞ்சுவனம்*
*கூட்டாது நல்லார் குணம்.*

# 3. பொருளியல் நாற்பது

## 1. வாணிபம்

### உண்மையுள்ள வணிகன்

நபிமொழி : உண்மையும் நேர்மையுமுள்ள வணிகன் மறுமைநாளில் நபிமார்களுடனும். உண்மையாளர்களுடனும், தியாகிகளுடனும், நல்லோர்களுடனும் இருப்பான்.

(திர்மிதி)

1. *மெய்யுரைத்து வாணிபத்தில் நேர்மைகண்டார் மேல்வருநாள்*
*துய்ய நபிமார்கள் தூயோர்கள் — மெய்யுடையார்*
*வீரத் தியாகியிவர் மத்தியிலே வீற்றிருப்பார்*
*ஆரணத்தார் சொன்னா ரறிந்து.*

### பாபிகளான வணிகர்

நபிமொழி : வணிகர்களில் அல்லாஹ்வுக்கு அஞ்சுபவர்களையும் நேர்மையாளர்களையும், உண்மையாளர்களையும் தவிர ஏனையோர் நிச்சயமாக மறுமையில் பெரும் பாவிகளாகவே எழுப்பப்படுவார்கள்.

(திர்மிதி)

2. *இறையச்சம் நேர்மை யிகவாது மெய்ம்மை*
*மறவாத வாணிபரே யல்லால் — பிறராவார்*
*பாபிகளாய் மேனாள் பரமன் கொடுஞ்சினத்தை*
*மேவிடுவா ரென்றெ விளம்பு.*

### கெட்ட வணிகன்

நபிமொழி : உணவுப் பொருட்களைப் பதுக்குபவன் மினவும் கெட்டவன். அல்லாஹ் விலையை மலிவாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவிட்டால் அளவு கடந்து வருந்துவான். விலையை உயர்த்தி விட்டாலோ மிகவும் மகிழ்ச்சியுறுவான்.

(றஸீன்)

3. *உண்பார் தவிக்க உணவுப் பொருள்பதுக்கும்*
*பண்பில் வணிகன்மா பாவிகாண் — அன்பில்லான்*
*பண்டம் மலிந்தால் மனம்பதைப்பா னூரொறுத்தால்*
*கொண்டாட்ட மாகு மிவன்*

## ஆணையிடல்

நபிமொழி : ஆணையிடுவது வாணிபத்தை அதிகப்படுத்துகிறது. எனினும் வருவாயைக் குறைத்து விடுகிறது.

(புகாரி - முஸ்லிம்)

4. *கண்ணானை யுண்மையிது சத்தியமே யென்றுரைக்கு*
*விண்ணாணம் வாணிபத்தைக் கூட்டுமெனும் — என்னே*
*குறைக்கும் வருவாயைக் கூறாதீ ராணை*
*மறைக்கு விளக்கானார் வாக்கு.*

## ஏகபோக வாணிபம்

நபிமொழி : இஸ்லாத்தில் (ஒரு மனிதனே ஒரு வர்த்தகத்தைச் செய்யலாமென்னும்) ஏகபோக வியாபார சுதந்திரம் என்பது சட்ட விரோதம் என்று கண்டிக்கப்பட்டிருக்கிறது.

(முஸ்லிம்)

5. *ஒருபொருளின் வாணிபத்தை யோர்வணிகறி கென்றே*
*உரிமைகொளல் நீதியிலை யோர்வாய் — அரிய*
*குறைஷிக் குலவணிகர் கோமகனார் கேளிவர்*
*அறையுமுறை யீதென் றறி.*

# 2. கடன்

## இறுக்கும் கடன்

நபிமொழி : எவர் தருமம் கொடுத்துவிடும் நோக்கத்தோடு பொருளைக் கடனாகப் பெறுகிறாரோ அல்லாஹ் அக்கடனைத் தீர்த்து வைக்கிறான். மோசம் செய்யும் நோக்கத்தோடு எவர் பொருளைக் கடனாகப் பெறுகிறாரோ அவரை அல்லாஹ் பாழாக்கி விடுவான்.

(புகாரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. *கொடுக்கும் விருப்போடு கொண்டார் கடனை*
*கொடுக்கு மிறைசித்தங் கொண்டு — கொடுக்காத*
*வஞ்சமனத் தோடுகடன் வாங்குமவ னுக்கிறைவன்*
*தஞ்சமிலை பாழாகுந் தான்*

## வட்டி

நபிமொழி : வட்டியை உண்ணுபவனையும், வட்டி கொடுப்பவனையும், வட்டிக்கணக்குகளை எழுதுபவனையும், சக்காத்தைத் தடை செய்பவனையும் அண்ணல் நபியவர்கள் சபித்தார்கள்.

(நசாஈ)

2. *வட்டி பறித்துண்டான் வட்டி கொடுத்தானாம்*
*வட்டி கணித்தான் வரிமுதலைத் — தட்டிக்*
*கழித்தான் நபியின் கடுஞ்சாபத் தீயிற்*
*குளித்தா னென்றெண்ணப் படும்*

## இரவல், பொறுப்பு, கடன்

நபிமொழி : இரவல் திருப்பித்தரப்படல் வேண்டும். பொறுப்பேற்றுக் கொண்டவர் பொறுப்புள்ளவரே. கடன் தீர்க்கப்படுவது கடமையே

(திர்மிதி)

3. *பெற்றவிர வற்பொருளைப் பெற்றாங் களித்திடுக*
*சற்றே கடனுமடைத் திடுக — உற்றவர்க்காய்*
*நின்றுபொறுப் பேற்றார் நிறைவேற்ற முன்னிடுக*
*நன்றறிந்தார் சொன்னார் நமக்கு.*

## கண்டெடுத்த பொருள்

நபிமொழி : எவர் வழியில் விழுந்து கிடக்கும் பொருளைக் கண்டெடுக்கிறாரோ அவர் நீதமான ஒருவரையோ இருவரையோ அதற்குச் சாட்சியாக்கிக் கொள்ளவும். அவர் அதில் சிலவற்றை மறைக்கவும் கூடாது. கபளீகரஞ் செய்யவுங் கூடாது. பின்னர் அதற்குரியவரைக் காணின் அதை அவரிடம் கொடுத்து விடவும்.

(அபூதாவூத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கண்டு வழியிடையே கைக்கொண்டா லோர்பொருளைக்
கொண்டிருவர் சாட்சியாக் கொண்டபொருள் — கண்டுடையார்
கைசேர்க்க சற்றும் கரவே லுனதாகல்
மெய்சேர்க்கும் வள்ளல் விதி.

### அடைமானம்

நபிமொழி : அடைமானப் பொருள் மறுக்கப்படலாகாது.
(முஅத்தா)

5. ஆற்றா னொருவ னடைக்கலமாய் வைத்தபொருள்
போற்றியே காத்துப் பொதிந்ததனை — மாற்றமின்றி
காலத் தவன்கேட்பின் கையளிக்க வென்றுரைத்தார்
ஞாலத்தார் போற்றும் நபி.

## 3. தருமம்

### தருமத்தின் சிறப்பு

நபிமொழி : அறஞ்செய்தல் இறைவனின் சினத்தைத் தணியவைத்து தீய இறப்பை விட்டும் தம்மைத் தப்புவிக்கிறது.
(திர்மிதி)

1. தரும மிறைசினத்தைத் தாங்கித் தணிக்கும்
மருவுங் கொடுமரணம் வாராதே — ஒருவும்
எனமொழிந்தா ரென்னும் எளியார் தமக்கு
மனமுவந்து தந்த மகான்.

### சொந்தப்பொருள்

நபிமொழி : ஒருவர் தன்வாழ்நாளில் செலவு செய்து விடுவதே அவருடைய பொருளாகும். அவர் தான் இறந்தபின் விட்டுச் செல்வது அவரின் வாரிசுகளின் பொருளாகும்.
(நசாஈ)

2. உண்டுடுத்து நன்மைக் குதவி யனுபவித்துக்
கொண்டதே நின்பொருளாக் கொள்ளுகநீ — மண்டலத்தை
விட்டேகும் போது விடுத்தபொருள் வாரிசுக்காம்
கட்டுனக்கா கும்பொருளைக் கண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடுத்தால் குறையாது

நபிமொழி : அறஞ்செய்வதனாற் பொருள் குறைந்து விடாது. எவராவது இரப்பின் வாசலைத் திறப்பாராயின், அல்லாஹ் அவர் மீது மிடிமையின் வாசலைத் திறந்து விடுகிறான்.

(திர்மிதி)

3. *கொடுத்தார்க்குச் செல்வங் குறையா திரவை*
*எடுத்தார்க் கதனா லிழிவாம் — அடுத்து*
*மிடிமையின் வாசலதை மேலோன் திறப்பான்*
*விடியா திரப்பார் மிடி.*

## அன்பளிப்பு நன்று

நபிமொழி : ஒருவருக்கொருவர் அன்பளிப்புச் செய்து கொள்ளுங்கள். ஏனெனில் அன்பளிப்பு உள்ளத்தின் கசடுகளை அழித்துவிடும். எவரும் தன் அண்டை வீட்டாரை இழிவாகக் கருத வேண்டாம். அவர் ஆட்டின் குளம்புத் துண்டை அன்பளிப்பாக அனுப்பிய போதினும் சரியே.

(திர்மிதி)

4. *அன்பளிப்பு நன்றெ அதுமனத்தின் மாசகற்றும்*
*அன்பளிப்புத் தந்த அயலகத்தார் — அன்பளிப்பு*
*என்பெறினு மேற்க விழிபன் றவர்தரமும்*
*நன்றே யெனக்கருத னன்று.*

## நன்கொடை திருப்பல்

நபிமொழி : ஒருவர் நன்கொடை வழங்கிவிட்டு அதனை அவர் திரும்பப் பெற்றுக் கொள்வது ஆகுமானதல்ல. ஆனால் தந்தை மைந்தனுக்கு அளித்ததைத் திரும்பப் பெறுதல் ஆகுமானதாகும்.

(அஹ்மத், திர்மிதி, ஹாகிம்)

5. *கொடுத்தோர் நன்கொடையைக் கோடி கெடினும்*
*எடுக்க விரும்ப லிசையா — தடுத்தொருகால்*
*தந்தைக் கிசையுந் தனயர்க் களித்ததனைச்*
*சொந்தமெனப் படுத்தல் தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. மதுபானம்

## மதுபாப மூலம்

நபிமொழி : மதுபானம் பாவங்கள் ஒன்று சேருமிடமாகும். பெண்கள் ஷைத்தானின் கயிறாவர். உலக ஆசை ஒவ்வொரு பாவத்துக்கும் கடைக்காலாகும்.

(றஸீன்)

1. *வார்த்தால் மதுபானம் மாபாவம் சேர்க்கும் பெண்*
*சாத்தான் கயிறாம் சகத்தாசை — பார்த்தால்*
*தொடர்பாவ மெல்லாமே தோன்றுமொரு காலாம்*
*இடராகு மென்றா ரிவை.*

## மதுவும் இணை வைத்தலும்

நபிமொழி : மதுபானம் அருந்துவதற்கும், அல்லாஹ்வை அல்லாதவற்றை வணங்குவதற்கும் இடையில் நான் வேற்றுமை காணவில்லை.

(நசாஈ)

2. *எல்லாம் படைத்தியக்கு மேக பரம்பொருளை*
*அல்லாத வற்றை யடிபணிதல் — பொல்லாத*
*போதைமது வுண்கின்ற புன்மை யிரண்டிற்கும்*
*பேதமிலை குற்றமென்றே பேசு.*

## மதுபானங்கள்

நபிமொழி : போதை தரக் கூடியவை அனைத்தும் மதுபானமேயாகும். அன்றிப் போதை தரக்கூடியவை அனைத்தும் தடை செய்யப்பட்டவையேயாகும். மதுபானம் அருந்திக் கொண்டு வந்து அதே நிலையில் இறந்து விடுவானாயின் மறுமையின் பானங்களை அருந்த மாட்டான்.

(புகாரி, முஸ்லிம்)

3. *மதிமயக்கு மெல்லாம் மதுவே மதுவே*
*விதிசெய்ததைத் தடுத்தான் மேலோன் — மதுவை*
*அருந்தி யிறப்பார்போய் அமரபா னத்தை*
*அருந்துபே றற்றா ரறி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுபானம் இழிவு

நபிமொழி : மதுபான மருந்தாதீர். ஏனென்றால் மெய்யாகவே அது எல்லா இழிவான செயல்களுக்கும் முதன்மை-யானதாகும்.

(ஹாகிம்)

4. *இழிவென் றுலகொதுக்கு மெல்லா வினையும்*
*ஒழிவின்றிக் கூட்டு மொருமூலம் — பழியே*
*மருந்தென்று தானும் மறந்தும் மதுவை*
*அருந்தாதீ ரென்றா ரறிந்து.*

## மதுபானியின் அவலம்

நபிமொழி : மதுபானம் அருந்துபவர்களுக்கு நரகவாதிகளின் வியர்வையை அல்லது ஊனத்தைப் பானமாகக் கொடுப்பேன் என அல்லாஹ் அறிவிக்கிறான்.

(முஸ்லிம்)

5. *கள்ளருந்து வார்க்குக் கடுநிரய வெந்தழலில்*
*உள்ளார் வெயர்வன்றி யூனமதைக் — கள்ளாய்க்*
*கொடுப்பே னெனவிறைவன் கூறினா னென்ன*
*விடுத்த நபிகூற்றை விளங்கு.*

# 5. உழைப்பு

## உழைத்துண்ணல்

நபிமொழி : நீங்கள் உழைத்துண்பதுவே தூய உணவாகும். உங்கள் வழித்தோன்றல்களும் உங்கள் சம்பாத்தியத்தில் சேர்ந்தவர்களாவர். அவர்களின் சம்பாத்தியமும் உங்களுக்குத் தூய்மையானதே.

(திர்மிதி, நசாயி, இப்னுமாஜா, தாரமீ)

1. *உழைத்துண்ணல் தூய உணவாகு மஃதுன்*
*வழித்தோன்று வார்க்கும் வழியே — தழைத்தோங்கும்*
*சந்ததியு முன்னிதியே சாற்றி னுனக்கவர்செய்*
*சொந்தநிதி யுந்தூய்மை யே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொந்த உழைப்பு

நபிமொழி : தம் கையால் உழைத்துண்பதைவிட மிகமேலான உண்வை எவரும் உண்பதில்லை.

(புகாரி)

2. *உண்ணும் உணவி லுயர்வா யமைந்ததனை*
*எண்ணி லொருவன் முயன்றினிது — கண்ணியமாய்த்*
*தானே யுழைத்துண்ணல் தானென்றார் வாழ்விழந்த*
*மானார்க்கும் வாழ்வளித்த மன்.*

## உழையாதவன்

நபிமொழி : வேலை செய்வதற்கு வேண்டிய தேக திடமும் சௌகரியமும் வாய்க்கப் பெற்ற ஒருவன் தனக்காகவாவது பிறர்க்காகவாவது வேலை செய்யாதிருப்பானாயின் அவனுக்கு ஆண்டவனுடைய அருட்பெருஞ்சோதி வாய்க்க மாட்டாது.

3. *உடனலமும் வாய்ப்புகளு முற்றான் தனக்கோ*
*தொடர்புடையார்க் கோவோர் தொழிலைக் — கடனாய்ச்*
*செய்துழைக்கான் சோம்பித் திரிவானேல் தெய்வதிரு*
*மெய்யொளி வாய்க்கா தவன்.*

## உழைப்பின் சிறப்பு

நபிமொழி : யாசிப்பதன் மூலம் கியாமத்து நாளில் உமது முகத்தில் கறுப்பான வடுக்களுடன் வருவதைவிட உழைப்பு உனக்கு மேலானது.

(அபூதாவூத், இப்னுமாஜா)

4. *மேலைநாள் தன்முகத்தில் மேவுங் கரும்புள்ளி*
*கோலமுடன் வந்து குறுகுதலின் — வேலைசெய்து*
*உண்டிங் கிருந்த லுயர்வென்றார் தான்தனியே*
*உண்டறியா ருத்தமனா ரோர்ந்து.*

## உழைப்பு யாசிப்பதைவிட மேல்

நபிமொழி : உங்களில் எவரும் காட்டில் விறகு வெட்டிச் சுமந்து விற்று தன்மானத்தைக் காப்பது, அவர் மக்களிடம் யாசிப்பதைவிட மேலானதாகும்.

(புகாரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. *காட்டில் விறகுவெட்டி காவுகொண்டு விற்றேனும்*
*ஈட்டும் பொருளதனா லீனமின்றி — நாட்டினிலே*
*வாழ்வதுமேல் யாசகத்தின் மானம் பொருளாக*
*வாழ்வதுமே லாகும் வழி.*

## 6. இரத்தல்

### யார் ஏழை

நபிமொழி : ஓரிரு கவளச் சோற்றிற்கு அலைபவர் ஏழையல்லர் எனினும் தமக்குத் தேவையுள்ள பொருளைப் பெறாதவரும், தானம் அளிக்கப்படத்தக்க விதத்திலுள்ள அவருடைய நிலை, பிறருக்குத் தெரியாமலிருப்பவரும், தாமே நேரில் வந்து மக்களிடம் யாசிக்காதிருப்பவருமே உண்மையில் ஏழையாவார்.

(புகாரி, முஸ்லிம்)

1. *தேவை யடையார் தெரியப் படாதுறையும்*
*ஈவுக் குரியா ரெவரிடத்தும் — பாவித்தும்*
*யாசிக்கா ரல்லா தியாங்கணு மோர்கவளம்*
*யாசிப்பா ரேழையா கார்.*

### நபிமணியின் உறுதியுரை

நபிமொழி : எவர் மக்களிடம் எதையும் யாசிப்பதில்லையென்று என்னைப் பிணையாக வைத்து உறுதியளிக்கிறாரோ அவருக்கு நான் சுவனபதியைக் கொண்டு பிணையேற்பதாக உறுதியளிக்கிறேன்.

(அபூதாவூத், நசாஈ)

2. *மக்களிடம் யாசிக்கேன் வள்ளல் நபிபிணையாய்*
*எக்காலு மென்றுறுதி யேற்பாற்கு — அக்காலம்*
*நானே பிணையென்றார் நல்கச் செழுஞ்சுவனம்*
*வானோரும் போற்றும் மகான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாசிப்பார்கதி

நபிமொழி : உங்களில் எவர் பிச்சையெடுப்பதை வழக்கமாகச் செய்து வருகிறாரோ, அவர் மறுமையில் அல்லாஹ்வைச் சந்திக்கும்போது முகத்தில் சதைப்பற்றில்லாத-வராயிருப்பார்.

(புகாரி, முஸ்லிம்)

3. *யாசித் தலைத்தொழிலாய் நாளும் நயப்பவர்கள்*
*பேசிப் பயனில்லாப் பேர்நாளில் — தேசற்ற*
*வற்றன் முகத்தினராய் வல்லான்முன் தோன்றுவர்காண்*
*பற்றன்மின் யாசகந்தாழ் வென்று.*

## ஆண்டவனிடம் யாசியுங்கள்

நபிமொழி : எவரிடம் அல்லாஹ்வின் பெயர்கூறி யாசிக்கப்பட்டும் அவர்தானமளிக்கவில்லையோ அவர்தாம் மனிதர்களில் மிகவும் கெட்டவர். நீங்கள் அல்லாஹ்வின் பெயரைக்கூறி யாசிக்காதீர்கள். அவனிடமே கோருங்கள்.

(றஸீன்)

4. *யாசித்தலை யெண்ணீர் நாயன் பெயர்கூறி*
*ஆசிப்பீ ரேது மவனிடமே — யாசித்தும்*
*ஈயானே மாந்தருக்கு ளெல்லாம் கொடியவனத்*
*தீயானைத் தேடீர் தெரிந்து.*

## மேற்கையும் கீழ்க்கையும்

நபிமொழி : தாழ்ந்த கையைவிட உயர்ந்த கையே மேலானது. உயர்ந்தகை கொடுக்கிறது. தாழ்ந்த கை பிச்சை கேட்கிறது.

(புகாரி, முஸ்லிம்)

5. *தானம் விரும்பித் தருங்கரமே மேற்கரமாம்*
*தானம் பெறுங்கரங்கீழ் தானாகும் — ஈனம்*
*பெறுங்கீழ்க் கரமம்ம பேசின் பெருமை*
*உறும்மேற் கரமென் றுணர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. பெண்ணலம்

## பெண்ணும் நறுமணமும்

**நபிமொழி :** எனக்குப் பெண்ணும் நறுமணமும் பிரியமுள்ளனவாகச் செய்யப்பட்டுள்ளன. அன்றித் தொழுகையில்தான் என் கண்களுக்குக் குளிர்மையுண்டாகிறது.

(அபூதாவூத்)

1. *மாதர் குலமும் மணக்கும் நறும்பொருளும்*
*நாத னெனைவிரும்ப நல்கிவைத்தான் — கோதில்*
*இறைதொழுகை யென்கண் குளிர்ச்சிகா ணென்றார்*
*மறைமொழிந்த மன்னர் மகிழ்ந்து.*

## பதிபக்தி

**நபிமொழி :** உருவர் மற்றொருவருக்குச் சிரம் பணியலாம் என்றிருப்பின் மனைவி தன் கணவனுக்குச் சிரம்பணிய வேண்டுமென நான்கட்டளையிட்டிருப்பேன்.

(திர்மிதி)

2. *ஏக னொருவனுக்கே யன்றிச் சிரம்பணிதல்*
*ஆகும் பிறிதொருவர்க் காமென்னில் — தோகைநல்லாள்*
*கொண்டவனுக் கென்பேன் குடும்ப விளக்கன்னாள்*
*விண்டுரைத்த வேந்தர் விதி.*

## பெண்ணின் தனிப்பிரயாணம்

**நபிமொழி :** விசுவாசியான ஒரு பெண் தன்னோடு தன்னை மணக்கத் தடை செய்யப்பட்ட உறவினருள் எவரையும் அழைத்துச் செல்லாது, எவர் துணையுமின்றி ஓர் இரவு பகல் பயணத் தொலைப் பிரயாணஞ் செய்வது ஆகாது.

(புகாரி, முஸ்லிம்)

3. *தன்னை மணக்கத் தடையுறவு வாய்ந்தவரில்*
*துன்னு மொருவர் துணையின்றிப் — பெண்ணாவாள்*
*அல்லுபக லோர்நாட் பயணந் தனிப்போகாள்*
*அல்லல் வருமென் றறிந்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணும் பிறஆணும்

நபிமொழி : ஒரு பெண் தன்னை மணக்கத் தடை செய்யப்பட்டவரில் ஒருவர் தன்னோடு இருந்தாலன்றி பிற ஆண் ஒருவனோடு தனித்திருத்தலாகாது.

(புகாரி, முஸ்லிம்)

4. *தன்னை மணக்கத் தடையுறவுள் ளானொருவன்*
*தன்னுடனே யில்லாச் சமயத்தில் — பெண்ணொருத்தி*
*மற்றொருவ னோடு தனித்துறைதல் மாபெரிய*
*குற்றமெனச் செப்பினர்நங் கோ.*

## ஆண்களுக்கு எச்சரிக்கை

நபிமொழி : தங்கள் கணவனில்லாத வீடுகளிலுள்ள பெண்ணிடம் போகலாகாது.

(முஸ்லிம்)

5. *இல்லுடையா னில்லத்தி லில்லாத போதந்த*
*இல்லுடையாள் தன்னிடத்தி லின்னொருவன் — செல்லுவது*
*நல்லதல நல்லதல நாடினது தீதென்றார்*
*நல்ல நயினார் நமக்கு*

# 8. மனையறம்

## இல்லறமே நிறை செல்வம்

நபிமொழி : உலகம் இன்பப்பொருளாகும். மறுமைக்குதவும் மனைவியே இன்பப் பொருட்களின் உத்தமமானதாகும். மனைவி இல்லாதவன் உண்மையாகவே ஏழையான மனிதனாவான். எவ்வளவு செல்வமிருந்தாலும் கணவனில்லாத பெண்ணுமேழையே.

(றஸீன்)

1. *எத்துணைதான் செல்வமிருந்தாலும் தற்கொண்ட*
*பத்தாவை யில்லாள்பே றில்லாளே — அத்துணையே*
*இல்லாளை யில்லான்மற் றில்லானே யாமென்றார்*
*நல்லாறு கண்ட நபி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்தியுள்ளவனே நன்மனையாள்

நபிமொழி : மதபக்தியுள்ள பெண்களைத் தேடுவீர்களாக. வேறு எதற்காகவும் நீங்கள் திருமணம் செய்வீர்களானால் உங்கள் கரங்கள் அழுக்கில் தோயப்படும்.

(அஹ்மத்)

2. *பக்தி விசுவாசம் படைத்தா ளெனிலொருத்தி*
*ஒக்கும் மணக்க ஒழிந்தாளை — எக்காலும்*
*எண்ணி லவர்கைக ளெய்து மழுக்கென்றார்*
*பெண்ணுயர்வு கண்ட பிரான்.*

## கணவன் கடன்

நபிமொழி : ஒரு மனைவிக்கு அவள் கணவனிடமுள்ள உரிமைகள் : 1. தானுண்ணும் போது அவளுக்கும் உணவளித்தல். 2. தான் உடையுடுத்தும்போது அவளுக்கும் உடையுடுத்தல். 3. அவளை முகத்திலடிக்காதிருத்தல். 4. அவளைத் திட்டாதிருத்தல். 5. அவளுடைய சொந்த வீட்டைத்தவிர வேறிடத்தில் தனியாக விட்டு விடாதிருத்தல்.

(அஹ்மத், அபூதாவூத்)

3. *உண்ணுங்கா லூண்தந் துடுத்தா லுடைவழங்கிக்*
*கண்ணாள் முகத்தி லடிக்காதே — எந்நாளும்*
*வையாதே. பெண்ணைத் தனியாக வேறிடத்து*
*வையாதே கொண்டகண வா.*

## நல்ல மனைவி

நபிமொழி : தன்னைக்கண்டு தன் கணவன் முகமலரக் காரணமாயிருப்பவளும், கணவனிட்ட கட்டளையைப் பின்பற்றி நடப்பவளும், தன் உடலாலும் பொருளாலும் தன் கணவனுக்கு மாறு செய்யாதவளுமே நல்ல பெண்மணியாவாள்.

(நசாஈ)

4. *கணவன் முகம்மலரக் காண்பாள் தனது*
*கணவன் கருத்துக் கமைவாள் — கணவனுக்கு*
*யாதொன்றும் மாறில்லாள் தானே மனைநல்லாள்*
*தீதொன்றார் சொன்ன திது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவாக விடுதலை (தலாக்)

நபிமொழி : ஆகுமான் செயல்களில் எந்தச் செயலும் அல்லாஹ்விடம் தலாக்கை விட அதிகம் கோபமிளப்பதாக இல்லை.

(அபூதாவூத்)

5. *உரிமையுண் டாயினு முன்மனையாள் பந்தம்*
*பிரிய விடுதலையெண் ணாதே — பெரியோன்*
*கடுங்கோபங் கொள்ளும் கருமமீ தென்றார்*
*அடும்போரி லேறன் னவர்.*

# அருளியல் நாற்பது

## 1. பெற்றார்

### தாயின் பெருமை

நபிமொழி : தாயாருக்குப் பணிவிடை செய்வதை மேற்கொள்ளுங்கள். ஏனெனில் சுவர்க்கம் அவரின் காலடியின் பக்கல்தான் உள்ளது.

(நசாஈ)

1. *நன்றாள் தனக்கிங் கிசைவாய்ப் பணிசெய்க*
*சான்றோ னவன்சொர்க்கஞ் சாற்றுங்கால் — ஈன்றாள்*
*மலரடிக்கீ ழென்றார் மகிதலத்தி லன்னை*
*மலரன்பு காணா மகன்.*

### தந்தையின் பொருத்தமும் கோபமும்

நபிமொழி : இறைவனின் திருப்பொருத்தம் தந்தையின் பொருத்தத்தைப் பொறுத்ததாயிருக்கிறது. இறைவனின் கோபம் தந்தையின் கோபத்தைப் பொறுத்ததாயிருக்கிறது.

(திர்மிதி)

2. *தந்தை சினக்கின் தனியிறைவன் தான்சினக்கும்*
*தந்தை யுவக்கி னவனுவக்கும் — மைந்தீர்காள்*
*தந்தை யுவக்கும் தனயராய் வாழ்கவென்றார்*
*தந்தை தயையறியா தார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் தந்தையர் திருப்தி

**நபிமொழி :** பெற்றோர் சுவனபதியின் நடுவாசலுக்குரியதாகும். விரும்பினால் அதைப் பாதுகாத்துக் கொள். அல்லது பழுதாக்கு. ''பிறுதௌஸ்'' எனும் சுவர்க்கத்தினுள் அதன் சிரேஷ்டமான வாசல் வழியே ஒருவன் நுழைய விரும்புவானாயின் அவன் தன் தாய் தந்தையருக்கு திருப்தி செய்தல் வேண்டும்.

(இப்னுமாஜா, திர்மிதி)

3. *தாயார் மனமகிழத் தாதை யுளநிறையச்*
*சேயான் அவர்கடமை செய்திடுக — தூய*
*எழிலார் பிறுதௌஸின் ஏற்றமுறு வாயில்*
*நுழைவான் விரும்பு மெனின்.*

## வயோதிபப் பெற்றாருக்குப் பணிவிடை

**நபிமொழி :** தனது தாய்தந்தையரையோ அவர்களிலொருவரையோ வயோதிப நிலையில் ஒருவன் பெற்றிருந்தும் அவர்களுக்குப் பணிவிடை செய்யாதிருந்து அதனால் சுவர்க்கஞ் செல்லாதவன் மூக்கு அறுபடட்டும்.

(முஸ்லிம்)

4. *தந்தையோ தாயோ தளர்ந்தா ரிருவருமோ*
*வந்தெய்து மூப்பில் மகன்கடனாய் — அன்பின்*
*பணிசெய்யான் வாளா விருந்தான் சுவனத்*
*தணிகாணான் மூக்கு மறும்.*

## ஒப்பும் இறைஞ்சுதல்கள்

**நபிமொழி :** மூன்று இறைஞ்சுதல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

1. அநீதமிழைக்கப்பட்டானிறைஞ்சுதல்
2. ஏழையினிறைஞ்சுதல்
3. தந்தை தன்மைந்தனுக்காகச் செய்யும் இறைஞ்சுதல்.

(அபூதாவூத்)

5. *தந்தை மகனுக்காய்த் தாழும் பிரார்த்தனையும்*
*நொந்தேழை செய்துநிற்கும் வேண்டுதலும் — மன்றில்*
*அநியாயம் பட்டா ரிறைஞ்சலுமென் மூன்றும்*
*தனியான் தவிர்ப்பதிலைத் தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. தலைமை

## அல்லாஹ்வின் அதிகாரி

நபிமொழி : எவர் அல்லாஹ்வின் அதிகாரியை அவமதிக்கிறாரோ அவரை அல்லாஹ்வும் இழிவு செய்திடுவான்.

(திர்மிதி)

1. *வல்லான் மறைகாக்க வந்த வதிகாரி*
*நல்லானை நன்கு மதித்திடுவீர் — அல்லால்*
*இறைகோப மும்மே லிழிவுவருங் காண்பீர்*
*மறைகூறும் நாயகனார் வாக்கு.*

## தலைவருக்குக் கீழ்ப்படி

நபிமொழி : உங்கள் மீது நீக்றோ அடிமையொருவர் தலைவராக நியமிக்கப்பட்டபோதிலும் அவர் அல்லாஹ்வின் திருமறைப்படி ஆணை பிறப்பித்துக் கொண்டிருக்கும் வரை நீங்கள் அவருக்கு வழிப்படுங்கள்.

(புகாரி)

2. *அடிமையொரு வன்தலைவ னானாலு மன்னோன்*
*நெடியோன் மறைக்கிணங்க நின்றே — இடுமாணை*
*எல்லாம்நீ ரேற்பீர் பணிவீ ரெனமொழிந்தார்*
*நல்லார்க்குள் நல்ல நபி.*

## தலைவரின் பொறுப்பு

நபிமொழி : நீங்கள் அனைவரும் அதிகாரிகளே. மேலும் நீங்கள் அனைவரும் உங்களின் கீழுள்ள பிரசைகள் பற்றிக் கேட்கப்படுவீர்கள்.

(திர்மிதி)

3. *எல்லீருந் தாந்தலைவர் கண்டீர்நீ ரிங்குமது*
*சொல்லாணைக் குள்ளோர் சுகநலன்கள் — எல்லாம்*
*குறித்திறைவன் கேட்கையிலே கடசாமற் கூறும்*
*பொறுப்புணர்ந்து வாழ்வீர் புவி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவன் பண்பு

நபிமொழி : அண்ணல் நபியவர்கள் தம் அலுவல் காரணமாக எவரையும் அனுப்பிவைத்தால் அவரிடம் ''மக்களுக்கு நன்மாராயங் கூறுமாறும் வெறுப்புண்டாக்காதிருக்குமாறும் எளிதானதைத் தெரிவிக்குமாறும், அவர்களைத் துன்பத்திற்காளாக்காதிருக்குமாறும் கூறிவந்தார்கள்.

(அபூதாவூத்)

4. *நற்செய்தி கூறி நயப்பூட்டி நன்குணரும்*
*சொற்கெளிதாய்த் தூதினையே சொல்லுங்கள் — மக்கள்தாம்*
*துன்பமடை யாவண்ணம் சொல்வீ ரெனவிடுப்பார்*
*தன்பணிக்கே போவார் தமக்கு.*

## நயவஞ்சகன் தலைவனாகான்

நபிமொழி : நயவஞ்சகனை நீங்கள் தலைவனென்று கூறாதீர்கள். அவன் தலைவனாக இருந்தால் நீங்கள் நிச்சயமாக அல்லாஹ்வைக் கோபத்துக்குள்ளாக்கி விட்டீர்கள்.

(அபூதாவூத்)

5. *நயவஞ் சகன்தலைவ னாகா னவனை*
*நியமஞ் செயவேண்டா நீவிர் — நியமம்நீர்*
*செய்யி னிறைகோபத் தீக்குள்வீழ்ந் தீரென்றார்*
*துய்ய வறிவின் சுடர்.*

# 3. நீதிபதி

## நீதிபிழையாதே

நபிமொழி : உண்மையைக் கண்டுபிடித்து அதற்கேற்ற முறையில் தீர்ப்புச் செய்கிற நீதிபதி, சுவர்க்கம் புகுவான். உண்மையை அறிந்தும் பிழையான முறையில் தீர்ப்பளிப்பவனும், அறியாமையால் வழக்குகளில் தீர்ப்பளிப்பவனும் நரகம் புகுவார்.

(திர்மிதி, நஸாஈ, ஹாகிம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தீர விசாரித்துத் தீர்ப்பு வழங்குபவன்
சேருமிடஞ் சொர்க்கமே தேர்ந்தறிந்தும் — நேர்மையின்றி
ஓரமுரைத் தோனுணரா துண்மைபிழைத் தோனிவர்கள்
சேருமிடந் தீநரக மே.

## நீதிபதியின் ஸ்தானம்

நபிமொழி : நிச்சயமாக நீதி பகர்வோர் அல்லாஹ்வின் அருகில் ஒளிமிக்க மின்பர் படிகளின் மீது வீற்றிருப்பார்.

(முஸ்லிம்)

2. இறைசந் நிதியருகே யிட்டதொரு மஞ்சம்
நிறைகாந்தி யோடிலங்கும் நீதி — இறையேனும்
கோடாதார் வீற்றிருப்பா ராங்கே யெனக்குறித்தார்
கோடாது நீதிசொலுங் கோ.

## நீதிபதியுடன் இறைவன்

நபிமொழி : தீமைசெய்யாத வரையில் நீதிபதியுடன் இறைவனிருக்கிறான். அவன் பிழை செய்யும்போது ஆண்டவன் அவனை விட்டு விடுகிறான். அந்த இடத்தில் ஷைத்தான் வந்து விடுகிறான்.

(திர்மிதி)

3. தீதுரையாக் காலமெலாந் தெய்வந் துணைநிற்கும்
நீதிபதிக் காகவே நேரிதாய் — நீதி
யிழைக்குங்கா லாங்கே பிரியும்பின் சாத்தான்
நுழைக்குந் தலையென் றுணர்.

## சினமுற்றார் தீர்ப்பு வழங்காதீர்

நபிமொழி : எவரும்சினமுற்றிருக்கும்போது இருவருக்கிடையில் தீர்ப்பு வழங்க வேண்டாம்.

(திர்மிதி)

4. இருதிறத்தார் தம்மு ளிடைவிளங்கித் தீர்ப்பு
தருதிறத்து முண்டோர் தடங்கல் — இடையொருத்தன்
சீற்றமுற்றா னென்னினடுத் தீர்ப்புவழங் கேல்சீற்றம்
மாற்றமுற்ற பின்பே வழங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருவரையும் விளங்கித் தீர்ப்புச் செய்

நபிமொழி : இரண்டு கட்சியார் உங்களிடம் நியாயத் தீர்ப்புக்காக வந்தால் ஒரு கட்சியாரின் முறையீட்டைக் கேட்டுவிட்டு, எதிர்க்கட்சியாரின் வாதத்தைக் கேட்குமுன் நியாயத் தீர்ப்புச் செய்ய வேண்டாம்.

(அஹ்மத், அபூதாவூத்)

5. *வாதியுரை கேட்டு வழக்கைவிளங் கிப்பிரதி*
*வாதியுரை கேட்கமுன் மன்றினிலே — நீதி*
*உரைக்க நினையாதே யுண்மை யிருபாலும்*
*பரக்க விளங்கிப் பகர்.*

# 4. சாட்சியம்

## மேலான சாட்சி

நபிமொழி : நான் உங்களுக்குச் சாட்சியங்களில் மிகவும் மேலானவரை அறிவிக்க வேண்டாமா? நீங்கள் அவரிடம் சாட்சியம் கோர முன்னரே அவர்தம் சாட்சியத்தைக் கூறிவிடுவார் அவரே.

(முஸ்லிம்)

1. *சாட்சிகளில் மேலான சாட்சி யறைபவரே*
*சாட்சியம்நீர் வேண்டியே சார்வதன்முன் — சாட்சிகாள்*
*புகல்வதற்கு முன்நிற்பார் என்னப் புகன்றார்*
*நிகரவர்க்கிங் கில்லா தவர்.*

## பொய்ச்சாட்சி

நபிமொழி : பொய்ச்சாட்சியம் அல்லாஹ்வுக்கு இணை வைப்பதற்குச் சமமாக்கப்பட்டுள்ளது.

(அபூதாவூத்)

2. *மீட்சியிலாப் பாவ மிணைவைத்தல் மன்றிற்பொய்ச்*
*சாட்சியுமு மன்ன தகைத்தாமே — மீட்சியிலை*
*என்றுரைக்கும் தம்மவர்க்காய் ஏக னிடமிரந்து*
*நன்றுரைக்கும் நாயகனார் நா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தியம்

நபிமொழி : சத்தியம் செய்ய வேண்டியநிலை ஏற்பட்டால் எவரேனும் பொய்ச்சத்தியம் செய்தால் அவர்தம் இருப்பிடத்தைத் நரகத்தில் ஏற்படுத்திக் கொள்ளவும்.

(அபூதாவூத்)

3. *சத்தியஞ்செய் யேலொருகால் சத்தியஞ்செய் தாலுண்மைச்*
*சத்தியமே செய்க தவறாகிச் — சத்தியந்தான்*
*பொய்யானா லன்னோன் புகுநரகிற் கூடமொன்று*
*செய்தானா மென்றே தெளி.*

## இலஞ்சம்

நபிமொழி : இலஞ்சம் கொடுப்பவரையும், தீர்ப்பளிக்கக் கைலஞ்சம் பெறுபவரையும் அண்ணல் நபியவர்கள் சபித்தார்கள்.

(திர்மிதி)

4. *கைக்கூலி தந்தான் கருதிநடுத் தீர்ப்பளிக்கக்*
*கைக்கூலி பெற்றா னிவர்தம்மை — மைக்கார்மேல்*
*நீழல் வழங்கும் நிமலன் நபிசபித்தார்*
*வாழல்கைக் கூலி வழி.*

## பரிந்துரைக்க அன்பளிப்பு

நபிமொழி : ஒருவருக்காகப் பரிந்துரைத்தவர் அதற்காகச் செய்யும் அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளுவாரானால் நிச்சயமாக அவர் வட்டியின் தலைவாசலில் நுழைந்தவராவார்.

(அபூதாவூத்)

5. *பரிந்துரைத்து மன்னார் பணிமுடித்த தற்காய்*
*வரும்பரிசை அன்பளிப்பை வாங்கேல் — விரும்பியவர்*
*வட்டியின் வாசலில் வந்தா ரெனமொழிந்தார்*
*மட்டில் புகழ்படைத்த மன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. வணக்கம்

## சிறுவரைத் தொழப் பழக்குங்கள்

**நபிமொழி :** சிறுவர்களைத் தொழுமாறு கட்டளை இடுங்கள். (அவர்கள் ஏழுவயதை எய்தி விட்டால்) அவர்கள் பத்து வயதெய்தியும் தொழுது வராவிட்டால் அவர்களை அடித்துத் தொழச் செய்யுங்கள்.

(முஸ்லிம்)

1. *ஏழு வயதானால் ஏவுமிளையாரை*
*நாளுந் தொழுமாறு நாயகனை — ஏழின்மேல்*
*பத்தா யினும்தொழுகை பற்றா திருப்பாரேல்*
*பத்தா வடித்துப் பழக்கு.*

## தொழுகையின் குறி

**நபிமொழி :** நிராகரிப்பிற்கும் இறை நம்பிக்கைக்கும் இடையில் தொழுகையைக் கைவிடுவது தான் பாகுபாடாகும்.

(முஸ்லிம்)

2. *உண்டென்று நம்பா விருள்நிலைக்கு மோரிறைவன்*
*உண்டென்று நம்புந் தெளிநிலைக்கும் — நின்றிடையே*
*தோன்றும் விகற்பந்தொழுகை விடுவதுவே*
*ஊன்றிக் கருத்தி லுணர்.*

## உவப்பான வணக்கம்

**நபிமொழி :** அல்லாஹ்வுக்கு மிக உவப்பான வணக்கம் அது குறைவாக இருந்தபோதிலும் தொடர்ந்து வழக்கமாகக் கடைப்பிடிக்கும் வணக்கமாகும்.

(புகாரி, முஸ்லிம்)

3. *சொற்பந்தா னேனுந் தொடர்ந்தே வழக்கமாய்*
*பற்றும் வணக்கந்தான் பண்ணானால் — முற்றும்*
*உவக்கும் வணக்கமா மென்றா ருலகில்*
*தவத்தாற் தலைசிறந்த வர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏற்கப்படா வணக்கம்

நபிமொழி : தூய்மையில்லாதார் தொழுந் தொழுகையையும், திருடியவற்றிலிருந்து அறஞ் செய்வதையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

(முஸ்லிம்)

4. *தூய்மை யிலாளர் தொழுந்தொழுகை சோரத்தால்*
*ஆயபொருள் கொண்டே யாற்றுமறம் — தூயன்*
*விரும்பா னிவையிரண்டும் வீணென்றார் செம்மை*
*தரும்வா சகநயினார் தாம்.*

### பாவமன்னிப்பு

நபிமொழி : ஆதமுடைய வழித்தோன்றல்கள் யாவரும் குற்றமிழைப்பவரேயாவர். ஆனால் குற்றமிழைத்தவர்களில் மிகவும் நல்லவர் பாவமன்னிப்புக் கோருபவராவார்.

(திர்மிதி)

5. *மாந்தர் குறையுடையார் மாசிழைப்பார் மற்றவருள்*
*தாந்தாமுன் செய்த தவறெண்ணி — வேந்தனிடம்*
*மன்னிப்பு வேண்டுவரே மாநல்லா ரென்றுரைத்தார்*
*மன்னிப்பு வேண்டியிரப் பார்.*

## 6. பிரார்த்தனை

### வேண்டுதலை இறைவன் விரும்புகிறான்

நபிமொழி : எவர் அல்லாஹ்விடம் எதையும் இறைஞ்சவில்லையோ அவர் மீது அவன் சினமுறுகிறான்.

(திர்மிதி)

1. *தன்னடியார் தன்னிடத்தில் தாழ்ந்தன்பாய் வேண்டலையே*
*உன்னி நிதமு முவக்குமிறை — அன்னதனால்*
*தன்னிடத்து வேண்டார்மேற் சாலச் சினமுறுவான்*
*விண்ணிடத்து நாயகர்சொல் லீது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கையோடு பிரார்த்தியுங்கள்

நபிமொழி : அல்லாஹ்விடம் அவனது அருளை வேண்டியிறைஞ்சுங்கள். ஏனெனில் நிச்சயமாக அவன் வேண்டுதல் செய்யப்படுவதை உவக்கிறான். அன்றிப் பிரார்த்தனை ஒப்புக் கொள்ளப்பட்டு விடுமென்று எதிர்பார்த்திருப்பது மிகவும் மேலான வணக்கமாகும்.

(திர்மிதி)

2. *ஆண்டவன் தன்னை யனுதினமும் வேண்டுவீர்*
*வேண்டுவார் வேண்டல் விரும்புமிறை — வேண்டுதலை*
*ஏற்றிறைவ னின்னருளை ஈயுமெனும் நம்பிக்கை*
*ஆற்றல்மிகு நல்வணக்க மாம்.*

## தூய மனத்துடனிறைஞ்சுதல்

நபிமொழி : உங்களுடைய இறைஞ்சுதல் ஒப்புக் கொள்ளப்பட்டு விடுமென்ற முழு நம்பிக்கை கொண்ட நிலையில், நீங்கள் இறைவனிடம் இறைஞ்சுங்கள். மேலும் நிச்சயமாக அல்லாஹ் மன ஒருமையற்று மாசுமனத்துடன் இறைஞ்சும் இறைஞ்சுதலை ஏற்றுக் கொள்ள மாட்டான்.

(திர்மிதி)

3. *ஒப்புமிறை யென்னு மொருமை மனத்துடனே*
*செப்பும் பிரார்த்தனையைச் செய்திடுக — ஒப்பானே*
*மாசடைந்த நெஞ்சா லிறைஞ்சல் மனங்கலந்த*
*தேசுடனே நீயிறையைத் தேடு.*

## இறைவன் நாணமுள்ளவன்

நபிமொழி : நிச்சயமாக உங்கள் இறைவன் நாணமுள்ளவனும், அருள்புரிபவனுமாவான். தன் அடியான் தன்னிடத்தில் அவனுடைய இரு கைகளையும் ஏந்தி இறைஞ்ச அவன் அவற்றை வெறுமனே திருப்பிவிட நாணுகிறான்.

(அபூதாவூத், திர்மிதி)

4. *எம்மிறைவன் நாணமுளான் எல்லா மருளுபவன்*
*நம்பியவர் தன்பால் நாடியதைத் — தம்மிருகை*
*ஏந்தி யிறைஞ்சியே மாந்தொழிய நாணுகிறான்*
*ஏந்தல் நபிமொழிந்த வாறு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிழை பொறுத்துக் கிருபை செய்வான்

நபிமொழி : ''மனிதனே நீ என்னிடம் இறைஞ்சியவனாகவும், என்மீது நம்பிக்கை வைத்தவனாகவும் இருந்து வருவாயானால் நான் உன்னை மன்னித்து விடுவேன். நீ எத்தகைய பாவத்துக்கு ஆளாயிருப்பினும் நான் பொருட்படுத்த மாட்டேன்'' என்று இறைவன் கூறுகிறான்.

(திர்மிதி)

5. *எத்தகைய பாவமிழைத்து மெனைநம்பிப்*
*பத்தியோ டேத்திப் பணிந்திறைஞ்சின் — அத்தனையும்*
*மன்னிப்பே னென்பதிறை வாக்கென்றார் மாசற்றும்*
*மன்னிப்பே வேண்டி நின்றார்.*

# 7. சொர்க்கம்

## பள்ளிவாசல்

நபிமொழி : எவர் அல்லாஹ்வுடைய திருப்பொருத்தத்தை நாடிப் பள்ளிவாசலைக் கட்டுகிறாரோ அவருக்காக அல்லாஹ் சுவனபதியில் ஓர் இல்லத்தை கட்டி விடுகிறான்.

(புகாரி)

1. *வணங்குந் தலமெடுப்பார் வல்லான் பொருத்தம்*
*இணங்கும் படியெடுப்ப ரென்னின் — அணங்கானார்*
*புல்லும் சுவர்க்கப் புனிதபதி யேபரிசு*
*இல்லாங் கமைப்பா னிறை.*

## பெருமை, மோசம், கடன் இல்லான்

நபிமொழி : தற்பெருமை, மோசம், கடன் இம்மூன்றையும் விட்டு எவர் அப்பாற்பட்டிருக்கும் நிலையில் இறந்து விடுகிறாரோ அவர் சுவனஞ் செல்வார்.

(திர்மிதி)

2. *தற்பெருமை கொள்ளல் சதிமோசம் செய்தல்கடன்*
*பெற்றுத்தன் பிள்ளைகளைப் பேதுறுத்தல் — முற்றுமிவை*
*இவ்வுலகி னீங்கினா னேறுஞ் சுவனபதி*
*அவ்வுலகி லென்றா ரறிந்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தியடைவிப்பவை

**நபிமொழி :** நாவை அடக்கி வைப்பதும், இல்லத்திலே தங்கியிருப்பதும் செய்த பாவத்தின் மீத அழுவதும் சித்திபெறக் காரணமாக உள்ளன.

(திர்மிதி)

3. *நாவடக்கல் நிம்மதியாய் நன்மனையி லேயுறைதல்*
*பூவுலக வாழ்வில் புரிந்தபல — பாவமெலாம்*
*அத்தன் திருமுன் னறிக்கையிட லிம்மூன்றும்*
*சித்தி பெறுஞ்செயலாஞ் செப்பு.*

## சொக்கவாதிகள்

**நபிமொழி :** சொர்க்கம் புகுவதற்கு அருகர்களாயிருப்பவர் மூவர்

1. சந்குணசீலனாயிருந்து தன் குடிகளுக்கு நன்மை புரியக்கூடிய நீதியான அரசன்.
2. தன்பந்து மித்திரர்களிடத்திலும் ஏனையோரிடத்திலும் தயாளமாயிருக்கக்கூடிய பிரியமுள்ள மனிதன்.
3. பெருங்குடும்பத்தனாகிய சற்குணசீலன்.

(முஸ்லிம்)

4. ***வாய்ந்த குணசீலன் மக்கள்மீ தன்புவைத்தே***
***ஆய்ந்து செயும்நீதி யரசனுடன் — சேர்ந்த***
***இனசனத்தார் மற்றோர்க் கிதயநெகிழ் வுள்ளான்***
***புனிதநகர் வாழ்வார் புகுந்து.***

## சுவர்க்கானந்தம்

**நபிமொழி :** உண்மையான பரிசுத்தமுள்ள தயாள இதயத்தை யுடையவர்கள் தான் பேரின்ப சுவர்க்கானந்தத்தைப் பெறுவர்.

(இப்னுஹிப்பான்)

5. ***உண்மை புனிதமுட னொன்றும் பிறர்நலமும்***
***எண்ணும் தயாள விதயமுளோர் — நண்ணுவரே***
***ஏகபர னீந்தருள்பே ரின்ப சுகானந்த***
***போகநிறை பொன்னுலகு புக்கு.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. நரகர்

## பைத்துல்மால் நிதி

நபிமொழி : நிச்சயமாக எவர்கள் (பைத்துல்மால்) அல்லாஹ்வுடைய பொருளிலிருந்து அபகரிக்கின்றார்களோ அவர்களுக்கு மறுமையில் நரக நெருப்புத்தானுண்டு.

(புகாரி, திர்மிதி)

1. *தெய்வதலச் சேமநிதி சேகரித்துக் காப்பவர்கள்*
*செய்கடமை தான்தவறிச் சேகரிப்பில் — கைவைத்தால்*
*பாழ்நரகத் தீசேர் படுகுழியில் வீழ்வரென்றார்*
*தோள்வலியி னேரிலா தார்.*

## சுவனஞ் செல்லார்

நபிமொழி : பெற்றோருக்கு மாறு செய்பவன், குடிகாரன், அறஞ் செய்துவிட்டு அதைப்பற்றிய பெருமை பாராட்டுபவன் ஆகிய இம்மூவரும் சுவனஞ் செல்லார்கள்.

(நசாஈ)

2. *பெற்றார்க்கு மாறுசெய்தோன் பேணாக் குடிவெறியோன்*
*சற்றேனுஞ் செய்த தருமமதைப் — பற்றி*
*பெருமையடிப் போருடனே பேசினிவர் மூவர்*
*பரமபதஞ் சேராரப் பா.*

## தற்கொலைஞன்

நபிமொழி : எவன் தனக்குத் துரோகமிழைத்துத் தன் மீது வாளை வீச முயல்கிறானோ அவன் நம்மில் உள்ளவனல்லன்.

(அபூதாவூத்)

3. *தானே துரோகம் தனக்கிழைத்து வாள்வீசித்*
*தானே தனைக்கொல்லத் தான்முயல்வோன் — வானாளும்*
*வள்ளல்பிரா னன்பர்களின் மத்தியிலே வாழுரிமை*
*உள்ளவனா கானென் றுணர்.*

## மன்னிக்கப்படாதன

நபிமொழி : இறக்குந் தறுவாயில் இணைவைப்பவர், ஒரு நம்பிக்கையாளரை வேண்டுமென்றே கொன்று விடுபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய இவர்களின் பாவங்களைத் தவிர மற்ற எல்லாவிதமான பாவங்களையும் அல்லாஹ் மன்னிக்கக் கூடும்.

(அபூதாவூத்)

4. *வாழ்வி னிறுதியிலே வல்லவனுக் கீடுவைத்தல்*
*தோளன் தனையொருவன் வேணுமென — தோள்வலியால்*
*கோற லிரண்டொழியக் குற்றமெலாம் மன்னிக்க*
*கோர விறைபொ றுக்க லாம்*

## நரகம் அண்மையிலுள்ளோர்

**நபிமொழி :** உலகத்தின் நன்மைக்காக (முகஸ்துதிக்காக) மறுமையின் நற்செயல்கள் புரிபவன் இறைவனின் அருளை விட்டும் தூரமாகி விடுகின்றான். நரகத்திற்குரியவன் என அவன் பெயர் பொறிக்கப்படுவான்.

(தப்ரானீ)

## நரகவாதி

**நபிமொழி :** நரகவாதிகளை நான் அறிவிக்கட்டுமா? வெஞ்சினத்தினால் வெடுவெடுப்பாயிருப்பவர்களும், பெருமையடிப்போருமாவர்.

(புகாரி, முஸ்லிம்)

5. *கடுகடுத்துக் கோபித்தே கண்ணிரக்க மின்றி*
*வெவெடுத்துப் பேச்சு விளம்பி — துடிதுடிப்போர்*
*தற்பெருமை கொண்டலைவோர் தாமிருவர் புன்னரகுக்*
*குற்றவரா மென்றே யுணர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித
# ரமழான் சிந்தனைகள்

புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித ரமழான் சிந்தனைகள்

அளவற்ற அருளாளன் அன்பின் நிகரில்லான்
அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பஞ் செய்கின்றேன்.

இறைமொழி :

விசுவாசிகளே, உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பிரகாரமே உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கிறது. (அதனால்) நீங்கள் பரிசுத்த வான்களாகலாம். (2:183)

*உங்களுக்கு முன்னவர் மீதுற்ற விதிவழியே*
*உங்களுக்கும் நோன்பு விதியாகும் — அங்கதனை*
*நோற்பதனால் நீங்கள் பரிசுத்த ராகலாம்*
*போற்று மிறையாணை யீது.*

இறைமொழி :

விசுவாசிகளே, (தருமஞ் செய்யக் கருதினால்) நீங்கள் சம்பாதித்தவைகளிலிருந்தும், நாம் உங்களுக்குப் பூமியிலிருந்து வெளிப்படுத்திய (தானியம், கனி வர்க்கம் முதலிய)வைகளில் இருந்தும் நல்லவைகளையே (தானமாகச் ) செலவு செய்யுங்கள். அவைகளிற் கெட்டவைகளைக் கொடுக்க விரும்பாதீர்கள். (ஏனென்றால்) கெட்டுப் போன பொருள்களை உங்களுக்கு ஒருவர் கொடுத்தால் அவைகளை நீங்கள் (வெறுப்புடன்) கண்மூடினவர்களாயன்றி எடுக்க மாட்டீர்களே. ஆகவே நீங்கள் விரும்பாத பொருள்களைப் பிறருக்குத் தானமாகக் கொடுக்காதீர்கள்..... (2:267)

*உன்னுழைப்பி னூதியத்தி லொன்றும் பழுதில்லா*
*துன்னதமா மொன்றே யொருவருக்குத் — திண்ணமதாய்த்*
*தானங் கொடுக்கத் தகுமன்றி நீவிரும்பா*
*தானமுடைத் தன்றென் றுணர்.*

இறைமொழி :

விசுவாசிகளே, நீங்கள் (தவறான வழியிற் செல்லாது) உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள். நீங்கள் நேரான வழியில் சென்றால் வழி தப்பிய எவருடைய தீங்கும் உங்களைப் பாதிக்காது. நீங்கள் யாவரும் அல்லாஹ்வினிடமே செல்ல வேண்டியிருக்கிறது. நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இங்கு) செய்து கொண்டிருப்பவைகளைப் பற்றி (அது சமயம்) அவன் உங்களுக்கு அறிவித்து விடுவான் . (5:105)

*நேர்வழியிற் செல்வீ ரதனா லெவர்தீங்கும்*
*சேர்ந்தும்மைப் பாதிக்க மாட்டாவே — சேர்வ துண்மை*
*அல்லாஹ் விடமே யவரவர்செய் காரியங்கள்*
*எல்லா மவனறிவிப் பான்.*

**இறைமொழி :**

அவர்கள் மறைவானவற்றை (உண்டென்று விசுவாசங் கொள்வார்கள். தொழுகையையுங் கடைப் பிடித்தொழுகுவார்கள். நாம் அவர்களுக்களித்த (பொருள் முதலிய) வற்றிலிருந்து (தானமாகச்) செலவு செய்வார்கள். (அன்றி நபியே) அவர்கள் உமக்கு இறக்கப் பெற்ற (வேதங்கள் யா) வற்றையும் விசுவாசங் கொள்வார்கள். (நியாயத் தீர்ப்பு நாளாகிய) இறுதி நாளையும் (உண்மை என்று) உறுதியாக நம்புவார்கள். இத்தகையோர்தான் தங்கள் இறைவனின் நேரான வழியிலிருக்கிறார்கள். இவர்கள் நிச்சயமாகச் சித்தியடைவார்கள். (2:3,4,5)

*மறைவா னவைநம்பி வல்லவனை யேத்தி*
*நிறைபொருளிற் தானமள வீந்து — ம்றையனைத்தும்*
*உண்மை மறுமையெனும் நம்பிக்கை யுள்ளவர்நேர்*
*நண்ணினார் சித்தியடைந் தார்!*

**இறைமொழி :**

எவரேனும், யாதொரு பாவத்தைச் செய்துவிட்டு அல்லது தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொண்டு பின்னர் (அதிலிருந்து விலகி மெய்யாகவே பச்சாதாபப்பட்டு) அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரினால் (அவனுடைய குற்றங்களை) மிக மன்னிக்கும் அன்புடையோனாகவே அல்லாஹ்வை அவன் காண்பான். (4:110)

*பாவ மிழைத்தவர்பின் பச்சாத்தா பப்பட்டுப்*
*பாவ மதனீங்கிப் பார்த்திபனைப் — பாவம்*
*பொறுத்தருள வேண்டினவர் பாவமதை யன்பன்*
*பொறுப்பவனாய்க் காண்பா ரவர்.*

**இறைமொழி :**

ஆணோ, பெண்ணோ எவர் திருடினாலும் (இத்) தீய செயலுக்குத் தண்டனையாக அவர்களின் கைகளைத் துண்டித்து விடுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ.்.து) அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட தண்டனையாகும். (5:38)

*களவுருசு வானாற் காவலர்க ளந்தக்*
*களவு புரிந்தார் கரங்களையே — களைந்திடுதல்*
*பூணும் முறையாகும் புகழோன் விதியிது*
*ஆணுக்கும் பெண்ணுக்கு மாம்*

**இறைமொழி :**

அன்றி (இவ்வாறு கூறுகின்றவனை நோக்கி) உனக்கு யாதொரு நன்மையேற்பட்டால் அது அல்லாஹ்வினால் ஏற்பட்டது என்றும், உனக்கு யாதொரு தீங்கு ஏற்பட்டால் அது (நீ இழைத்த குற்றத்தின் காரணமாக) உன்னால்தான் வந்தது என்றும் (கூறுவீராக) (4:79)

*நன்மையொன் றேற்பட்டால் நாயன் புறத்தென் றும்*
*தின்மைக் கவன்பொருந்தான் ஏற்பட்டால் — நின்வினையால்*
*ஏற்பட்ட தென் றும் இதயங்கொள் ளென்றான்செங்*
*கோற்பட் டரசாளுங் கோ.*

**இறைமொழி :**

இவ்வுலக வாழ்க்கை வீணும் விளையாட்டுமேயன்றி வேறில்லை. எனினும் பயபக்தியுடையோருக்கு நிச்சயமாக மறுமையின் வாழ்க்கையே மிக மேலானது. (இவ்வளவு கூட) நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா? (6:32)

*இவ்வுலகு வீணும் விளையாட்டு மேயன்றிச்*
*செவ்வுலகு தானென்னத் தராதீர் — அவ்வுலகே*
*முத்தக்கீ னானோர்க்கு மேலாகு மிவ்வுண்மை*
*பக்தி யுடையார்க் குணர்வு*

**இறைமொழி :**

(நபியே, பொருள்களில்) எதைச் செலவு செய்வது? (யாருக்குக் கொடுப்பது) என்று உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் கூறும் (நன்மையைக் கருதி) நீங்கள் எத்தகைய பொருளைச் செலவு செய்த போதிலும் (அதனை) தாய், தந்தை, சுற்றத்தார், அநாதைகள், ஏழைகள், வழிப்போக்கர்கள் ஆகியோருக்குக் கொடுங்கள். இன்னும் நீங்கள் (வேறு) என்ன நன்மையைச் செய்த போதிலும் அதனையும் நிச்சயமாக அல்லாஹ் (அறி(ந்து அதற்குரிய கூலியும் தரு)வான். (2:215)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நன்மை கருதிநீர் நல்கும் பொருளுந்தன்*
*அன்னைதந்தை சுற்ற மனாதையர்கள் — உண்ணவிலா*
*ஏழை வழிப்போக்கர்க் காக மெதுசெய்தும்*
*சூழும் வகை கூலி யுண்டு.*

இறைமொழி :

அல்லாஹ்வைத் தவிர வேறு நாயகனில்லை. அவன் நிச்சயமாக உங்கள் யாவரையும் மறுமை நாளில் ஒன்று சேர்ப்பான். இதிற் சந்தேகமில்லை. அல்லாஹ்வை விட உண்மை சொல்பவர் யார்? (4:87)

*நாயகனல் லாஹ்வன்றி யாரும்வே றில்லையவன்*
*ஆய மறுமையினில் யாவரையும் — போயொன்றாய்ச்*
*சேரவைப்பா னையமிலை செப்பி வனன்றி*
*யாருண்டோ உண்மையுரைப் பார்!*

இறைமொழி :

(நபியே) உம்மிடம் என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றிக் கேட்டால் (அதற்கு நீர் கூறும்) நிச்சயமாக நான் சமீபமாகவேயிருக்கிறேன். (எவரும் என்னை அழைத்தால்) அவ்வழைப்போனின் அழைப்புக்கு விடையளிப்பேன். ஆகையால் அவர்கள் என்னிடமே பிரார்த்தனை செய்யவும், என்னையே விசுவாசிக்கவும் (அதனால்) அவர்கள் நேரான வழியையடைவார்கள். (2:186)

*என்னை யழைப்பவனுக் கண்மையிலே யானிருப்பேன்*
*என்னோசைக் கின்னே பதிலளிப்பேன் — அன்னதனால்*
*என்னிடமே வேண்ட விசுவாசிக்க நேர்வழியே*
*முன்னு மெனுமெம் மிறை*

இறைமொழி :

(மரண சாசனமாகிய) அதனைக் கேட்டதற்குப் பின்னர் எவரேனும் அதனை மாற்றிவிட்டால் அதன் பாவமெல்லாம் மாற்றியவரின் மீதே (சாரும்). நிச்சயமாக அல்லாஹ் (மரிப்பவர் கூறும் சாசனத்தை) செவியுறுவோனும் (அதனை மாற்றும் பாவிகளின் செயலை) அறிவோனுமாயிருக்கிறான். (2:181)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கூறும் மரண வசியத் தெவையேனும்*
*மீறு பவர்மேற் பெரும்பாவம் — சாகும்*
*மரணித்தோர் சொல்லறிவான் மாற்றியோர் செய்த*
*கருமத்தைக் காண்பா னிறை.*

இறைமொழி :

............)இறைவன் உங்களுக்கு அனுமதித்தவற்றை நீங்கள் (தாராளமாகப்) புசியுங்கள்; பருகுங்கள். எனினும் (அவற்றில் ) அளவு கடந்து (வீண்) செலவு செய்யாதீர்கள். ஏனென்றால் நிச்சயமாக அல்லாஹ் அளவு கடந்து (வீண்) செலவு செய்வோரை நேசிப்பதில்லை. (7:31)

*தாராள மாகப் பருகுவீ ருண்ணுவீர்*
*ஓராது வீண்விரயஞ் செய்யாதீர் — பாராள்வோன்*
*ஆசித் தளவிகந்து வீண்செலவு செய்வோரை*
*நேசிக்க மாட்டா னறி.*

இறைமொழி :

எவரேனும் யாதொரு நன்மையான் காரியத்திற்குச் சிபாரிசு செய்தால், அதிலொரு பாகம் அவருக்குண்டு. (அவ்வாறே) யாதொரு தீய விஷயத்திற்கு யாரும் சிபாரிசு செய்தால், அதிலிருந்தும் அவருக்கொரு பாகமுண்டு. அல்லாஹ் யாவற்றையும் முறைப்படி கவனிப்போனாக இருக்கிறான் - (4:85)

*நன்மைக் குபகரித்தால் நன்மையதிற் பாகமுண்டு*
*தின்மைக்கு மவ்வாறே தீதுண்டு — நன்மையதும்*
*தீதும் முறையாகத் தீர்மானஞ் செய்வானே*
*ஏதுங் குறையில் லிறை.*

இறைமொழி :

.....உயிருக்கு உயிர், கண்ணுக்குக்கண, முகுக்கு மூக்கு, காதுக்கு காது, பல்லுக்குப் பல், காயத்திற்கும் (காயமாக) நிச்சயமாகப் பழி வாங்கப்படும். ..... எனினும் எவரேனும் பழிவாங்குவதை (மன்னித்து)த் தானமாக விட்டுவிட்டால் அது அவரு(டைய தீவினை)க்குப் பரிகாரமாகிவிடும்..... (5:45)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சொன்ன பழிக்குப் பழிவாங்க லாமெனினும்*
*மன்னித்துத் தானமென விட்டால் — அன்னதுவே*
*அன்னாரின் தீவினைகட் கான பரிகாரம்*
*மன்னான் மறையுரைத்த வாறு.*

இறைமொழி :

விசுவாசிகளே, (நீங்கள் உங்கள் முயற்சிகளிற் சித்தியடையும் பொருட்டு) பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடை-யோர்களுடனிருக்கிறான். (2:153)

*பொறுமையைக் கொண்டும் தொழுகைதனைக் கொண்டும்*
*இறையை யுதவிதர வேந்தல் — இறைவன்*
*பொறுமை யுடையா ருடனுள்ளா னென்னும்*
*பொறுமையுடை யானுரையை யோர்*

இறைமொழி :

(இஸ்லாம் மார்க்கத்தில் நிர்ப்பந்தமேயில்லை. ஏனென்றால் வழிகேட்டிலிருந்து (விலகி) நேர்வழி (யடைவது எவ்வாறென்று) வெளியாகி விட்டது. ஆகவே எவன் ஷைத்தானை நிராகரித்துவிட்டு அல்லாஹ்வை விசுவாசிக்கிறானோ அவன் நிச்சயமாக அறுபடாத பலமானதொரு கயிற்றைப் பிடித்துக் கொண்டான். அல்லாஹ் செவியுறுவோனும் அறிவோனுமாயிருக்கிறான். (2:256)

***நிர்ப்பந்த மில்லை யிசுலாத்தில் நேர்வழியே***
***துர்ப்பந்த ஷைத்தானை விட்டிறையை — நற்பந்த***
***மாய்நம்பி னானறாத் தாம்பணைந்தான் கேட்பவனு***
***மாய்வறிவு முள்ளா னவன்.***

இறைமொழி :

வட்டி (வாங்கித்) தின்கிறவர்கள் பேய் பிடித்துப் பித்தம் கொண்டவர்கள் எழும்புவது போலன்றி (வேறு விதமாக மறுமையில்) எழும்ப மாட்டார்கள். காரணமாவது : வட்டியைப் போலவே நிச்சயமாக வர்த்தகமும் இருக்க அல்லாஹ் வர்த்தகத்தை ஆகுமாக்கி வைத்து, வட்டியை (ஏன்) தடுத்து விட்டான் என்று அவர்கள் (பரிகாசமாகக்) கூறியதுதான்...... (2:275)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பித்துப் பிடித்தெழுவான் பேய்போல் மறுமையிலே*
*மொத்தமாய் வட்டியுண முற்பட்டான் — நித்தனிங்கு*
*வாணிபத்தைப் போலிருக்க வட்டி விலக்கி விட்டான்*
*ஏனிதெனக் கூறியத னால்*

இறைமொழி :

விசுவாசிகளே உங்களுக்குள் சம்மதத்தின் பேரில் நடைபெறும் வர்த்தக மூலமாயன்றி உங்களில் ஒருவர் மற்றவரின் பொருள்களைத் தவறான முறையில் விழுங்கி விட வேண்டாம். அன்றி, (இதற்காக) உங்களில் ஒருவருக்கொருவர் (சச்சரவிட்டு) வெட்டிக்கொள்ள வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது மிக்க அன்புடையோனாக இருக்கிறான். (4:29)

*சம்மதத்தால் வர்த்தகத்தால் சாகும் பொருளன்றி*
*எம்மதத்தும் மற்றோர் பொருள்வெளவீர் — இம்மதத்தால்*
*சச்சரவு செய்யீர் சதிக்காதீர் உம்மிறைவன்*
*நிச்சயமா யன்பன் உமக்கு*

இறைமொழி :

(தருமஞ் செய்து அதை வாங்கியவனுக்குத்) துன்பம் தொடரும் (படியாகச் செய்யும்) தருமத்தைவிட (அன்புடன் கூறும்) இன் சொல்லும் மன்னிப்பும் மிக மேலாகும். அன்றி அல்லாஹ் நிதிபரனும் பொறுமையாளனுமாயிருக்கிறான். (2:263)

*துன்பந் தொடர்தருமஞ் செய்வதினு மேழைமுகத்*
*தன்புரையும் மன்னிப்பும் மேலாகும் — அன்புடைய*
*அல்லாஹ் நிதிபரனு மாழ்ந்து பொறுமை செய*
*வல்லானு மாமென் றுணர்*

இறைமொழி :

(நீங்கள் செய்யும்) தருமங்களை நீங்கள் வெளியாக்கினால் அதுவும் நன்றே. (ஏனெனில் அது பிறரையும் தானஞ் செய்யும் படி தூண்டக்கூடும்). ஆயினும் அதனை நீங்கள் மறைத்தே, அதுவும் ஏழைகளுக்குக் கொடுப்பது உங்களுக்கு மிகவும் நன்மை (பயக்கும்) மேலும் அது உங்களுடைய பாவங்களுக்குப் பரிகாரமாகவும் ஆகும்...... (2:231)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பிறரறியச் சொல்லுதலாற் செய்த தருமம்*
*பிறரீயத் தூண்டு மதனைப் — பிறரறியா*
*தேழைக் குதவினது நன்மைக்கே பாவமறச்*
*சூழும் பரிகார மாம்.*

**இறைமொழி :**

எவரேனும் ஒரு நன்மையைச் செய்தால் அவருக்கு அதைப்போல பத்துப் பங்கு (நன்மையுண்டு) எவரேனும் ஒரு தீமையைச் செய்தால் அதைப் போன்றதேயன்றி (அதிகமாக) அவருக்கு கூலி கொடுக்கப்பட மாட்டாது. (குற்றத்துக்கு அதிகமான தண்டனையைக் கொடுத்தோ அல்லது நன்மைக்குரிய கூலியைக் குறைத்தோ) அவர்கள் அநியாயஞ் செய்யப்பட மாட்டார்கள். (6:160)

*ஒருநன்மை செய்தா லொருபஃது நன்மை*
*ஒருதீமைக் கொன்னுதான் கூலி — மறுமையினில்*
*தண்டனையைக் கூட்டியோ நன்மை குறைவாயோ*
*கொண்டுவிடார் நீதி மறுத்து.*

**இறைமொழி :**

அன்றி, (கடன் வாங்கியவன் அதனைத் தவணைப்படி தீர்க்க முடியாமல்) அவன் கஷ்டத்திலிருந்தால் (அவனுக்கு) வசதியேற்படும் வரையில் எதிர்பார்த்திருங்கள். மேலும் (அதிலுள்ள நன்மைகளை) நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால் (அதை அவனுக்கே) நீங்கள் தானஞ் செய்து விடுவது (பிறருக்குத் தானஞ் செய்வதை விட) உங்களுக்கு மிகவும் நன்மை (பயக்கும்). (2:280)

*காலங் கடந்துங் கடனிறுக்கும் வாய்ப்பு வரை*
*காலங் கொடுத்தெதிர் காத்திருப்பீர் — ஏலான்*
*கடனை யவனுக்கே தானமாய்ச் செய்தல்*
*கடனிலார்க் கீதலி னன்று.*

**இறைமொழி :**

(அன்றி) உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் உண்ணாதீர்கள். (உங்கள் கட்சி பொய்யானதென) நீங்கள் அறிந்திருந்தும் (இதர) மனிதர்களின் பொருள்களில் எதனையும் பாவமான வழியில் விழுங்கி விடும் பொருட்டு (இலஞ்சங் கொடுக்க) அதிகாரிகளிடஞ் செல்லாதீர்கள். (2:188)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மற்றோர் பொருளதனை மாறாம் முறையுண்ணீர்*
*முற்றும் அறிந்தும் முறைதவறிப் — பெற்றுவிடக்*
*கைக்கூலி கொண்டதி காரியிடஞ் செல்லாதீர்*
*மிக்கோனின் ஆணை யிது.*

இறைமொழி :

எவரேனும் யாதொரு குற்றத்தையோ அல்லது பாவத்தையோ செய்து அதனை (த்தான் செய்யவில்லையென்று மறைத்து)க் குற்றமற்ற (மற்றொரு)வர் மீது சுமத்தினால், நிச்சயமாக அவன் அபாண்டமான பொய்யையும், பகிரங்கமான பாவத்தையுமே சுமந்து கொள்கிறான். (4:112)

*தன்னை மறைத்துத் தனது பிழையதனைப்*
*பின்னை யொருவர்மே லேற்றுபவன் — சொன்ன*
*பெரும்பொய் பகிரங்கப் பாவஞ் சுமந்தான்*
*இரும் புகழோன் மாற்ற மிது.*

இறைமொழி :

அவனே பூமியை நீங்கள் வசிக்கும் இடமாகவும் வானத்தை ஒரு விதானமாகவும் அமைத்து, மேகத்திலிருந்து மழையைப் பொழிவித்து அதனைக் கொண்டு (நீங்கள்) புசிக்கக்கூடிய கனிவர்க்கங்களையும் உங்களுக்கு வெளிப்படுத்துகிறான். ஆகவே (இவைகளை எல்லாம்) நீங்கள் தெளிவாக அறிந்து கொண்டே அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்காதீர்கள். (2:22)

*வாழ்விடமாய்ப் பூமி வளைந்தவான் மேகத்தின்*
*வீழ் மழையாற் தீங்கனிகள் தந்தவனை நாள்பொழுதும்*
*செம்மனத்தாற் தேர்ந்திருந்தும் சேவிக்கா தன்னவற்கு*
*எம்மதத்துங் கொள்ளீ ரிணை*

இறைமொழி :

விசுவாசிகளே, நிச்சயமாகச் சாராயமும், சூதாட்டமும், விக்கிரக ஆராதனையும், அம்பெறிந்து குறி கேட்பதும் ஷைத்தானுடைய அருவருக்கத் தக்க வேலைகளிலுள்ளவைகளாகும். ஆகவே இவைகளிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். (5:90)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சாராயஞ் சூதாட்டம் சண்டான விக்கரக*
*ஆரா தனைசெய்த லம்பெறிதல் — ஓராய்*
*வசிவாசி யுண்டாக்கும் சைத்தானின் வேலை*
*விசுவாசிக் கீவை விலக்கு*

**இறைமொழி :**

தானமெல்லாம் தரித்திரர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூலிப்பவர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோர்களுக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்கும் கடனில் மூழ்கியவர்களுக்கும், அல்லாஹ்வுடைய பாதையில் யுத்தஞ் செய்வதற்கும், வழிப்போக்கர்களுக்கும் (உரித்தானதாக) அல்லாஹ் ஏற்படுத்தியதாகும். (9:60)

*தானந் தரித்திரர்கள் ஏழை வரிசேர்ப்போர்*
*ஆனபுது முஸ்லிம் அடிமைவிடல் — ஈனக்*
*கடனாளி மார்க்கப்போர் சார்வழிப் போக்காக்*
*கிடுமென்றா னெங்க ளிறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றமழான் சிந்தனைகள்

## காப்பு

மார்க்க விதியாகும் மாண்புறம ழான்நோன்பைத்
தீர்க்கமாய் நோற்குந் திறங்கூறத் - தீர்ப்பளிக்கும்
நாயகனே யென்றனது நாவினிலே தீந்தமிழைப்
பாயசம்போற் தந்தருளு வாய்.

## நூல்

1. பதினொரு மாதம் பகல்வேளை
மனதுக் கியைந்த உணவுகளை
விதிமுறை யறிந்து விருந்துடனே
வேண்டிய மட்டும் உண்டுடலைப்
புதுப்பொலி வாக்கி நோய்நொடிகள்
புகவழி செய்த மானிடருக்
கிதுசுக வழியென் றுபவாசம்
இயற்றிய விறைக்கே புகழெல்லாம்

2. மனித வாழ்க்கை முறைகூறும்
மார்கக் மெல்லாம் வரன்முறையாய்
இனிய நோன்பு றோற்பதனை
இறைவன் பணித்தே வந்துள்ளான்
புனித நோன்பை யிசுலாத்தின்
முறையாங் கடமை வகுத்தெம்மைப்
புனித ராகச் செய்யிறைக்கே
பொருந்தும் புகலும் புகழெல்லாம்

3. உடலை வளர்க்கும் உணவதுவே
உளநோய்க் கெல்லாங் காலாகும்
உடல்நோய் தீர மருந்தீயும்
உரிய மருத்துவ ருபவாசம்
திடமாய் வேண்டு மென்பதனைத்
தெரிவார் விரத மொருமாதம்
கடமை யாக்கிய தத்துவத்தைக்
கருத்திற் கொள்வீர் மானிடரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உண்டு குடித்துச் சுகித்திருப்போர்
உடையோ னருளை மறவாமல்
உண்டுபசியைத் தீர்ப்பதற்கு
ஒருவாய்க் கவள மில்லாதே
மண்டும் மிடிவாய்ப் பட்டோரின்
வறுமை நிலையை யுணர்வதற்கும்
கண்ட சிறந்த சாதனையே
கனதி றமழான் உபவாசம்

5. ஊனைக் குடிப்பைப் பகல்வேளை
ஒறுத்தல் மட்டும் உபவாசம்
தானே யென்று தவறாகக்
கருதல் வேண்டாம் கருத்தினிலே
வீணாம் எண்ணந் தொடராதும்
வெஞ்சின முள்ளங் கொள்ளாதும்
ஆணாய்ப் பெண்ணாய்ப் பாலுணர்வு
அணுவு மணுகா திருத்தலுமே.

6. சொன்னா லுண்மை யன்றியொரு
சொல்லும் பிசகா திருந்திடலும்
பின்னாள் பற்றி யவதூறு
பேசார் மௌனம் புரிந்திடலும்
அந்நாள் முழுதுமவனுக்காய்
அரிய நோன்பு வைத்திடலும்
இன்னா வென்ப தொன்றேனும்
இயற்றா தடங்கி யிருத்தலுமே

7. செய்யுந் தொழிலிற் கலப்படமோ
சேர்க்கும் பொருளில் வஞ்சகமோ
பொய்யாம் அளவை நிறுவைகளோ
போதைப் பொருளில் வெஞ்சுகமோ
கையால் வெய்ய காரியமோ
கடத்தல் செய்யும் பாதகமோ
செய்யா தொழிதல் நோன்பிற்குச்
சிறந்த பண்பாம் தெரிவீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வீணாய் நேரங் கழியாதே
வேண்டும் நல்ல கைங்கரியம்
பூணும் நெறியிற் செலவாதல்
பொருந்தா நண்பர் கூட்டுறவு
காணா திருத்தல் களியாட்டுக்
கவறுதவறு வினையாற்றல்
வேணா மென்ன வெறுத்தல் சுப
விரதங் காத்தற் பண்பாகும்.

9. பிறரின் மெய்ப்புக் குபவாசம்
பிடித்தல் வாளா பட்டினியே
அறவே நன்மை யன்றதனில்
ஆற்கு திருத்தல் நன்றாகும்
துறவு நினைவோ டனுட்டித்தல்
துய்ய நோன்பினி லக்கணமாம்
மறதியன்றி நினைவோடு
வல்லோன் தனக்காய் நோற்பீரே.

10. ஊணைக் குடிப்பை யொறுப்பதனால்
உடலின் பளுவுங் குறைவாகும்
பூணும் மிருகக் குணம்மாறும்
பொருந்துஞ் சாந்தம் மேலாகும்
தேனின் இனியார் மேற்கொள்ளும்
தெவிட்டா மோகங் குறைவாகும்
வானின் அமரர் உவந்தேற்றும்
வண்மை சிறக்கும் நோன்பாலே.

11. மனத்துக் கியைநற் பழக்கங்கள்
மறக்கத் தயங்கு பவர்றமழான்
தினத்தில் நோன்பு வைக்கவவை
யனைத்துந் தவிர்க்கத் தயங்காதே
அனைத்து மிறைவற் காய்மறந்து
அரிய நோன்பு நோற்பதனால்
மனத்தை யடக்கும் பக்குவத்தை
வகுக்கும் நோன்பு காண்பீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கொழுத்துச் செழித்து வளர்ப்பயிரைக்
கொஞ்சம் வாட விடப்பின்னர்
தளிர்த்துப் பூத்துக் காய்ப்பதனைக்
கண்கூடாகக் காண்கின்றோம்
கொழுத்துப் பருத்த உடல்நோன்பால்
கொஞ்சம் வாட்டம் அடைந்தபின்னர்
தளிர்த்துப் புதிய பலம்பெற்றுத்
தரணி யாளத் தரம்பெறுமே.

13. நோய்செய் கிருமி நோன்பதனால்
நூன மடைந்து சாம்பிடுமே
வாய்செய் நாற்றங் கஸ்தூரி
வாடையாக மாறிடுமே
தூய்செய் யுள்ளத் தவமியற்றத்
தோதாய்ச் சமைந்து வந்திடுமே
ஆய்செய் வார்க்கிவ் வருவிரதம்
அமையுந் தெரிந்து நோற்பீரே.

14. தொடர்ந்து பணிசெய் யுடலுக்குக்
கொஞ்சம் ஓய்வாற் களைதெளியும்
அடர்ந்துண் ணுணவின் செமிபாட்டை
அடையத் தினமும் முயன்றுவரும்
குடல்முத லெம்முள் ளுறுப்புகளுக்
கோய்வு சிறிது கொடுப்பதனால்
தொடரும் பணிக்குத் துணையாகும்
துய்ய நோன்பின் மகத்துவமே

15. வசதி யிருந்து மனுபவிக்கார்
வல்லோன் தனக்காய் மனமடக்கி
அசதி யடைந்தும் பொருட்படுத்தார்
அடையும் பொறுமை யளவதனை
நிசமா யவனே யறியுமதால்
நிகழ்ந்த நோன்புக் குறுபயன்தன்
வசமே வழங்கும் பொறுப்பென்ற
வார்த்தைப் பொருளைத் தெரிவீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கண்டா ரெவரும் மரியாதை
கனதி செய்வார் நோன்பாளிக்
குண்டாம் மகிமை யவர்காண
உண்ணார் குடியா ரொதுங்குவரே
விண்டால் நம்பும் சதிமோசம்
மேவ நினையார் நோன்பதற்கு
உண்டாம் சிறப்பை யென்சொல்வோன்
உவந்து நோற்க வாரீரே.

17. நோன்பின் நிய்யத் திருதயத்தில்
நுழைந்தா லூணுங் குடிப்பெல்லாம்
ஏன்தான் மறந்தே போகிறதோ
இருந்தும் இல்லா தாகிறதோ
தான்கொள் மனைவி தனித்திருந்தும்
சாற்றும் மோக மகலுகிறதோ
வான்மே லிருளைக் காண்வரையும்
மாண்பின் நிய்யத் தென்சொல்வேன்

18. வான்மதி றமழான் பிறையாக
வானிற் தோன்றும் நாளதனில்
கூன்மதி கண்ட களிப்புடனே
ஹுதாவி னேவல் சிரங்கொண்டு
தேன்மதி நாளி னினிதாகத்
தெரிந்து நோன்பு நோற்பதற்காய்
ஊன்கறி மூல பலாதிகளை
உவந்து தேடுவ ரேன்தானோ

19. ஊணைக் குடிப்பை யொறுப்பதுவே
உபவா சத்தின் கருத்தாகும்
ஊணிற் குடிப்பில் ருசிகண்டு
உபவா சத்தின் கருத்ததனை
வீணாக் குவதிற் செலவினத்தை
மிகவாயக் கொள்ளுங் கருத்தென்னை
ஊணைக் குடிப்பை யொறுத்துடலின்
உறுதி காண்பீர் மானிடரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. உணர்வின் வணக்கம் திருக்கலிமா
உடலின் வணக்கம் இறைதொழுகை
உணர்வும் உடலும் ஒன்றித்த
உயர்ந்த வணக்கம் நோன்பாகும்
உணர்வாற் கொண்ட நிய்யத்தை
உடலால் நிறைவு செயும்பரிசை
உணர்வா னவன்தான் பலனதனை
உடைமை யாக்கிக் கொண்டனனே.

21. மிக்க பொருளின் சீமானும்
வேளைக் கிரங்கும் வறியவனும்
ஒக்க வூணுங் குடிப்பெல்லாம்
ஒறுத்தி யற்றும் நோன்பதனால்
மக்கள் யாரும் சமமென்னும்
மாண்புறு தீனின் கொள்கையதை
மிகத் தெளிவாய்த் தெரிவாக்கும்
வியனிலை நோன்பிற் குண்டறிவீர்

22. சிறிய வயதிற் பிள்ளைகளைப்
பேணி வளர்க்கும் பெற்றோரே
பெரியோன் விதித்த நோன்பதனைப்
பேணி நீங்கள் பிடிப்பதனைச்
சிறியோர் தமக்கும் அதுகடமை
யென்னு முணர்வு அவர்மனதில்
நறிய விதைபோ லூன்றிவிடும்
நல்ல பழக்கம் பெறுவாரே.

23. சிறுமையிற் பழகும் பழக்கமது
சிலையிற் செதுக்குஞ் சித்திரம்போல்
உறுதி யாக விறுதிவரை
தொடர்ந்து வளர்ந்து வந்திடுமே
சிறிய வயதில் நோன்பியற்றத்
தொடங்கு வார்வாழ் நாளெல்லாம்
மறவா தியற்று வார்பெற்றார்
மனத்தில் நன்கு பதித்திடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. இசுலாம் விதித்த விதிமுறைகள்
எல்லாம் இலேசாய் இயல்வனவே
நிசியி லுள்ளம் வேண்டுதலால்
நீக்கார் நோன்பு நாளினிலே
சிசுவின் பசிக்காய்ப் பாலூட்டும்
தாயும் வயதின் முதிர்ந்தோரும்
இசைவில் நோயுற் றிருப்போரும்
இயலார் நோன்பை விடுவாரே

25. நோன்பு பிடிக்க வியலாதோர்
நோன்பா ளிகள்போ லிருந்திடுக
நோன்பு பிடிக்க வியன்றிருந்தும்
சோம்பல் அசட்டை பொருள்செய்யார்
ஓன்பின் புறமா யிருந்துண்டு
இலங்கும் முகத்தோ டியல்கின்றார்
தான்செய் காரியம் பிறரறியார்
தனியவன் தானு மறியானோ

26. வழமை வாழ்வி லொருமாற்றம்
வந்தா லதனை மேற்கொள்ளும்
பொழுது சிறிது சிரமந்தான்
பொருந்துங் கரும காரியத்தில்
விழுமம் நோக்கி யுறுதிபெறின்
வேண்டுஞ் சாதனை யுண்டாகும்
பழுதில் நோன்பு மதுபோலப்
பழகப் பழக வெளிதாமே

27. நோற்ற நோன்பின் குறைபாட்டை
நிறைவு செய்யும் பாங்கினிலே
ஏற்ற வகையிற் பொன்பொருளும்
இயன்ற தரும மீந்தேழை
போற்றுஞ் சிறந்த கைங்கரியம்
புரியுந் திறத்தால் மனநிறைவு
ஆற்ற முயலும் பெருஞ்சிறப்பை
அறிவாம் விரத நாட்களிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. வந்தது நோன்பு என்றவுடன்
பாலர்கள் முதலாய் விருத்தர்வரை
சிந்தையில் மகிழ்வு கொண்டவராய்ச்
செய்பல மார்க்கச் சடங்குகளைக்
கந்ததம் நிகழ்த்த முயல்கின்றார்
சாலைகள் தோறும் இரவுபகல்
எந்தவோர் சாமம் விழிப்புணர்வு
விளங்குதல் காணீர் காணீரே.

29. இறையடி யவரை வழிகெடுக்க
இபுலீ சென்றும் முயல்கின்றான்
நிறைமதி யாளர் அவன்வழியை
நேரார் நோன்பின் மகத்துவத்தை
அறிவா னதனால் நோன்பாளி
ஆற்றும் அமலைப் பாழ்செய்வான்
நெறியாய் நோன்பை நோற்றிறையின்
நேசங் கொள்வீர் மானிடரே.

30. மாதம் முற்றும் நோன்பிருந்த
வாட்டங் தீர்ந்து மனமகிழ்வோ
டீதல் சுற்றம் தழுவுதலும்
இயைந்த புதுப்பணி பூணுதலும்
வேதம் விதித்த முறைபோல
இயலும் வணக்கம் புரிந்திறுதித்
தேதிக் கடுத்த நாளீதுல்
பித்ரைக் களிகொண் டாடுவமே.

**வேறு**

31. அறிவாளர் தந்தொடர்பை அறுத்துவிடாதே
ஐங்காலத் தொழுகையினை அயர்த்து விடாதே
வெறியாக்கும் பொருளெதையும் விரும்பி விடாதே
வேத நெறி பயிலாமல் இருந்துவிடாதே
குறிபார்க்கும் பாவநெறி கொண்டுவிடாதே
கூடியவர் குறைபாடு சொல்லிவிடாதே
எறிநிலவை யமாவாசை யிரவிற் காட்டும்
ஏந்தல்நபி இன்னுரையை இதயற்கொள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. விளையாட்டுக் காயினும்பொய்; சொல்லிவிடாதே
வேடிக்கைப் பேச்சதனை விரும்பிவிடாதே
அழையாதார் விருந்துண்ண அணுகிவிடாதே
ஆற்றாதார்க் குதவி செய்ய மறுத்துவிடாதே
இளையாரின் பிழைதிருத்தா திருந்துவிடாதே
இயலாரை அடக்கிவிட எண்ணிவிடாதே
இழையாருக் குரிமைபல வீந்தவெங்கள்
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே

33. திருமறையை யுணர்ந்தோதா திருந்துவிடாதே
தீயாரை நண்பராகத் தெரிந்துவிடாதே
குருமாரின் வழிபாடு தீர்ந்துவிடாதே
கோள்சொல்லு வார்கள்மொழி கேட்டுவிடாதே
வருமானம் இருந்தாலும் வட்டியெடாதே
வாங்கினாற் தவணைதனிற் தவறிவிடாதே
இருளாகும் குபிர்வாழ்வை எதிர்த்தே நின்ற
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே.

34. பிறர்செய்த நன்றியொனறும் மறந்துவிடாதே
பெற்றவர்கள் மனம்வருந்தப் பேசிவிடாதே
பிறர்க்குதவி செய்ததனைப் பேசிவிடாதே
பேய்பில்லி யாடுவதைப் பிணைந்துவிடாதே
புறம்பேசித் திரிவாரைப் பொருந்திவிடாதே
போர்முகத்து முன்னிலையாய் நின்றுவிடாதே
இறுதிமத போதகரா யிகத்தில் வந்த
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே

35. தலைவருக்குக் கீழ்ப்படியத் தவறிவிடாதே
தாய்க்குப்பணி விடைசெய்யத் தயங்கிவிடாதே
மலைபோலும் பொருளிழந்தும் மயங்கிவிடாதே
மக்கள்கலை யுணர்வுபெற மறுத்துவிடாதே
வலைவீசும் மங்கையரில் மருண்டுவிடாதே
வரவுக்கு மேற்செலவு செய்துவிடாதே
இலைவேறு தெய்வமிறை யொன்றேயென்ற
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. சாட்சியங்கள் கோரின்சொல மறுத்துவிடாதே
சாட்சியத்தில் உண்மைசொலத் தயங்கிவிடாதே
சூட்சிசெய்வார் சொல்பவற்றை நம்பிவிடாதே
சொந்தமல்லா தொன்றையனு பவித்துவிடாதே
ஆட்சியுடை யாரெதிர்ப்பை யாக்கிவிடாதே
ஆணவத்தைக் கொண்டழிவு பெற்றுவிடாதே
ஈட்டு புகழ்க் கிணையொருவர் இல்லாதெங்கள்
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே.

37. தூதுவனை துன்புறுத்தத் துணிந்துவிடாதே
தொண்டர்களுக் கன்புசெயத் தயங்கிவிடாதே
வாதுரைத்துக் கலகமதை வருத்திவிடாதே
வந்தவிருந்த தாதரிக்கத் தயங்கிவிடாதே
சூது பொரு தந்தரிக்கத் துணிந்துவிடாதே
துணிநிலத்தைத் தோயவுடை தரித்துவிடாதே
ஏதுபுரிந் தாலுமிறை நினைவுநீங்கா
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே

38. கோள் சொல்லிக் குழப்பநிலை கூட்டிவிடாதே
குற்றம்புரி வார்க்குதவி செய்துவிடாதே
வாழுமுயிர்க் கூறுவினை செய்துவிடாதே
வஞ்சகரின் வலையிலகப் பட்டுவிடாதே
கூழும்விருந் தாளரின்றிக் குடித்துவிடாதே
குறைசொல்லித் திரிவாரோ டிணங்கிவிடாதே
ஏழைமையை விரும்பிநின்ற இறைதூதானை
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே

39. மறுமைநாள் வாழ்வதனை மறந்துவிடாதே
மரணமது வருமதற்குப் பயந்துவிடாதே
வறுமையிலும் மனவுறுதி மாறிவிடாதே
மாற்றானை உறவென்று நம்பிவிடாதே
சிறுமைதரும் புன்வினைகள் செய்துவிடாதே
செய்தவர்கள் மனங்குன்ற நடந்துவிடாதே
எறுழதுவும் பொறுமையதும் ஒருங்கே வாய்ந்த
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. அவப்பெயரை யெவருக்குஞ் சூட்டிவிடாதே
அனாதைபொரு ளதனையப கரித்துவிடாதே
உவக்குமொன்றை யன்றியுப கரித்துவிடாதே
ஊருக்கெதி ரானவொன்றும் உஞற்றிவிடாதே
கவறாடு களரியினை யணுகிவிடாதே
காரிகையைப் படுதூறு பேசிவிடாதே
எவரோடு மன்பாக வாழ்ந்தவெங்கள்
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே.

41. வாயாடி வம்புரைத்துத் திரிந்துவிடாதே
வயிறார உண்ணமிக விரும்பிவிடாதே
நோயாளர் வினவாமல் இருந்துவிடாதே
நுண்கலைகள் பயிலுவதை மறந்துவிடாதே
ஓயாமல் உடலுழைப்புச் செய்துவிடாதே
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லிவிடாதே
ஈயாத லோபியரை இழிவா யெண்ணும்
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே

42. ஒழுக்கநெறி தவறிநீ ஒழுகிவிடாதே
ஒருவனது துணையதனை இழந்துவிடாதே
விழுப்பமது தருஞ்செயலை விலக்கிவிடாதே
வேண்டிவினை செய்வதனை விரும்பிவிடாதே
அழுக்காறு எவரிடத்தும் கொண்டுவிடாதே
அறியாயங் கண்டதற்கு அஞ்சிவிடாதே
எழுத்துவா சனையறியா இதயச் செம்மல்
ஏந்தல்நபி இன்னுரையை இதயங் கொள்ளே.

43. சொன்னவாக் குறுதியதை மாற்றி விடாதே
சோம்பிநீ வறுமைதனை எய்திவிடாதே
நன்னயமில் சொல்லதனை நவின்றுவிடாதே
நல்லவரை உதாசீனஞ் செய்துவிடாதே
முன்னோரின் நடைமுறையை முறித்துவிடாதே
மூட்டிவிடும் பாதகர்சொல் நம்பிவிடாதே
இன்னாத செய்தார்க்கும் இதமேசெய்த
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. வீட்டுடையார் அனுமதியா துட்புகாதே
வீணருடன் கூடிப்போய் விளையாடாதே
கூட்டுடைய குருவிநிலை குலைத்துவிடாதே
குமர்ப்பழிகள் செய்வாரோ டிணங்கிவிடாதே
ஏட்டளவிற் கல்விதனை இருத்திவிடாதே
இதயத்தில் மாசுமறு ஏற்றிவிடாதே
ஈட்டுபொருள் வர்த்தகத்தை இயற்றிவந்த
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே.

45. உழைக்காத உணவுண்ண விரும்பிவிடாதே
ஏர்வம்பு வசைகேட்க வந்துவிடாதே
பழத்தோட்ட மரமொன்றும் அழித்துவிடாதே
பாவாண ரெவரையுமே பகைத்துவிடாதே
வழக்கத்தை மாற்றிவிட முனைந்துவிடாதே
வாழ்க்கைமுறை தெரிந்தொழுக மறந்துவிடாதே
இழக்காரம் தீன்நெறியிற் காண்பிக்காத
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே.

46. சான்றோர்க்குச் சலாமுரைக்கத் தவறிவிடாதே
சகுனங்கள் பார்ப்பவரைச் சார்ந்து விடாதே
மான்விழியார் சொற்பாங்கில் மயங்கிவிடாதே
மன்றோரஞ் சொல்வோரை மதித்துவிடாதே
மேன்மக்கள் சகவாசம் விலக்கிவிடாதே
மெல்லியலார் துன்புறநோச் செய்துவிடாதே
என்றவருக் கீதல்முறை இயற்றித்தந்த
ஏந்தல்நபி இன்னுரையை இதயங்கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித ரமழான் சிந்தனைகள்

## அந்தாதி

1. முந்தையோர் முயன்று வந்த
முறையினி லெம்மை நோக்கி
வந்தவிப் புனித மாதம்
வருபகல் நேர மெல்லாம்
சிந்தையி லெண்ணி நோன்பு
சிறப்புற வனுட்டித் தெங்கள்
அந்தமில் குணத்தி னானை
அண்மிநாம் துதிசெய் வோமே.

2. துதிசெய்யு மவனுக் காகத்
துலங்கிய நோன்பென் றாலும்
விதிசெய்தா னெமக்கு நன்மை
வேண்டியெம் முடலு யிர்கள்
மதிசெய்யு முளமுந் துய்தாய்
வருந்திடுங் கார ணத்தால்
பதியினி லுள்ளோர்க் கெல்லாம்
பறுலெனப் படுவ தாமே

3. பறுளுக ளைந்தி லொன்றாய்
பயஹாம்பர் செய்து காட்டி
நிறுவிய நோன்பை யெங்கள்
நிறைமனத் தோடு நோற்று
மறுபக லுணவும் நீரும்
மறந்துவெய் யோன் மறையப்
பெறுபொழு ததுது றத்தல்
பேதைக்குங் கடன தாமே.

4. கடனது கொடுத்த போழ்தே
இறுபடு மதனா லெங்கள்
கடனது நோன்பை நோற்ற
காலத்தே கடனும் நீங்கும்
உடலுறுப் பதனாற் செய்யும்
உயரிய கருமத் தாலே
கடனது தீரு முண்மை
முஸ்லிமாய்த் திகழ லாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. திகழலாம் மற்றை யோர்முன்
சீரிய ரெனக் கணிப்பார்
தகவுநோன் பாளி யென்னச்
சகலரும் மதித்து நிற்பர்
இகத்தினில் மறுமை நாளில்
ஏகன்முன் வரிசை காண்பான்
அகழியை மூடு மிந்த
அரியநோன் பாளிக் கன்றே

6. நோன்பாளி யூண்கு டிப்பும்
நுகருவ தொன்று மில்லான்
வீண்பேச்சுப் பொய்பு றங்கோள்
பேசுவ தொழிந்து நிற்பான்
தான்தேடாப் பொருளின் மீது
சம்பந்தங் கொள்ள மாட்டான்
கான்முளைக் கெனினுந் தூய்தில்
கருத்துரை வழங்க மாட்டான்.

7. கருத்தினி லிம்மி தானும்
காமமே கொள்ள மாட்டான்
விருப்பினி லேவல் செய்யும்
மெல்லிய லாளே பக்கல்
இருக்கவும் கூர்ந்து நோக்கான்
இனியன மொழியான் காதல்
நெருக்கமும் பாரான் நோன்பு
நோற்றிடும் புனிதன் தானே.

8. புனிதமே யுள்ள மானோன்
போனநாட் செயல்க ளெல்லாம்
நினைவினிற் கொண்டு நன்மை
நிலைபெறச் செய்வன் தீமை
புனைவன நீக்கித் தன்னைப்
புதியவ னாக்கும் நோன்பு
மனிதனைப் புனித னாக்கும்
பாங்கினைப் பார்க்க லாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பார்க்கலாம் கோபம் வந்தால்
பல்லிணைக் கடிக்கும் கண்கள்
போர்க்களம் தெறிக்கப் புன்மை
புகன்றிடும் வாய்க ரங்கள்
யார்க்குமே நீளும் நோன்பு
நல்லமல் என்று கண்டால்
சேர்க்குமே பொறுமை சாந்தி
செய்தவ மிதுபோ லுண்டே

10. செய்தவ மாண்டு தோறும்
சேமமே காட்டு மெங்கள்
துய்யவன் கருணை மீது
தூயநல் லுள்ளங் காணும்
மெய்வலுக் குறைக்கும் நெஞ்சு
வீறாப்பு மறைக்கும் வாழ்வில்
நொய்பவர் நிலைமை காட்டும்
நோன்பருள் மகத்து வந்தான்

11. மகத்துவ முள்ள பேர்கள்
வளர்நோன்பு நோற்ப தாலே
தகுத்தீனைக் குறைத்து யாரும்
சமமெனு முண்மை காட்டும்
வகுத்தவ னோர்மை யெண்ணம்
வளர்த்திடும் வசதி யெண்ணம்
தகர்த்திடும் செல்வ மெல்லாம்
தக்கவ னொருவற் கென்றே

12. ஒருவன்நோன் பாளி யாயின்
உரைப்பதைக் குறைத்துக் கொள்வான்
மருவிடும் பேச்சின் பாவம்
வாராது தடுத்துக் கொள்வான்
தெருவினிற் சண்டை பார்த்தல்
கண்ணுக்குக் குளிர்ச்சி யென்பார்
அருகினிற் செல்லான் சண்டை
ஆறிடு மட்டும் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஆறிடு மேடும் பள்ளம்
அவநிகர் செல்வ மென்ன
ஊறிய கருத்து நெஞ்சில்
உதித்திடும் நோன்பா ளிக்கே.
ஏறிய வறுமை செல்வம்
இரண்டையும் நீக்கி மாந்தர்
ஆறிய சமமென் கொள்கை
அமைத்திடும் நோன்பு மாதோ

14. மாதர்கள் விட்ட நோன்பை
மறுதினம் காளாச் செய்வார்கள்
தீதெலாம் மாத ராலே
தெரிந்திடு மென்ற சொல்லை
மாதர்கள் கணித்துப் பாவம்
மல்கிடா தொழிதல் வேண்டும்
மாதர்கள் நோன்பு நோற்க
வாஞ்சையுங் கொள்வா ரன்றோ

15. கொள்பவன் மனங்கோ ணாது
கோதையர் நோன்பு நாளில்
நள்ளிர வவன்தன் நாட்டம்
நசுங்கிடர் தனித்தல் வேண்டும்
உள்ளது கொண்டு நாதன்
உபசரித் தவன்தன் நோன்பு
பிள்ளைபோல் நோற்கச் செய்தல்
பேதையர் கடனா மன்றோ

16. அன்றொரு நாளுக் கேனும்
ஆத்தினி லில்லை யுண்டி
தின்றிட வென்றி ருப்பர்
தெய்வத்தை நோக்கி நிற்பார்
நன்றிது நோன்பு நோற்க
நாமென்ன செய்வோ மென்று
நின்றிடு வோர்க்கு நாயன்
நிமிர்பொருள் தருவான் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. தருவனென் றுறுதி கொள்வாள்
தையலு மசைவி லாத
ஒருவனைப் பற்றி நிற்பாள்
உண்மையாய் நோன்பு நோற்க
வருபொருள் கிடைத்த காட்சி
வையக முள்ள மட்டும்
பெருகிடக் காண்பா ளந்தப்
பெண்ணணங் குறுதி யென்னே.

18. உறுதிதான் நோன்பு செய்யும்
ஒண்டொடிக் கற்பி னாளின்
பெறுமதி மிக்க நோன்பைப்
பேணுதல் செய்வார் நாளும்
அறுதியாய்க் கணவன் பிள்ளை
ஆற்றிடும் நோன்புக் கெல்லாம்
மறுமொழி சொல்லும் பாங்கு
மங்கையர்க் குண்டு மேனாள்

19. மேனாளில் நோன்பு பற்றிப்
பிள்ளையைக் கேட்பா னல்லாஹ்
. நானாளும் தாயும் தந்தை
நம்பிக்கை யுள்ளோர் நோன்பு
தாநாளும் நோற்க என்னை
நடத்தினர் நோற்றே னல்லாஹ்
வானாளில் அன்னார்க் குன்றன்
அருள்கொடு வென்றி ரப்பார்.

20. இரப்பரோ உன்வி தியை
ஏற்றிடாத் தந்தை தாயார்
புரப்பரோ அல்லாஹ் உன்றன்
போதனை புறக்க ணித்தார்
இரக்கமோ டென்னை நோன்பு
ஏற்றிடப் பழக்க வில்லை
பரக்கநீ பிழைபொ றுப்பாய்
என்றிறை கெஞ்சு வாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கெஞ்சுவார் நோன்பு நோற்க
கிளர்தகம் பலமி ருந்தும்
அஞ்சுவா ரல்லை மாந்தர்
அவச்சொலும் பொருட் படுத்தார்
எஞ்சலில் ஊண்கு டிப்பை
இழக்கவும் விரும்ப மாட்டார்
துஞ்சுவார் போகந் துய்க்கும்
துன்மார்க்க ரிவர்கள் தாமே.

22. இவர்கள்தாம் முஸ்லி மென்று
இயற்பெயர் கொண்டு வாழ்வார்
அவனுடைப் பொருள்கள் யாவும்
ஆசிப்பர் நோற்க மாட்டார்
இவர்கள்சந் ததியின் குற்றம்
எல்லாமே யேற்ப ரையோ
தவஞ்செயும் றமாழா னென்று
சந்தோஷங் கொள்ளா ரேனோ

23. கொள்ளுவா ரேழை பாங்கர்
ஹுதாதமக் களித்த வற்றில்
அள்ளிநோன் பியற்று வாரை
ஆதரித் திடுக்கண் நீக்கி
உள்ளநோன் பியற்றச் செய்து
ஒருவன தருளை யாங்கு
கொள்ளையாய்ப் பெறுவ ரன்னார்
குற்றமும் பொறுப்ப னன்றே

24. பொறுத்திடும் நோன்பு நோற்றுப்
பொழுதினை நல்வ ணக்கம்
சறுத்தெலாம் பொருந்தச் செய்து
சாலவு மன்ன தானம்
விருத்தர்மற் றினத்தார்க் கெல்லாம்
வேண்டிய கொடுத்த வர்கள்
விருப்பினைப் பெறுவர் பாவம்
அனைத்தையும் பரமன் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. பரமன தருள் சுரந்து
பாக்கியம் பெற்ற பேர்கள்
கரவிலா தனைத்துங் கூட்டிக்
கணக்கெடுத் தேக நூறில்
இரண்டரை யாகச் சேர்த்து
ஏகன்சொல் விதியா னோர்க்குத்
தருவது விரும்ப வேண்டும்
தகுத்துயர்த் துஞ்சக் காத்தே.

26. சக்காத்து முதலி லுள்ள
கழிவென நினைத்தல் வேண்டும்
எக்காலும் அதுத காது
எமக்கென நினைத்தல் வேண்டும்
முக்காலு மறியும் வேந்தன்
முடிவெனத் தெரிதல் வேண்டும்
சக்கானா லுன்மு தலுஞ்
சக்காகுந் தெரிந்து கொள்வாய்

27. தெரிந்துகொள் அல்லாஹ் தந்த
திரவிய மடைக்க லம்மாம்
புரிந்துகொள் அதனிற் பங்கு
பொருந்துவா ரெண்ம ராவார்
இருந்தனப் பங்கு ளார்கள்
இயல்தொழில் செய்து வாழ்வார்
மருந்துபோல் நோன்பின் மாண்பு
மல்கிடுஞ் சக்காத் தாலே

28. சக்காத்து முதலுள் ளோர்க்குச்
சதக்காவெல் லார்க்கு மாகும்
இக்காலஞ் சதக்கா வீதல்
இயற்றிடும் நோன்பு முற்றும்
புக்கசந் தான மெல்லாம்
பொருந்திரண் டள்ளு ணாவை
பக்தியோ டீதல் தக்கார்
பகுத்தவர்க் காகு மன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. பகுந்திடும் நோன்பின் கூலி
பரமன்தன் பொறுப்பே யென்றான்
மிகுரக சியமாம் நோன்பின்
மென்மையை யளவைப் பண்பை
பகுத்தறிந் திடும்பெ ருமை
பார்த்திபன் தனக்கே யுண்டு
மிகுவிசு வாசத் தோடு
மேவுக நோன்பைத் தானே.

30. நோன்பதன் விதிதெ ரிந்தோம்
நுவலதன் மகிமை கண்டோம்
நோன்பினை நோற்கும் பான்மை
நுண்ணிதாய்த் தெரிந்து கொண்டோம்
நோன்பெமக் கணிக்குஞ் சாந்தி
நுவலுத்ற கெளிய தாமோ
நோன்பினை யெமக்குத் தந்தான்
நுண்ணியல் முந்தை யோனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண மங்கள
# மாலை

புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

குணமங் களவாழ்வு கொண்டதனை நானே
மணமங் களமாலை பாட - உணர்வொன்றிப்
பூணுந் தவவாழ்விற் பொய்தீரு முள்ளத்தே
காணும் பரம்பொருளே காப்பு.

1. மாமியின் மகனை யன்றி
மற்றவர் கரமுந் தீண்டேன்
பூமியி லவரை யன்றிப்
புகலெனக் கெவரு மில்லை
ஆமிது சரத மென்ன
ஆயிஷா வான கன்னி
மாமியின் மகனை யுள்ள
மலரினி லிருத்திக் கொண்டாள்

2. வாத்தியார் மச்சா னோடு
வாழநீ கருத்திற் கொண்டாய்
காத்திரு, வருவார், சும்மா
காலத்தைக் கழிக்கின் றாயே
பேய்த்தன மான வுந்தன்
கொள்கையை மறப்பா யென்றால்
ஆத்திரங் கொள்வாள் சீறி
யலக்கணுற் றவறு வானே.

3. திறனிலா முடவன் கொப்புத்
தேனுண்ண வாசை கொண்ட
திறமது போலச் செப்பும்
திரவிய மில்லா வேழ்மைத்
தரமுளா யவரைக் கொள்ளச்
சரதநீ செய்த தம்ம
விரதம்நீ முறிப்பை யென்றால்
வெய்துயிர்த் தொடுங்கு வாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கல்விமா னவர்க்குத் தங்கள்
கன்னியைக் கொடுக்க நாடும்
செல்வர்பல் லோரின் பேச்சுச்
செவிகளில் நுழையு தன்னார்
பல்பொருள் கொடுத்துத் தங்கள்
மாப்பிளை யாகக் கொள்வார்
அல்லவோ வென்றா லந்தோ
வாற்றொணாத் துயரங் கொள்வாள்

5. காப்பொடு கொலுசு மற்றுங்
கனகவா பரண மெல்லாம்
மாப்பிளை யொருவர் தந்து
வரித்திட விரும்பு கின்றார்
மூப்பினைப் பற்றி யென்ன
முறையுந்தான் விரும்பென் றார்க்குத்
தீப்பொறி பறக்கச் செல்வி
சினந்துரை விளம்பி நின்றாள்

6. கல்வியைக் கற்க வில்லை
கையினிற் காசு மில்லை
நல்பொரு ளொன்று மில்லை
நமக்களிப் பாரு மில்லை
வல்லவ னொருவ னன்றி
வகைசெய்ய வெவரு மில்லை
நல்லதை நாடி நின்றேன்
நடப்பது நடக்கு மென்றாள்

7. பொருளினை விரும்பி மச்சான்
போயிடிற் போகட் டும்நான்
ஒருநொடி யேனும் மற்றார்
ஒருவரை நாட மாட்டேன்
வருவிதி யிருக்கு மானால்
வழியினிற் தங்க மாட்டா
ஒருவனை நம்பிக் கொண்டேன்
உறுதியிற் தவற மாட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. என்றவள் கொள்கை தன்னை
எவருமே மாற்ற வெண்ணா
நின்றனர் பெற்ற தாதை
நிமலனைத் துதித்து நின்றார்
சென்றுதன் மருக னோடு
செல்வியின் கருத்தைச் சொல்ல
ஒன்றிய திறனில் லாதே
யூமையாய்ச் சமைந்தார் மாதோ

வேறு

9. தங்கையின் மகனைச் சரிபுத் தீனைத்
தண்டமிழ் கற்கும் திறம்பெற் றானை
சங்கைநல் லாசா னெனநின் றானைத்
தன்மக ளுள்ளத் திடம்பெற் றானை
எங்கெவர் கொள்ள விருக்கின் றாரோ
வெவர்க்குறை மைத்துன ரியம்பிடு வாரோ
நங்கையை வாழ வைத்திடு மாறு
நாய னறிந்தது நானறி யேனே

10. மைத்துன ராதம் வாவா தனது
மைந்தனி னுள்ள மறியா திருந்தார்
பெற்றதம் மகளிர் மணவினை முடித்தல்
பெரும்பணி மைந்தற் கெனவிருக் கின்றார்
அற்றதூஉம் சரியே யந்நிலை மருகன்
அமைவதும் முறைய∴ தன்றிவே றிலையே
இத்திற மெண்ணு மிருதலைக் கொள்ளி
எறும்பதன் நிலையி லிருந்தார் தந்தை

வேறு

11. நாலே ழகவை நம்பிக்கு
நன்னான் ககவை நங்கைக்கு
நூலா ருரைக்கு மறநெறியில்
நூலும் பிசகா தமைகின்றான்
வாலைக் குமர னில்லறத்தை
மனத்திற் கொள்ளா திருக்கின்றான்
சேலைப் பழிக்குங் கண்ணாளின்
சிந்தை யறியா திருந்தவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. தங்கை மாரின் வாழ்வொன்றே
தனது வாழ்வாய்க் கருதுபவன்
தங்கை மாருக் குரியகடன்
தந்து முடிக்கும் நினைவாயெந்
நங்கை மீதும் நாட்டமிலான்
நல்லது கண்டு செய்துவரும்
திங்களும் நாளுஞ் சென்றோடச்
சிந்தை தெளிவுற் றிருந்தனனே.

13. அன்றோ ரிரவி லவன்தந்தை
யமாந்த வுணவுக் களரியிலே
நன்றெ யின்னார் செல்வந்தர்
நங்கைக் குன்னை மணஞ்செய்ய
என்றே யென்னைக் கேட்கின்றார்
என்ன பதில்நான் சொல்லிடுவேன்
நன்றே யுணர்ந்து சிந்தித்து
நவில்வாய் மைந்த நானுரைக்க

14. என்னும் வினாவிற் கிதமாக
விதுநாள் வரையு முளத்தளவே
துன்னுங் கருத்தைத் தெளிவாகத்
துணிந்து கூறத் தொடங்கினனே
என்னைப் பெற்றோர் நானறிய
எவர்தந் துரும்புங் கொண்டறியார்
பின்னும் அதுவே கோளாகப்
பிறர்தம் பொருளை நான்விரும்பேன்

15. என்று மென்கை மேற்கையா
யிருக்கு மன்றிக் கீழாகா
ஒன்றும் பொருட்கா யெவர்க்கேனும்
ஒண்ணா தடிமை யாயிடவே
என்று மிறைவ னெனக்களிப்பான்
என்னை யீன்றார்க் களித்திடுவேன்
பொன்னும் பொருளை விரும்புவது
புகழு மாகாப் புவியினிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. சுதந்திர புருட னாயிங்கு
சுகிர்த முடனே வாழ்ந்திடுவேன்
இதந்தர வெனக்கோர் வாழ்வுண்டேல்
இருப்பா ளொருத்தி யதற்காக
விதந்துரை செய்ய நானின்றும்
விரும்பிட வில்லை யெவளையுமே
மதம்புகல் செல்வி வாய்ந்தவளை
வரித்திட வருநாள் மொழிகுவனே.

17. என்னை விவாகஞ் செய்துவைக்கும்
எண்ணங் கொண்டிங் கெவரிடத்தும்
தின்னும் பொருளு மென்விருப்பந்
தெரியா தொன்றும் பெறவேண்டாம்
என்னைப் படைத்த விறையவனே
எனக்குந் துணையைத் தெரிந்தளிப்பான்
அன்ன பொழுதி லதுநடக்கும்
அதுவே வாழ்வுக் கினிதாகும்

18. அந்நியர் பொருள்கொண் டவனியிலே
அமைவன் மைந்தன் செல்வனென
எண்ணிட வேண்டா மிதுவிரும்பு
மிதய மென்னிட மில்லையாகும்
என்னிறை தந்தா லதுவென்றும்
இருக்கு மதுவே பொருளாகும்
என்னருந் தந்தா யிதுவேதான்
என்பதி லிதனை மாற்றேனே.

**வேறு**

19. ஈதுரை கேட்ட தாதை
எதிர்மொழி யேதுஞ் செல்லார்
பேதுறார் மைந்தன் கொள்கை
பெரிதென மனத்துட் கொண்டார்
மாதெவ ளென்னும் போது
மணஞ்செயச் சம்ம திப்பேன்
யாதொரு வருக்கும் நானாய்
யாதொன்றும் நவிலே னென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. மருமகன் மகளைக் கொள்ள
வரும்பொழு தவரி ருந்து
தருமஞ்செய் துறையத் தக்க
தானமொன் றியற்ற வெண்ணி
வருமதி சொற்ப மேனும்
வகுத்தொரு பங்கு கொண்டு
ஒருபதி செய்து வந்தா
ரொண்டொடி தந்தை தானே

21. வறுமையிற் செம்மை யாக
வாழ்ந்தவர் மீரா லெவ்வை
பொறுமையோ டிருந்த நங்கை
பொன்னணி நாளை யெண்ணி
இறைவனை யேத்தி வேண்டி
யிருப்பதை யன்றி வேறு
துறையிலை மருக னெண்ணந்
தெரியவுந் துணிந்தா ரில்லை

22. இல்லறங் கொள்ளு நாட்டம்
இல்லையோ வென்று நண்பர்
செல்லமாய்க் கேட்குந் தோறும்
சிரித்துரை மழுப்பி யந்த
நல்லநாள் வந்த பின்னர்
நாட்டமும் வருமப் போது
இல்லற விதழ்வந் தெய்து
மென்றுரை விடுப்பான் நம்பி.

23. அறுவரு ளைந்தாந் தங்கைக்
கடுத்துறு வெள்ளி நாளில்
வருமொரு சுபமு கூர்த்தம்
மணவினை யென்று சொல்ல
திருவளர் வயிர முத்தென்
தேசிக ரிடத்துச் சென்றான்
பிரியமா யோது வித்த
பெரியவ ரன்னார் மாதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. செய்திகேட் டுளம்பூ ரித்துச்
சேயினை நோக்கி யுந்தன்
செய்தியுங் கேட்க வேண்டும்
செப்புவா யென்ன மைந்தன்
ஐயவென் செய்தி யொன்று
மறைவதற் கில்லை யாறாய்
எய்திய தங்கை வாழ்வு
மிருக்கிற தென்று சொன்னான்

25. நல்லதுன் னுறுதி கண்டு
நாடெலாம் வியந்து கொள்ளும்
செல்வநின் வயது மட்டும்
செல்லுவ தில்லை யாமோ
வல்லையிற் சென்றிப் போதுன்
மாமனை யென்னைக் காணச்
சொல்லிடு வென்று சொன்னார்
சுதனிடத் தன்பு கொண்டார்

26. அழைப்பினை யேற்ற மாமன்
அவருழைச் சென்று மாலை
களைப்பினை யுடையார் போன்று
கண்மணி யான தங்கை
விழுந்தகு மில்லம் நாடி
வேண்டிய துணைவர் சேர
வழுத்தின ராக நெஞ்சில்
மகள்நினை வோடு புக்கார்

27. மருகிய ரைவர் வாழ
மணவினை முடிக்கு மட்டும்
பெருகிய வயது வந்தோன்
பிந்துதல் முறையு மன்று
உருகிலா துள்ள முங்கள்
உலகிய லறிகி லீரோ
திருமண மவற்கு முங்கள்
செல்விக்குஞ் செய்க வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. தேசிக ருரைமேற் கொண்டு
திடம்பெறு மனத்த ராகக்
கூசியுங் கூசா ராகக்
குணநிறை மைத்து னர்பால்
பேசினர் மகனைப் பெற்ற
பெண்ணினை நல்ல நாளில்
மாசகல் மணம்பு குத்த
வார்த்தையொன் றறிக மானே.

29. எனக்கொரு தடையு மில்லை
என்மகன் விரும்பி னாலே
தனக்கொரு தைய லாளைத்
தாரமா யளித்து வைப்பேன்
மனக்குறு விருப்பங் காணின்
வருமொரு சுபநே ரத்தில்
இனத்தவர் கூடி யந்த
விருவரி னழகு காண்போம்

வேறு

30. இந்தவிடை வந்தவரி னிருசெவிக ணுழைய
அந்தமில வின்பமழை யகங்குளிரப் பெய்ய
முந்துவெள்ளி நாளில்மணம் முடிப்பமென முற்றி
வந்தவழி சென்றனர் மனக்கவலை யற்றார்

31. நடந்தன வெலாந்தனது நல்லகுரு வெண்ணங்
கடந்திட வொணாதவர்சொல் காத்திடுவ னென்றே
மடந்தையைத் தெரிந்தனரால் மாற்றுரையில் செம்மல்
உடம்படவும் மணவுடை யுடுக்கவுந் துணிந்தான்

32. தங்கைமணம் முற்றியநாள் தானும்மண மகனாய்
நங்கையாயி ஷாகரங்தொ ளாயிரஞ்சே ராண்டு
பொங்குமுப்பத் தேழுமுதற் தேதிவரு வெள்ளி
தங்குசுப வேளைதரத் தொட்டனன் மணந்தே

33. பெற்றவர் மனங்குளிரப் பெரியவர்கள் போற்ற
உற்றவ ருறவினர்கள் உவகையொடு வாழ்த்த
சுற்றவர் வியந்தினிய சோபன முரைக்க
மற்றிவர்க ளில்லறம் புகுந்தனர்க ளம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேறு

34. நாட்டு வழமையது நங்கையினைப் பெற்றவனைக்
கேட்டுக் கைக்கூலி கெடுபிடிக ளெல்லாம்
வாட்டி வதைத்து வாங்கியபின் அன்னவளைச்
சோட்டுத் துணைவியெனத் துணிந்துமணம் புரிவதுவே.

35. பெற்றார் பொருளிருந்தாற் பிள்ளைக் களிப்பார்கள்
பெற்றார் பெண்ணென்றாற் பெரும்பொருளுஞ் சேர்ந்திடுமோ
கற்றாரும் பெண்கொள்ளக் கனதனத்தை விழைகின்றார்
எற்றே யிவர்கொள்கை யிதயந்தா னிசைவதுவோ

36. கைக்கூலி வேண்டேன் கனபொருளும் நான்வேண்டேன்
இக்கால வழமை யெதுவுந்தர வேண்டேன்
மிக்க புனிதமதம் மேவும்வழி நிற்பேன்
புக்க மணமகனின் புதுமையிது நெறிவியந்தார்

37. பொருளுக்காய்ப் பெண்கொள்ளல் பொருந்தும் மணமாமோ
தரும்பொருளே முன்னிற்குந் தாரஞ் சிறக்காதே
பெறும்போ தினிக்குந்தான் பின்னாலே வருந்துன்பம்
மருவா தினிய மணவாழ்வு வையகத்தே

38. அன்புப் பிணைப்பி லானந்தம் பொங்கிமிக
வின்பந் திளைத்தே யிணைந்தா ரிருவருமே
கண்ணுக கினிய கணவன் கருத்தமையும்
பெண்ணுக் கிவளன்றி வேறுளரா ரென்றுரைத்தார்

39. பூவோடு நாரும் பொருந்தும் மணமென்பார்
நாவேறு நண்ணா நங்கையிவ ளங்ஙனமே
கோவோ டரசி குணம்பெற்றாள் கொண்டவனை
நாவோ டிருத்தி நயக்கின்றாள் வாழியென்றார்

40. இல்லறத்தை நல்லறமாய் ஏற்றா னிளநம்பி
எல்லவரும் மெச்சு மிதவாழ் வமைத்துள்ளான்
நல்லா ளவளை நலமாகப் போற்றுகின்றான்
அல்லாஹ் விவர்கட் கருளுகென வாழ்த்தினரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

41. வாழ்வினை யாரம் பித்த வகையினை யுரைத்தே னென்னில்
வாழ்வினுக் கிறையன் பொன்றே போதுமென் றுறுதி கொண்டு
வாழ்விது வெவர்க்கு மில்லா வகையின் லமைத்துத் தந்த
வாழ்விது வின்ப வாழ்வாய் மலர்ந்திட வமைத்தான் கொண்டான்

42. ஒருவனை நம்பி னோருக் குண்டெலா மென்ப கண்டே
தீருவினைப் பதவி மேன்மைச் சேய்புகழ் கீர்த்தி தன்னை
உருவினைச் சுகசெல் வத்தை உள்ளநிம் மதிசம் பத்தை
குருவினைப் புலமை. தன்னைக் குறைவிலா தளித்தான் மாதோ

43. மலரிணை மணப்ப போன்று மங்கையை மணந்தே னெந்தன்
மலரவள் கசங்கா வண்ணம் மகிழ்வுட னென்னை யுள்ள
மலரினில் வைத்தென் வாழ்வு மலர்ந்திடச் செய்தாள் முகமென்
மலரினாற் குளிர்ந்தே னுள்ளம் வல்லுரை கேட்டே னில்லை

44. பொறுமையின் மாண்பு கண்டேன் பூவையை யொறுத்து வைதற்
சிறுமையைக் கொண்டே னில்லைச் சீறிநீ யென்ற வார்த்தை
குறுகிடா தினிய சொல்லாற் குற்றம துணர்த்தி வாழ்ந்தேன்
வறுமையிற் செம்மை யோடு வாழ்ந்தொளி படர நின்றேன்

45. எனக்கேது வேண்டு மென்ப தில்லவள் தெரிந்து தந்தாள்
மனக்கொரு கவலை யின்றி வளர்பொரு ளவன்பாலு ய்த்தேன்
மனத்தினி லிருமை காணா மாண்புட னுயிரு மொன்றி
யினத்தவர் சேம மோம்பி யிருந்தன மினிது மாதோ

46. எம்மண வாழ்வு கண்டா ரிறும்பூ தெய்திருந்தா ரன்னார்
தம்மண வாழ்வு மாங்கே தழைத்திட விரும்பு கின்றார்
எம்மண வாழ்வின் நிய்யத் தேதுவென் வுணர்ந்து கொண்டால்
தம்மண வாழ்வும் வல்லோன் தழைத்திடச் செய்கு வானே.

47. மக்களின் வாழ்விற் காணும் மறுவினை நடுநின் றாய்ந்து
சிக்கலை நிவர்த்தி செய்வான் நேரத்திற் சிறிது போற்றி
பக்கமே சாரா நின்று பகர்ந்தனம் தீர்ப்பி னாலே
புக்கவர் சுங்கு கொண்டார் பொருந்தின ரின்பங் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

48. கைக்கூலி வீடுகாணி பொருள் கேட்டுக் காரிகையை
மிக்காரி டைசென்று கைப்பிடித் தார்படு மின்னல்களை
எக்காரணங்கொண்டு மொழியார் நரக வேதனையே
புக்கா ரினியும் புகாதீர் யவர்பொருட் பாசறையே

49. பொருளுளார் மகட்கே பூதல வாழ்வு பொருந்துமெனில்
பொருளிலார் நங்கைக் குணவதி யேங்கி யிருப்பதுவோ
அருளொடு சிறந்த குணவதி யணங்கை யருனாளன்
பொருளினை வேண்டிப் பொருத்துவிர் கரத்தைப் புண்ணியர்காள்

50. விவாகம் சுவர்க்கப் பிணைப்பென்ப தறியார் பொருள்விருப்பால்
விவாகப் பிரிவினை கோரல் கொடுமை பெண்ணுளத்தை
விவாகப் பிணைப்பறுத் தலக்க னுறச்செயும் பேதையரே
விவாகம் பெண்ணொடு தானென் றறியா திருப்பதுமேன்

51. தனக்கெளி யவளே தாரமென் றால்அவள் தரும்பொருளை
மனக்களி கொண்டு பலவந்த மாக விழைகுதிரோ
தனக்கென வேது மிருப்பி னதனை யனுபவிப்பீர்
மனக்குறு நிறைவே மாபெருஞ் செல்வ மெனவறிவீர்

52. கோண லெலும்பிற் பிறந்தவர் பெண்கள் குறையிருக்கும்
ஆணவங் கொண்டே அடித்துத் திருத்த அவர்தாங்கார்
காணுங் குறையைக் கனிமொழி கொண்டு முயலுவிரேல்
காணும் பெரும்பயன் காதலும் மிக்குச் சிரிக்குமரோ

53. இல்லற வாழ்வது இன்புறு வாழ்வா யீருலகும்
நல்லற மாக நல்கிட வேண்டுமென விரும்பின்
சொல்லரும் பொறுமை சுகிர்த மொழிசன் மானமெனும்
நல்லரு முபாய மறிவொடு கொள்வீர் நலமுமுண்டே

54. பூவோடு சேர்ந்த நாரும் புதுமணம் பெறுமாபோல்
நாவொடு சேர்ந்த வின்சொல் நம்பியை நங்கைமானும்
நோவொடு சேர்ந்த புன்சொல் பூவையும் புகல்வாள்உன்றன்
நாவொடு சேர்ந்த தாக நன்மொழி வழமைசெய்வாய்

55. இன்முகங் காண வுன்ற னிளங்கொடி யவாவிநிற்கும்
புன்முறு வல்கொண் டன்னாள் பொலிவுறக் காண்பாயவள்
இன்முகங் கண்டு செய்யு மெவ்வினை தானும் முற்றி
நன்முகத் தோடு மீன்வாய் நல்லருள் சிறக்குந்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தௌபா
# மாலை

புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தௌபா மாலை

*வெண்பா*

அரியவனே யுன்னடியா னாற்றுபிழை போக்கத்
தெரியுந் தமிழ்மொழியால் வேண்டி - உரிமையுடன்
மேலைப் பதியருள விண்ணப்பித் தித்தௌபா
மாலை யணிவேன் மகிழ்ந்து.

1. ஒருதுளியை மகனாக உற்பவிக்கச் செய்தவனே
கிருபையோடு வளர்த்துவந்தோய் கிளத்துபிழை பொறுப்பாயே

2. கண்ணிரண்டுந் தந்த காவலனே யுன்னருளை
எண்ணியெண்ணித் துதிக்கிறேன் என்பிழைகள் பொறுப்பாயே

3. சிந்திக்கும் உள்ளம் சிறப்பா யமைத்தவனே
வந்திக்கு முன்னடியான் வலியபிழை பொறுப்பாயே

4. நல்லனவே செய்ய நடக்குங்கை யளித்தவனே
இல்லாதோர்க் கீமனத்த னென்பிழைகள் பொறுப்பாயே

5. வந்திக்க ஏற்ற வளப்பம் பெறுநாவை
தந்தவனே நான்செய்த தவறெல்லாம் பொறுப்பாயே

6. தவறிழைக்குஞ் சாத்தானின் நடைமுறைக்குள் ளாகாது
தவமிழைக்க எனக்கருள்வோய் தமியன்பிழை பொறுப்பாயே

7. சாத்தா னெனக்குச் சதிசெய்ய மாட்டாமல்
நீத்தாரைப் போலிருக்க நிர்மலாபிழை பொறுப்பாயே

8. சித்தந் துலங்கத் தெளிவளித்த பெருமானே
பத்தன் உனதடியான் படுபிழைகள் பொறுப்பாயே

9. மயக்கந் தெளிய மருந்துதவும் பூமானே
தயக்கந் தவிர்த்துத் தளைபிழைகள் பொறுப்பாயே

10. கிழமை தியபோதுங் கீழென்னை யாக்காமல்
அழகான வாழ்வளித்தேய் ஆள்பிழைகள் பொறுப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வானம் இருட்டி மழையருளி யுலகுக்குத்
தானம் அளிப்பவனே தமியன்பிழை பொறுப்பாயே

12. விளைவா லுலகப் பசிதீர்க்கும் மேலவனே
இளையான் முதற்செய்த என்பிழைகள் பொறுப்பாயே

13. அறியாமற் செய்த அநேகம் பிழைகளுண்டு
நெறியோடு பார்த்திருக்கும் நிர்மலனே பொறுப்பாயே

14. வெயிலவனா லுலகளிக்கும் வேந்தேயுன் வேதனையை
பயிலேனுன் சிற்றடியான் பாவமெல்லாம் பொறுப்பாயே

15. சிரந்துலக்கிச் சிந்தனையைச் செப்பமாய்த் தந்தவனே
பரம்பொருளே யுன்னடியான் பாவமெல்லாம் பொறுப்பாயே

16. உனைக்காணேன் ஆயினுமுன் சிபத்தெல்லாந் தெரிந்திருக்கும்
எனைக்காணு மிறையவனே என்பிழைகள் பொறுப்பாயே

17. அடுத்தொன்றுக் கொப்பாகாத் திருமறையைத் தந்தவனே
எடுத்தாள நானறியே னென்பிழைகள் பொறுப்பாயே

18. கொடுத்தவர்க்கும் குறையாமற் கொடுக்கின்ற கொடையாளா
எடுத்ததென தென்றிருக்கும் என்பிழைகள் பொறுப்பாயே

19. பாக்கியங் களிற்பெரிய பாக்கியமாம் நன்மக்கள்
பாக்கியங்க ளளித்தவனே பல்பிழைகள் பொறுப்பாயே

20. கிருபையாளர்க் கெல்லாம் கிருபைமிகத் தருபவனே
அருமைபெறு முன்னடியான் அடுபிழைகள் பொறுப்பாயே

21. வலுப்பமும் சிறப்புமுள வல்லவனே யுன்னைநிதம்
அலுப்பின்றி வணங்கவருள் அடியான்பிழை பொறுப்பாயே.

22. மகோன்னதப் புகழென்றும் மாறாத துய்யவனே
யுகாந்தமு முள்ளவனே தொடர்பிழைகள் பொறுப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. கருப்பைக்குள் முட்டைவைத் திரட்சிக்கும் பெருமானே
விருப்பமொடு நான்செய்த வெய்யபிழை பொறுப்பாயே

24. படைப்பினத்துக் கொவ்வாத வலிய பரம்பொருளே
நடைப்பிணமாய்த் திரிகின்ற நாயேன்பிழை பொறுப்பாயே

25. செவியின்றிக் கேட்டிருக்கும் செய்ய பெருமானே
புவியில்நான் புகன்றபுறம் பொய்ப்பிழைகள் பொறுப்பாயே

26. கண்ணின்றிக் கண்டுவரும் காருண்ய மிக்கவனே
மண்ணில் அவம்செய்த மாபிழைகள் பொறுப்பாயே

27. அறுசுவையு மதன்மேலும் ஆயுணர்வு தந்தவனே
பெறுசுவையைத் தேரான் பொரும்பிழைகள் பொறுப்பாயே

28. இம்மைக் களிப்பூட்ட எய்துவினை யுவப்போன்
அம்மைக் களிப்பூட்ட அறியான்பிழை பொறுப்பாயே

29. மண்டியிடு வார்வணக்கம் உவப்பவனே உன்னை
அண்டினே னுன்னடியான் அரியபிழை பொறுப்பாயே

30. வேண்டினார் கையை வெறுமனே தள்ளாதோய்
வேண்டினே னுன்னடியான் வெய்யபிழை பொறுப்பாயே

31. மருட்டும் பொருட்செறிவில் மயங்கிக் கிப்பவனான்
தெருட்டும் வகைவகையாம் செய்தபிழை பொறுப்பாயே

32. என்றும் எவராலும் மேத்தப் படும்பொருளே
என்றும் தவிரா தியற்றுபிழை பொறுப்பாயே

33. கருவுக்குட் கருவா யியங்கும் பெரும்பொருளே
தெருமந்த சொல்லான் செய்பிழைகள் பொறுப்பாயே

34. வகையறியா தென்னை வழிநடத்தும் வல்லோனே
மிகையாகச் செய்த வெய்யபிழை பொறுப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. வேண்டாத போதும் வேண்டுவன தந்தவனே
பூண்ட கொடுவினைகள் புரிபிழைகள் பொறுப்பாயே

36. பாலுக்கு ளெண்ணெய்போல் படைப்பினங் களுட்செறிந்த
மேலுக்கு நிறையவனே வெம்பிழைகள் பொறுப்பாயே

37. படைப்பினங்க ளெல்லாம் தன்னையே வணங்குவதை
உடைத்தென்று கொள்வோய் உறுபிழைகள் பொறுப்பாயே

38. படைப்பினங்கட் கெவ்விதத்தும் ஒவ்வாத பரம்பொருளே
மடம்உளவ நிகர்புகலும் மாபிழைகள் பொறுப்பாயே

39. வேண்டினோர் வேண்டாதோர் தேவை யறிந்ததுதவும்
ஆண்டவனே யுனைமறந்த அறிபிழைகள் பொறுப்பாயே

40. கூவியழைத் தாலும் குறைவாய் மதித்தாலும்
பாவியென் குறைதீர்த்துப் பகர்பிழைகள் பொறுப்பாயே

41. உள்ளச்சமின்றி ஒப்புக் குனைப் பணியும்
கள்ளத் தொழுகையனென் கடும்பிழைகள் பொறுப்பாயே

42. எண்ணுவா ருள்ளத் திருக்கும் பரம்பொருளே
எண்ணாது செய்த இரும்பிழைகள் பொறுப்பாயே

43. நாளெண்ணிக் கொள்ளும் நரர்வணங்கும் கோமானே
கோளெண்ணு முன்னடியான் கொடுபிழைகள் பொறுப்பாயே

44. பெண்ணுக் குறுபதவி கொடுத்தருளும் பெருமானே
கண்ணுக் குறுமயக்கம் கழியப்பிழை பொறுப்பாயே

45. விண்ணார மெல்லாம் தனக்காக்கிக் கொண்டவனே
விண்ணாரம் பேசுமென்றன் பெரும்பிழைகள் பொறுப்பாயே

46. சூடும் குளிரும் சுகந்தரவே யாத்தவனே
சூடு குளிரறியான் சொல்பிழைகள் பொறுப்பாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. பார்க்கப் பசுந்தாகப் பாருலகைப் படைத்தவனே
தூர்க்குநிலை யாமையெண்ணான் தொடுபிழைகள் பொறுப்பாயே

48. பெருமைக் குரியவனே பேருலகிற் பெருமைசொலும்
சிறியன்சொல் செயல்களினாற் சேர்பிழைகள் பொறுப்பாயே

49. புகழெல்லாம் தனக்குரிய பொருளாக்கிக் கொண்டவனே
சகம்மயக்குஞ் சிறியோனைச் சார்பிழைகள் பொறுப்பாயே

50. தூயவற்றிற் கெல்லாம் தூய்தா யமைந்தவனே
காயமிதை நம்புமெந்தன் கன்மவினை பொறுப்பாயே

51. கண்ணுக்குத் தோற்றா துளங்கடந்த காவலனே
கண்சாட்சி நம்புபவன் கனபிழைகள் பொறுப்பாயே

52. தன்னிலே தானாய்த் தரித்திருக்கும் தற்பரனே
உன்னை நினையா துறுபிழைகள் பொறுப்பாயே

53. திருமறையா லுலகாளும் திகழ்ஞான பூபதியே
குருவிருந்துங் கொடைசெய்யான் கெடும்பிழைகள் பொறுப்பாயே

54. இணைதுணையே யில்லாத ஏக பரம்பொருளே
மனைவிமக்க ளுடன்வாழ்வோன் வருபிழைகள் பொறுப்பாயே

55. ஊனுறக்க மில்லாத ஒய்யார மானவனே
பேணுதலைக் கைக்கொள்வான் பெரும்பிழைகள் பொறுப்பாயே

56. ஒப்புயர்வே யில்லாத உபகாரி யானவனே
தப்பு மிகப்புரியும் தமியன்பிழை பொறுப்பாயே

57. விட்டிலுக்கு விளக்கேற்றும் வியனறிவு படைத்தவனே
தட்டழியா யான்புரியும் தகுபிழைகள் பொறுப்பாயே

58. உற்றார் உறவினர்கள் ஒருபோது மில்லானே
நற்பேறு வேண்டுபவன் நகுபிழைகள் பொறுப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. படைப்பினங்க ளுக்கொவ்வாப் பரிசுத்த மானவனே
கடைக்கண்ணால் எனைப்பாத்துக் கழிபிழைகள் பொறுத்தாயே

60. என்றுமெங்கும் வியாபிக்கும் இயல்புசுய முள்ளவனே
ஒன்றுமிந்த வாழ்வினிலே உறுபிழைகள் பொறுப்பாயே

61. பெற்றார் பிறந்தார் பேசு எவருமிலாய்
குற்றம் மிகப்புரிவேன் கொள்பிழைகள் பொறுப்பாயே

62. வற்றாத கிருபை வளப்பம் உடையவனே
பற்றாத வினைசெய்த பாவம் பொறுப்பாயே

63. இணையற்ற அன்பை எல்லார்க்குஞ் சொரிபவனே
துணைநில்லான் செய்யும் தொகைபிழைகள் பொறுப்பாயே

64. குறையேது மில்லா தருள்நிறை குணத்தவனே
மறைவாக நான்செய்த மாபிழைகள் பொறுப்பாயே

65. சற்குணத் தோர்க்குமுறை சாந்தி அளிப்பவனே
நாகாவாப் பொய்யன் நவைபிழைகள் பொறுப்பாயே

66. ஆகாத செய்பவர்க்கு அபயம் அளிப்பவனே
நாகாவாப் பொய்யன் நவைபிழைகள் பொறுப்பாயே

67. பிழைபொறுத்துக் கிருபைசெய்யும் பேரருளின் பெருமானே
களையகல வேண்டுமெனைக் காய்பிழைகள் பொறுப்பாயே

68. நிறையறிவு ஞானமிகு தெய்வப் பெயர்த்திருவே
குறையறிவி னாற்செய்த கொடும்பிழைகள் பொறுப்பாயே

69. படைப்பினங்க ளெல்லாம் பயில்நியதி வகுத்தவனே
கடைப்பயல் யான்செய்யும் கழிபிழைகள் பொறுப்பாயே

70. நியதிப்படி யெல்லாம் நிகழச்செய் யாண்டவனே
கயவன்யான் செய்யும் கனபிழைகள் பொறுப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. விடயப் படாதவற்றை மிகவும் அறிந்தவனே
மடமைக் குணமுடையோன் வன்பிழைகள் பொறுப்பாயே

72. பிழைபொறுத்துக் கிருபைசெய்யும் பெருமைக் குணத்தோனே
வினைவஞ்சா தியற்றிவரும் வெய்யபிழைகள் பொறுப்பாயே

73. எப்படியும் தனைவணங்க ஏற்கும் பெருமானே
தப்புமிகச் செய்துவரும் தமியன்பிழை பொறுப்பாயே

74. வேண்டினார் வேண்டுகரம் விலக்கவெட்கும் பெருமானே
ஈண்டுநலம் தனைவிரும்பும் என்பிழைகள் பொறுப்பாயே

75. கல்விக்கு முன்னுரிமை தந்தளிக்குங் காவலனே
வல்வினையாற் சீர்கெடுப்போன் வலியபிழை பொறுப்பாயே.

76. அறிவுநிறை வோருடிந்த அகிலத்தைக் காப்பவனே
சிறியவனின் வறுமையினாற் செய்பிழைகள் பொறுப்பாயே

77. நல்லவர்க்குச் சொந்தமுறக் கிருபை யளிப்பவனே
நல்லவரை யறியாதோன் நாட்டுபிழை பொறுப்பாயே

78. நடுநின்று பார்த்துநன் னீதி யளிப்பவனே
படுமோசஞ் செய்பவரின் பகர்பிழைகள் பொறுப்பாயே

79. அனுதினமுந் தனையடியான் ஐவேளை வணங்கவைத்தோய்
மினுங்குவதை நம்புமெனை மேவுபிழை பொறுப்பாயே

80. மறைவான மறுமைவாழ்வைத் துலங்க வைத்தோய் நானுங்
குறைவான மதியிருந்தோன் கொடுபிழைகள் பொறுப்பாயே

81. புத்திக்குக வாப்பொருள் ஹறாமாய் ஆக்கிவைத்தோய்
சித்தந் துலங்கான்யான் செய்பிழைகள் பொறுப்பாயே

82. நன்நபியைத் தனியழைத்துத் தகும்உரைகள் பகர்ந்தவனே
உன்விருப்பை விழைந்தவனின் ஓதுபிழை பொறுப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. ஆணுமில்லை பெண்ணுமில்லை யலியுமில்லா திருப்பவனே
ஊணுறக்கம் மிகைத்தோனின் உறுபிழைகள் பொறுப்பாயே

84. பல்கலைக் கழகமெனப் பாருலகைப் படைத்தவனே
இல்லையென்பாக் கீயாதோன் இயல்பிழைகள் பொறுப்பாயே

85. வார்த்தையினால் வடிக்கவொணா வல்லபம் படைத்தவனே
மூர்க்ககுணம் படைத்தவனின் முழுப்பிழையும் பொறுப்பாயே

86. இரவலாய்ச் சக்திகளை எவ்வுயிர்க்கு மீந்தவனே
பரவலாய்ப் பேராசை படைத்தோன்பிழை பொறுப்பாயே

87. என்னோ டிருந்து எனக்குவாழ் வளிப்பவனே
உன்னை நிதம்பிணயான் உடையபிழை பொறுப்பாயே

88. படைத்ததுடன் தவறாது பக்குவம் செய்பவனே
கிடைத்தபொழுது துறுகடனைச் செய்யான்பிழை பொறுப்பாயே

89. ஆக்கல் அளித்தல் அழித்தற் குரியவனே
போக்கும் திருநாளில் பொய்த்தபிழை பொறுப்பாயே

90. ஆராய் வாருள்ள மகலா திருப்பவனே
பூராய மில்லான்றன் புரிபிழைகள் பொறுப்பாயே

91. அந்தரத்தில் கைதாங்கி யாதரவு தருபவனே
சொந்தமதி யில்லாதோன் தோஷமெலாம் பொறுப்பாயே

92. சிந்திக்க எண்ணம் சிரமிதயந் தந்தவனே
அந்திசந்தி நினையாதோன் ஆற்றுபிழை பொறுப்பாயே

93. வேறுதெய்வம் கொண்டவர்க்கும் விளைவை யளிப்பவனே
ஊறுசெய்ய அஞ்சாதோன் உறுபிழைகள் பொறுப்பாயே

94. போற்றுமொரு தீர்வை மாற்றி யமைப்பவனே
ஏற்றதனை யேமாற்றும் என்பிழைகள் பொறுப்பாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. எண்ணுவா ரெண்ணமெல்லாம் இயல்பா யறிபவனே
விண்ணாரம் பேசுபவன் வெய்யபிழை பொறுப்பாயே

96. நெருங்குமீ ரிதயங்கள் இணைந்திடச் செய்பவனே
கரங்கால்நா அவைபேணான் கடியபிழை பொறுப்பாயே

97. வையகத்தின் வாழ்வில் வளம்பெருக்கும் வல்லவனே
தையலருக்கு இன்னாமை தரும்பிழைகள் பொறுப்பாயே

98. இருமைவாழ் வென்றும் இனிதா யமைத்தவனே
புரியுமுறை செய்யாதோன் பொருந்துபிழை பொறுப்பாயே

99. நல்லவர்க்குச் சுவனம் நயந்தளிக்கும் அருளாளா
வல்லமைகள் பேசுபவன் வகைபிழைகள் பொறுப்பாயே

100. நாடியோர்க்குத் தரிசனத்தை நல்குமெங்கள் அல்லாஹ்வே
கோடிதவ றாயினும்நான் கொள்ளுபிழை பொறுப்பாயே.

– முற்றும் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 955-8806-09-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org